# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

அக்டோபர்-நவம்பர் 2008

விலை ரூ.20/-


பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா 1909 - 2009







சென்னையில், மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தினார். (28.11.2008)





கடலூர், திருவாரூர் மாவட்டங்களில்
மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை
அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மீட்புப் பணிகளை விரைவுபடுத்தி, பாதிக்கப்பட்ட
மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகளை வழங்கினார்.
(28 & 29.11.2008)





# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039
புரட்டாசி-ஐப்பசி - கார்த்திகை
அக்டோபர்-நவம்பர் 2008
மலர் : 40 இதழ் : 4 & 5

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா. இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்**, உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம்: www.tn.gov.in




**கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு**

ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து, அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



## இந்த இதழில்...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


- ஐம்பது ரூபாய்க்கு பத்து மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம் ........ 2
- மதநல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் தமிழகம் எப்போதும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது ........ 5
- அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் அளப்பரிய செயல்பாடுகள் ........ 16
- ரூ.750 கோடி செலவில் 4ஆவது கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு முடிவு ........ 28
- மகளிர் சுயஉதவிக் குழுவினர் திறமையாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுகிறார்கள் ........ 30


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


- இதுவரை 60 இலட்சத்து 63 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டு 3,78,564 சுயஉதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன ........ 35
- பெருமழையால் பாதிக்கப்பட்ட தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களுக்கு நேரில் சென்று நிவாரண உதவி ........ 46
- இந்தியாவிலேயே மகளிர் சுயஉதவிக்குழுக்களின் செயல்பாடுகள் தமிழகத்தில் முதலிடத்தில் உள்ளன ........ 60


**முதலாம் அட்டை**

உத்தமர் காந்தியடிகளின் 140ஆவது பிறந்தநாளன்று, சென்னையில் அவரது திருவுருவச்சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த உத்தமர் காந்தியடிகளின் திருவுருவப் படத்திற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் (2.10.2008)

**நான்காம் அட்டை**

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், நியாயவிலைக் கடைகளில் 50ரூபாய்க்கு மானிய விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தினை, தலைமைச் செயலகத்தில், 2.10.2008 அன்று தொடங்கிவைத்தார்.

# ஐம்பது ரூபாய்க்கு
# பத்து மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம்

## மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

## தொடங்கி வைத்தார்



**த**மிழக அரசின் புதிய மக்கள் நலத் திட்டமான, ஐம்பது ரூபாய்க்கு மானிய விலையில் பத்து மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளான 02.10.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:–

இன்றைய விழா நம்முடைய மக்கள் ஒவ்வொரு இல்லத்தோடும் தொடர்புடைய ஒரு தூய விழாவாகும். இந்த விழாவை தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். இந்த நாள் உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள். இந்த நாளில் பேறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவையொட்டி நாம் தமிழகத்திலே நடத்திக் கொண்டி ருக்கின்ற மக்கள் தொடர்புடைய செயல்கள் பலவற்றோடு இந்த இனிய செயலையும் இணைத்து கொண்டாடுகின்றோம்.

ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், அந்த மக்களுக்குப் பாடுபடுவதும், பணியாற்றுவதும் ஒரு அரசின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தவறியோ, நிறைவேற்ற இயலாது என்று ஒதுங்கியோ இருப்பது மக்களிடத்திலே வாக்குகளைப் பெற்று அவர்களுக்காக அரசு நடத்துகிறோம் என்று உறுதி எடுத்துக் கொண்டவர்களுக்கு அழகல்ல. எனவேதான், ஒரு ஆட்சிக்கு அழகு இது என்பதை அறிந்து தெளிந்து அவ்வாறு செயல்படுகின்ற முறையிலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் சாதாரண, சாமான்ய மக்களுக்காக, விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, வணிகப் பெருமக்களுக்காக, சிறுபான்மைச் சமுதாய மக்களுக்காக, அரசின் சார்பில் ஆற்றியுள்ள கடமைகளை யெல்லாம் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அது தொடர்கிறது, மேலும் தொடரும் என்பதற்கு அடையாளம்தான் இந்த விழா என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

### எங்கள் ஆசை

இந்த விழாவிலே நம்முடைய தலைமைச் செயலாளர் ஸ்ரீபதி அவர்கள் பேசும்போது இது எந்த அளவிற்கு நம்முடைய உள்ளத்திலே இடம்பெற்று விட்டது என்பதை

எடுத்துக் காட்டுகின்ற வகையிலும், இந்த விழாவின் காரணமாக ஸ்ரீபதி அவர்களுடைய தமிழ் ஆற்றலே மிகுந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையிலும் இந்த விழா அமைந்துள்ளது. பத்துப் பொருளை வைத்து அவர் இங்கே ஒரு இனிய செய்தியைச் சொன்னார். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்ற பழமொழியை அவர் இங்கே நினைவூட்டினார் என்றாலுங்கூட, இந்தப் பத்தும் மக்களிடம் பறந்து போக வேண்டுமென்பது எங்கள் ஆசை. இது பறந்து போகாதா என்று வேறு சிலர் வேறு நோக்கத்துடன் தொலை தூரத்திலேயிருந்து ஆசைப்படுகிறார்கள். அது பறந்து போகாது, நிச்சயமாக இந்தப் பத்தும் சிறந்து விளங்கும், தமிழ்நாட்டு மக்களுடைய இல்லங்களில்; என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்பு கிறேன்.

இந்தத் திட்டத்தை நம்முடைய உணவுத்துறை அமைச்சர் தம்பி வேலு அவர்களுடைய ஒத்துழைப் போடும், மாநில அரசினுடைய செயலாளர்கள், குறிப்பாக தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், உணவுத் துறைச் செயலாளர் – அந்தத் துறைகளிலே உள்ள செயலாளர்கள், அதிகாரிகள், அலுவலாளர்கள் ஒத்துழைப்போடு இதை நாம் தொடங்கி யிருக்கிறோம். இந்தத் தொடக்கம், அடக்கத்தோடு ஆரம்பமாகி யிருக்கிறது. ஏனென்றால் இதைப் பெரிய ஆர்ப்பாட்டமாக நடத்த நாங்கள் விரும்பவில்லை என்பதற்கு அடையாளம்தான் இந்தக் கோட்டை வளாகத்திற் குள்ளேயே சிறிய அளவில் பந்தலிட்டு, பெருமளவிற்கு இங்கே மக்கள் வரவேண்டுமென்று விரும்பாமல் ஒரு அடையாள பூர்வமாக இன்றைக்கு இதை ஆரம்பித்து வைக்கிறோம். ஏடுகள் வாயிலாக நாட்டிற்கு இது தெரியப்படுத்தப்படும். நாட்டு மக்கள் இதன் பயனைத் தொடர்ந்து அடைய வேண்டுமென்ற அந்த நிலையிலே தான் இன்றைக்கு ஆடம்பரமில்லாமல், ஆரவாரம் இல்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல் இந்த நிகழ்ச்சியை நாம் தொடங்கியிருக்கிறோம்.

**வெற்றிகரமாக நடைபெற்று வரும் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டம்**

முதலில் ஒன்றை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மக்களுக்கு இன்றியமையாத மிக முக்கியமான தேவையான உணவில் மூலப் பொருளாக இருக்கின்ற அரிசியை குறைந்த விலைக்குத் தர வேண்டுமென்று எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள். அதனால் தான் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வருவேன் என்று அறிவித்தார்கள். சென்னை, கோவை நகரங்களில் கொண்டு வந்தார்கள், ஆனால் நீண்ட காலம் அதை நடத்த முடியாமல், ஓரிரு மாதங்களில் அந்தத் திட்டத்தை அரசு கைவிட நேர்ந்தது. அதற்குக் காரணம் அன்றையதினம் இருந்த நாட்டின் பொருளாதாரம், விளைச்சல், உணவுப் பெருக்கம் இவைகளின் காரணமாக அதற்குமேல் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலவில்லை.

இப்போது வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வாய்ப்பும் நல்ல முறையிலே உருவாகியிருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால்; மக்களுக்கு என்ன வாக்குறுதி அளித்தோமோ, அதை நிறைவேற்ற முடியாத நிலைக்கு ஆளாகி விடுவோம், ஆகவே அந்த வாக்கினை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் படி அரிசி திட்டம் அண்ணா அவர்களின் கனவாக இருந்தாலும், அதை நிறைவேற்ற முடியாமல் இடையிலே தொய்வு ஏற்பட்டாலும், அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம், அந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்கி தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்று சூளுரைத்து, கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று அறிவித்து, அது வெற்றிகரமாக இன்றைக்கு நடைபெற்று வருகின்றது.



## அண்ணாவின் பொன்மொழி

### கலை

கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு. அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.

## உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி முதல் 50 ரூபாய்க்கு வழங்கப்படும் 10 மளிகைப் பொருட்கள்

- 250 கிராம் மிளகாய்த் தூள்
- 50 கிராம் மஞ்சள் தூள்
- 250 கிராம் மல்லித் தூள்
- 75 கிராம் கடலைப் பருப்பு
- 25 கிராம் வெந்தயம்
- 25 கிராம் கடுகு
- 25 கிராம் சோம்பு
- 25 கிராம் மிளகு
- 25 கிராம் சீரகம்
- 10 கிராம் பட்டை/ இலவங்கம்

நம்மைப் பொறுத்தவரையில் அது வெற்றிகரமாக நடை பெறுகிறது. அதை வாங்கிப் புசிக்கின்ற மக்களைப் பொறுத்த வரையிலே வெற்றிகரமாக நடை பெற்று வருகிறது. தொலைவிலே இருந்து பார்ப்பவர்களைப் பொறுத்தவரையில் அய்யோ, இவர்கள் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றி அதிலே வெற்றிகண்டு விடுவார் களேயானால், நாளைக்கு நாம் என்ன ஆவது, என்ற அந்தக் கேள்விக்குறிக்கு தங்களை ஆளாக்கிக் கொண்டவர்கள்தான் இதைப் பற்றி இது ஒரு திட்டமா என்றெல்லாம் கேட்கிறார்கள். நேற்று வரையில் மலிவான விலையில் அரிசி கிடைக்க வேண்டுமென்று சொன்னவர்கள், இன்றைக்கு மலிவான விலையில் அரிசியை நாம் தரும்போது, அரிசி மாத்திரம் கொடுத்தால் போதுமா என்று கேட்கின்றார்கள்.

**மலிவு விலை!**

அதனால்தான் பத்துப் பொருட்களை ஒரு பையிலே வைத்து, ஐம்பது ரூபாய் விலைக்கு வெளிச்சந்தையிலே வாங்கினால், வெளியிலே கடைகளிலே வாங்கினால் 70 ரூபாய், 80 ரூபாய் என்றளவிற்கு விற்கக் கூடிய அந்தப் பொருட்களை 50 ரூபாய் விலைக்கு இன்றைக்குத் தருகின்ற மலிவு விலை மளிகைப் பொருட்கள் என்ற நிலையில் அவைகளை இன்றைக்கு நாம் தர முன் வந்திருக்கிறோம். இதையும் குறை சொல்வார்கள், குறை சொல்லா விட்டால் அது எதிர்க்கட்சி அல்ல, குறை சொன்னால் தான் எதிர்க்கட்சியாக இருக்க முடியும் என்ற அந்த எண்ணத்தோடு அவர்கள் செயல்படுகிறார்கள். நான் அவர்களை குற்றஞ்சாட்டமாட்டேன். அவர்கள் எந்தக் கட்சி, எந்த லேபிள், எந்த சின்னத்தில் அவர்கள் இன்றைக்கு விளம்பரப்படுத்தப்படுகிறார்களோ, அந்தக் கட்சியின் கடமைகளை அவர்கள் செய்கிறார்களே அல்லாமல் என் மீது அவர்களுக்கு கோபம், அல்லது இந்த அரசு மீது அவர்களுக்கு ஆத்திரம், இந்தக் காரியங்களைக் கண்டு அவர்களுக்கு பொறாமை, ஆகவே இப்படியெல்லாம் செய்கிறார் கள் என்று நான் சொல்ல மாட்டேன். இது கூடச் சொல்லாமல் அவர்கள் வேறென்னதான் செய்வார்கள் என்கின்ற அனுதாபத்தோடு நான் அவர்களையெல்லாம் காணு கின்றேன்.

அவர்கள் பேசப் பேச எதிர்க்க எதிர்க்க அவர்கள் விமர்சிக்க விமர்சிக்க நாம் ஏதாவது குறை இருந்தால் அதையும் திருத்திக் கொண்டு, தவறிருந்தால் அந்தத் தவறுகளைப் போக்கிக் கொண்டு இந்தத் திட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கு அவர்கள் சொன்ன யோசனைகளாக அவைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன். மானிய விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கும் இந்தத் திட்டத்தின் தொடக்க விழாவிலே வந்திருந்து சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் வாழ்த்தையும் வழங்கி இந்த அளவில் விடைபெறுகிறேன்.

★ ★ ★

# மதநல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் தமிழகம் எப்போதும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் உரை




புதுடெல்லியில், 13.10.2008 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் ஆங்கில உரையை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் படித்தார். அந்த ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:–

தற்போதைய இக்கட்டான தருணத்தில் மாற்றி அமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மதச்சார்பற்ற தன்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் மத மோதல்கள் பற்றிய செய்திகளின் பின்னணியில், மாற்றி அமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தைக் கூட்டியிருப்பது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

**மதநல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் முனைப்புடன் திகழும் தமிழகம்**

தீய நோக்கம் கொண்டதும், தூண்டி விடப்பட்டதுமான வகுப்புவாத வன்முறை மத அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் மோசமான அச்சுறுத்தலாக இருப்பதோடன்றி, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தையும்

பாதிக்கின்றது. இன்று நாம் நடத்தும் விவாதங்கள், இந்த மாபெரும் தேசம் சந்தித்து வரும் சவால்களைத் திடமாகச் சந்திக்க மத்திய, மாநில அளவில் எடுக்கும் நமது அரசுகளின் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு உதவும் வகையில் நேர்மையான முடிவுகளை எடுக்க நிச்சயமாகப் பயன்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சிறுபான்மையினர் மற்றும் ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற செயல்துடிப்பு மிக்க நடவடிக்கைகளை எடுத்து, மாநிலத்தில் மத நல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் தமிழ்நாடு எப்போதுமே முனைப்பாக இருந்து வருகிறது. எங்களது மாநில அரசு சிறுபான்மையினருக்கான தனியானதொரு இயக்ககத்தை ஏற்படுத்தி, சிறுபான்மை சமுதாயத் தினரின் மேம்பாட்டுக்காக பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி அவை நிறைவேற்றப்படுவதை மேற்பார்வையிட்டு வருகிறது.

கல்வி உதவித் தொகைகள் மற்றும் கல்விக் கடன் திட்டங்கள் அறிமுகம், சுய வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொள்ள திறமை வளர்ப்புப் பயிற்சி அளித்தல், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் போன்றவற்றின் மூலம் குறைந்த வட்டிக்குக் கடன்கள் அளித்தல் போன்றவை மாநிலத்திலுள்ள சிறுபான்மை சமுதாயத்தினரின் நல்வாழ்வுக்காக மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு சில நடவடிக்கை களாகும்.

நாங்கள் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமுதாயங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு தனியானதொரு இட ஒதுக்கீட்டை அறிமுகப் படுத்தியுள்ளோம். சிறுபான்மைச் சமுதாயத்தினரின் குறைகளைக் கவனிக்கவும் அவர்களது பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை கூறவும் சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சி ஆணையம் ஒன்றையும் நாங்கள் அமைத்துள்ளோம்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு சமமான போட்டித் தளத்தை உறுதி செய்வதற்கு மத்தியப் பணிகளிலும், மத்தியக் கல்வி நிலையங்களிலும் 'பொருளாதார ரீதியில் முன்னேறியவர்கள்' (கிரீமிலேயர்) என்று கூறப்படும் பிரிவினரை எந்த விதத்திலும் விலக்கி வைக்காத வகையில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

எமது அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட தொழிற் கொள்கையும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் கொள்கையும், மூலதன மானியம், வேலை வாய்ப்பு மானியம் மற்றும் மின் கட்டண மானியம் உள்ளிட்ட கவர்ச்சிகரமான சலுகைத் திட்டங்களை அளிப்பதன் மூலம், அனைத்துப் பகுதிகளும் குறிப்பாக மாநிலத்தின் 251 பின்தங்கிய வட்டங்களின் சமமான வளர்ச்சிக்கும், தொழில் மயமாக்கலுக்கும் அழுத்தம் அளிக்கின்றன.

சிறு, குறு, நடுத்தர தொழில் துறையில், மகளிர் தொழில் முனைவோருக்கும், ஊனமுற்றோர் உட்பட சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கும் சிறப்பு மூலதன மானியம் வழங்கப்படுகிறது.

வேலை வாய்ப்புகளை உருவாக்க மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொழில் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஆகியவற்றைத் தொடங்க மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**சிறுபான்மை – அடித்தட்டு மக்கள் உயர்வுக்கு பல்வேறு திட்டங்கள்**

இது தவிர, நியாயவிலைக் கடைகள் மூலமாக ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, மானிய விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம், ஏழை எளிய குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் எரிவாயு அடுப்புகள் ஆகியவற்றை வழங்குதல், அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுதல், சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்கள் வழங்குதல் போன்ற சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றியும், சிறுபான்மையினர் மற்றும் அடித்தட்டு ஏழை எளிய பிரிவினரின் உயர்வுக்காக சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியும் மக்களின் அனைத்து வகுப்பினரின் சமமான வளர்ச்சியினை மாநில அரசு உறுதி செய்கிறது.

மாநிலக் காவல் துறையையும், உளவு அமைப்புகளையும், துடிப்புடன் செயலாக்கி அதன் மூலம் அடிப்படைவாத மற்றும் சாதிய அமைப்புகளின் நடவடிக்கைகள் கூர்மையாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் மதநல்லிணக்கத்தைப் பராமரிக்கத் தேவையான இடங்களில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் மோதல்கள் ஏற்படக்கூடிய பகுதிகளில் அமைதிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, பல்வேறு மதங்கள், சாதிகளைச் சேர்ந்த மக்களிடையே எந்தவிதமான மோதல்

சூழ்நிலை ஏற்பட்டாலும் அவற்றைத் தணிக்க இந்த அமைதிக் குழுக்களின் சேவை பயன்படுத்தப் படுகிறது.

**நிறைவேற்றப்பட வேண்டிய சில அமலாக்கத் திட்டங்கள்**

சாதித் தலைவர்களின் சிலைகளை சேதப்படுத்தியும், சிறுமைப்படுத்தியும் அதன்மூலம் சாதிய மோதல்களைத் தூண்டிவிட முயலும் நபர்களை கைது செய்ய உதவும் வகையில் தடுப்புக் காவல் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.



## அண்ணாவின் பொன்மொழி

**நல்லகாலம்!**

இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சி யினராயினும் எம்மதத்தினராயினும் எக் கொள்கையினராயினும் செய்கிற தொண்டு தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பயன்படுகிற தென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக் கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான்; பாராட்டுகிறான்; பரிசளிக்கிறான். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக்காட்டு!

நாட்டின் ஒரு சில பகுதிகளில் தீவிரவாத சக்திகள் பொது அமைதியைப் பராமரிப்பதற்கு அச்சுறுத்தலை உருவாக்கி, அரசியல் சட்ட ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் ஆணைகளுக்கு சவாலாகவும் விளங்கி வருகின்றன. மத்திய மற்றும் மாநில உளவு அமைப்புகளை வலுப்படுத்துதல், மாநிலக் காவல் படைகளுடன் தீவிரமான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல், பாதிக்கப்பட்ட மாநிலங்களில் தீவிரவாத மற்றும் பயங்கரவாத சக்திகளை சமாளிக்க தனியாக சிறப்புப் பயிற்சி பெற்ற காவல் படைகளை உருவாக்குதல், அவைகளுக்கு நவீன ஆயுதங்கள், பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல், கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாநில கூட்டுக் காவல் படைகளை அமைத்தல், மத்திய காவல் படைகள் மற்றும் இராணுவப் படைகளின் பயிற்சி மையங்கள், நவீன உக்திகளைக் கையாள வெளிநாட்டு பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் மாநில காவல்துறைக்கு பயிற்சி அளித்தல் – ஆகியவை நிறைவேற்றப்பட வேண்டிய சில அமலாக்கத் திட்டங்களாகும்.

தீய சக்திகளின் ஊடுருவலையும், கள்ளக் கடத்தலையும் தடுக்கவும், அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளை தளமாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்கவும் ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேலுள்ள நீளமான கடற்கரையில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடற்கரையை கவனித்துக் கொள்ள ஆயுதக் காவல்படையின் ஒரு குழுவை (பட்டாலியனை) ஏற்படுத்திவிட்டு கடற்கரையோரம் முழுவதும் தொடர்ச்சியான சோதனைச் சாவடிகள் (செக் – போஸ்ட்டுகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**பன்னாட்டு எல்லைப் பாதுகாப்பு மாநில அரசுக்கு நிதி உதவி**

இந்த ஏற்பாடு இல்லாவிட்டால், பன்னாட்டு எல்லையைப் பாதுகாக்கும் பொறுப்புடைய மத்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தச் செலவினங்களை மாநில அரசு செய்து வருகிறது. அதைத் திருப்பித் தருமாறு கேட்டால், எங்களது வேண்டுகோள்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து போதுமான பதில் இல்லை. இது தேசத்தின் நலனைப் பாதுகாத்து, பன்னாட்டு எல்லைக் கோட்டையும் பாதுகாத்து வருவதால் மாநில அரசுக்கு இந்த உதவி முக்கியமானதாகும்.

தீவிரவாத பாதிப்புக்கு ஆளாகக் கூடிய மாவட்டங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்க வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல், பின்தங்கிய மாவட்டங்களில் கல்வியின்மையை களைதல், தற்போதுள்ள நலத்திட்டங்களை தீவிரமாக நடைமுறைப் படுத்துவதற்கு அரசின் பல்வேறு அமைப்புகளுக் கிடையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல், கிராமப்புற கண்காணிப்பு முறையை வலுப்படுத்துதல் ஆகியவை மாவட்ட நிருவாகங்களில் முனைப்புடன் செலுத்தப் படவுள்ள சில நடவடிக்கைகளாகும்.

இத்தகைய மாவட்டங்களுக்குக் குறிப்பாகப் பொருந்தும் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் எந்தவிதமான மத்திய உதவியுமின்றி தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேலும், இந்தப் பகுதிகளில் எந்தவிதமான தீவிரவாதமும் ஊடுருவி செயல்படுவதைத் தடுக்க பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் சிறப்புக் காவல் படைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

வாக்குறுதிகள் இருந்த போதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இது கவலை அளிப்பதுடன், இலங்கை எல்லையிலுள்ள தமிழ்நாடு கடற்கரையில் வாழும் மீனவ சமுதாயத்தினரின் போராட்டங்களுக்கும் காரணமாக உள்ளது.

தீர்வு காணப்படாத மாநிலங்களுக்கிடையிலான நதிநீர்ச் சிக்கல், நாட்டின் சில பகுதிகளில் நடைபெறும் பிராந்திய வெறிப் போக்குகளும், போராட்டங்களும் தேசத்தின் ஒருங்கிணைப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிராகச் செயல்படுகின்றன. இந்த நீண்ட காலப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வுகள் காண தேசிய அளவில் நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படாத விட்டால், இந்தச் சிக்கல்கள் காலப்போக்கில் தேசத்தின் நலன்களுக்குப் பாதகமாக அமையும்.

மாநிலங்களுக்கிடையிலான நதிகளை நாட்டுடைமையாக்குதல், தேசிய நதி நீர் ஆணையத்தை அமைத்து மாநிலங்களுக்கு இடையிலான நதிகளை இணைத்தல், மாநிலங்களுக்கு இடையிலான குழுக்களை அமைத்து நிலுவையிலுள்ள சிக்கல்களுக்கு சுமுகமான தீர்வு காணுதல் ஆகியவை, மாநிலங்களுக்கு இடையில் நல்ல உறவைப் பராமரிக்க தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவினால் ஆலோசிக்கப்பட வேண்டிய சில நடவடிக்கைகளாகும்.

மதநல்லிணக்கத்தையும், சமமான முறையில் துறை மற்றும் பகுதி வளர்ச்சியையும் உறுதி செய்து, பொது அமைதியையும், உள்நாட்டுப் பாதுகாப்பையும் அடைய தேசிய ஒருமைப்பாட்டுக் குழு வலுவான தீர்மானகரமான ஒரு அமைப்பாக மாற வேண்டும் என்பது எங்களது நம்பிக்கையும், விருப்பமுமாகும்.

நமது நாட்டிற்கு பல்வேறு இனங்கள், மதங்கள், கலாச்சாரங்கள், மொழிகள் ஆகியவை ஒருங்கிணைந்த நிலையில் உள்ளன. இந்தப் பன்முகம் நமது வலிமையே தவிர வலுவின்மை அல்ல. பல்வேறு மக்கட் பிரிவினர் வளர்ந்து செழிக்க விரும்பும் ஆவலை நாம் ஆதரிக்க வேண்டும். இந்த முக்கியமான தருணத்தில் நமது தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு ஏற்படும் எந்தவிதமான அச்சுறுத்தலையும் சந்தித்து வென்றிட, கூட்டான உறுதியை உருவாக்க எங்களது ஆதரவும், கடப்பாடும் உண்டு என நான் உறுதி அளிக்கிறேன்.

★ ★ ★

## அண்ணாவின் பொன்மொழி

**இசைத் தமிழே!**



சேர நன்னாட்டின் மங்கையர் வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத் தமிழில்தான் பாடினார்கள்.

பாண்டியனின் குமாரிகளுக்கு பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான்.


கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில் கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது தமிழில்தான்!

# முதலீடுகள் வந்தடையும் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது

**செ**ன்னையை அடுத்த திருப்பெரும்புதூரில், 16.10.2008 அன்று, நோக்கியா–சீமென்ஸ் நெட்ஒர்க்ஸ் தொழிற்சாலையில் உற்பத்தியைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

நோக்கியா–சீமென்ஸ் கம்பெனியின் உற்பத்தி ஆலையைத் துவக்கி வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் தொழிற்சாலையை மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடித்ததற்காக நோக்கியா–சீமென்ஸ் குழுவினரை நான் பாராட்டுகிறேன்.




இந்தத் திட்டத்திற்கான நிலம் சிப்காட் நிறுவனத்தால் 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வழங்கப்பட்டது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் எங்களது அரசால் 2008 ஜுன் மாதம் 26ஆம் தேதியன்று கையெழுத்திடப்பட்டது. இன்று இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கிவைக்க நாம் அனைவரும் கூடியுள்ளோம்.

இந்தியாவில், தமிழ்நாடு முதலீடுகள் வந்தடையும் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. உலகின் முன்னணி நிறுவனங்கள் பல தமிழகத்தைத் தங்களது உற்பத்தித் தளமாக ஆக்கியுள்ளன. சமீப காலங்களில், தமிழ்நாடு மோட்டார் தொழில் மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்தித் தளமாக உருவாகி வருகிறது.

இந்தியா அதிவேகமாக வளர்ந்து வருகிறது. கைபேசித்துறை இந்த வளர்ச்சியில் முன்னணி வகிக்கிறது. தற்போது முப்பது கோடிக்கும் அதிகமான கைபேசி சந்தாதாரர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் 90 இலட்சம் கூடி வருகிறது, இந்த வளர்ச்சி இத்துறையில் சாதனங்களை வழங்கும் தொழில்களுக்குப் பெரும் வாய்ப்பை அளிக்கிறது.

கைபேசிகள் உற்பத்தியில் முன்னணி நிறுவனங்களான மோடோரோலா, நோக்கியா ஆகியவை தமிழ்நாட்டில் ஏற்கெனவே அவற்றின் தொழிற் சாலைகளை நிறுவிவிட்டன. இங்கு நோக்கியா–சீமென்ஸ் ஆலை நிறுவப்படுவதுடன், தொலைத்தொடர்பு உற்பத்தித் தொழில் எங்களது மாநிலத்தில் ஒருங்கிணைகிறது.

தொழில்நுட்பம் அடிப்படையிலான தொழில்களை நிறுவுவதற்கு தமிழ்நாடு மிகவும் சாதகமான சூழ்நிலையை அளிக்கிறது. இத்தகைய தொழில்களின் வளர்ச்சிக்கு மிகப் பெருமளவிலான திறமையான மனித சக்தி அடித்தளத்தை அளிக்கிறது. மாநிலம் முழுவதுமுள்ள தொழில் கல்வி நிலையங்கள் தரமான மனித சக்தியை அளிக்கின்றன. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வியை அளித்து அடிப்படைக் கல்வியையும் தொழில் நுட்ப நட்பானதாக எங்களது அரசு ஆக்கியுள்ளது. அமைதியான தொழில் சூழல் மற்றும் நல்ல முறையில் பராமரிக்கப்படும் சட்டம் ஒழுங்கு நிலைமை ஆகியவை கூடுதலான சாதகங்களாகும்.

**புதிய வளர்ச்சி மையங்கள்**

10 ஆண்டுகளுக்கு முன்பு எங்களது அரசால் திருப்பெரும்புதூரில் தொழில் வளர்ச்சிக்கான விதைகள் விதைக்கப்பட்டன. இன்று திருப்பெரும்புதூர் பகுதி மோட்டார் மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்தியில்

உலகத் தலைமை பெற்று வளர்ந்துள்ளது. எங்களது மாநிலத்தில் இப்பகுதி முற்றிலுமாக மாற்றப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பெருகிவரும் போக்குவரத்தைச் சமாளிக்க, நாங்கள் திருப்பெரும்புதூர் – சிங்கப்பெருமாள் கோவில் சாலை மற்றும் வண்டலூர் – வாலாஜாபாத் சாலை ஆகியவற்றை நான்கு வழி மற்றும் ஆறுவழிச் சாலைகளாக மாற்றத் தொடங்கியுள்ளோம்.

தற்போது எங்களது அரசு தொழில் மயமாக்கல் முறையை மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு, குறிப்பாக மாநிலத்தின் தென் பகுதிகளுக்கு கொண்டு செல்கிறது.

இதற்காக, தென் மாவட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு ஊக்க சலுகைகள் அடங்கிய சிறப்புத் திட்டத்தை அளிக்க புதிய கொள்கை ஒன்றை நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

இந்தக் கொள்கை தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கிட பெருமளவிற்கு உதவும்.

சென்னைப் பகுதி மற்றும் கோவை, ஈரோடு பகுதிகள் ஆகியவை தவிர, எங்களது மாநிலத்தில் கடலூர், திருச்சி, திருநெல்வேலி – தூத்துக்குடி ஆகியவையும் புதிய வளர்ச்சி மையங்களாக உருவாகி வருகின்றன என்பதைப் புதிய முதலீட்டுத் திட்டங்கள் காட்டுகின்றன.

இந்த வளர்ச்சி மையங்களால் சுற்றுப்புற மாவட்டங்களும் வளர்ச்சி கண்டு, இவ்வாறு தமிழகம் முழுவதும் தொழில் மயமாக்கலின் பலன்களால் பயனடைகின்றன.

தொழில் மயமாக்கலின் முக்கியமான பலன்களில் ஒன்று வேலைவாய்ப்பு ஆகும். இதைக் கருத்தில் கொண்டு, எங்களது அரசு தற்போது மிக அதிகமான வேலைவாய்ப்பு வழங்கும் தொழில்களில் முதலீட்டுக்கு ஊக்கமளித்து வருகிறது. இந்த இலக்கை அடைவதற்காக, முதலீடுகளின் மேல் எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்காமல், அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்களுக்கு சிறப்பு ஊக்க சலுகைத் திட்டம் ஒன்றை வழங்கும் ஒரு கொள்கையைக் கொண்டு வருகிறோம். இந்த முன் முயற்சி எங்களது இளைஞர்களுக்கு மேலும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவும் என்று நம்புகிறோம்.

எங்களது அரசின் முதலீட்டாளர் நட்பு அணுகுமுறையாலும், வெளிப்படையான செயல்பாட்டாலும் பல்வேறு முதலீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு ஈர்க்கப்பட்டு வருகின்றன.

**“ எங்களது அரசின் முதலீட்டாளர் நட்பு அணுகுமுறையாலும், வெளிப்படையான செயல்பாட்டாலும் பல்வேறு முதலீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு ஈர்க்கப்பட்டு வருகின்றன. ”**

2008 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து புதிய தொழில்களைத் தொடங்க எங்களது அரசு 21 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பம் இட்டுள்ளது. இந்தத் தொழில் திட்டங்களில் மொத்த முதலீடு 31 ஆயிரத்து 300 கோடி ரூபாய் ஆகும். இவை ஒரு இலட்சத்து 93 ஆயிரம் வேலைவாய்ப்புகளை வழங்கும்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் வெறுமனே கையெழுத்திடுவதால் மட்டும் நானும் திருப்தி அடைந்து விடுவதில்லை. இந்தத் தொழில் திட்டங்களில் முன்னேற்றம் குறித்து தொழில்துறைச் செயலாளரிடம் அடிக்கடி விசாரிப்பேன். திட்டம் தொடங்கப்படுவதற்குத் தயார் என்று அவர் கூறும்போதுதான் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நோக்கியா – சீமென்ஸ் விரைவில் உற்பத்தியைத் தொடங்கத் தயாராக இருக்கிறது என்றும் 500 பேருக்கு அது வேலைவாய்ப்பு தரும் என்றும் அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வேலை வாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கு நோக்கியா – சீமென்ஸ் நிருவாகம் முன்னுரிமை அளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுவினருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நோக்கியா – சீமென்ஸ் இந்தியாவில் கைபேசித் தொழில் வளர்ச்சியோடு இணைந்து வளர்ந்து சேவை நிறுவனங்கள் அனைத்திற்கும் முன்னணி விநியோக நிறுவனமாக மாறும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

❖ ❖ ❖




# சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் தமிழகத்தில் மேலும் வளம் பெருகும்

சென்னை, விமானநிலையத்தின் எதிரே கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தை 19.10.2008 அன்று திறந்து வைத்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை

இன்று இந்த விழா ஒரு நல்ல வகுப்பு நடத்துவதைப் போல நம்முடைய தம்பி டி.ஆர்.பாலு அவர்களால் வெகு சிறப்பாக நடத்தப்பட்டிருக்கின்றது. அவர் இங்கே பேசும்போது அடுத்து யார் வருகிறார்களோ அவர்கள் செய்வார்கள், அவர்கள் செய்யத் தயங்கினால், நாங்கள் வலியுறுத்தி அவற்றை முடித்து வைப்போம் என்கிற நம்பிக்கையை உங்களுக்கெல்லாம் இந்த விழாவிலே வழங்கினார். அத்தகைய நம்பிக்கையோடு, அவர் இங்கே ஆற்றிய உரையில் பல தொழில்நுட்பங்களை மத்திய, மாநில அரசுகளின் ஒற்றுமையை – அந்த ஒற்றுமையின் காரணமாக உருவாகி வருகின்ற திட்டங்களின் மேன்மையை அந்தத் திட்டங்களால் தமிழ் மக்கள், இந்திய மக்கள் அடைகின்ற பயன்களை எல்லாம் விரித்துரைத்திருக்கிறார்.

அவர் பேசும்போது நான் எண்ணிக்கொண்டேன். என்னை விழாவுக்கு வந்து, மேம்பாலத்தைத் திறந்து வைத்து, அதைப் பற்றி பேசச் சொல்லிவிட்டு அவரே நமக்கெல்லாம் ஒரு வகுப்பு நடத்தியிருக்கிறாரோ, என்று எண்ணி வியப்பும் அடைந்தேன். மகிழ்ச்சியும் அடைந்தேன். ஏனென்றால் பல அமைச்சர்களுக்கு இன்ன துறைக்கு இவர் அமைச்சர் என்று அழைக்கப்படுகின்ற பட்டம் உண்டு.

நம்முடைய அமைச்சர் தம்பி பாலு அவர்கள் அந்தப் பட்டத்தைப் பெற்றவர் மாத்திரமல்ல. இந்தத் துறையின் அமைச்சர் என்று சொல்லப்படுகிறவர் மாத்திரமல்ல, அந்தத் துறையைப் பற்றி ஆதியோடு அந்தமாக அனைத்தையும் புள்ளி விவரங்களோடு தெரிந்து வைத்திருக்கின்ற ஒரு அமைச்சர் என்பதை தக்க நேரத்திலே இதுபோன்ற விழாக்களிலே அவர் சொல்லக் கேட்டு, நான் மகிழ்ச்சி அடைந்து வருகின்றேன்.

"தம்பி உடையான், படைக்கு அஞ்சான்" என்ற மொழிக்கேற்ப இந்தத் தம்பியை நான் பெற்றிருப்பது உள்ளபடியே இதுபோன்ற திட்டகளை நிறைவேற்றி மக்களை மகிழ்ச்சிக் கடலிலே ஆற்றி அவர்களுடைய தேவைகளை உணர்ந்து, சேவைகளைச் செய்து, தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளக்கூடிய தம்பியாகத் திகழ்வார் என்ற நம்பிக்கை வீண்போகவில்லை.

அவர் இங்கே ஆற்றிய உரை, இந்தியாவிலே இன்றைக்கு நடைபெறுகின்ற – மன்மோகன் சிங் அவர்களை பிரதமராகக் கொண்டும், திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களை ஆலோசகராக வழிகாட்டியாகக் கொண்டும், நடைபெறுகின்ற இந்தியப் பேரரசு, மத்திய அரசு தமிழகத்தை எந்த அளவிற்கு சீராட்டி, பாராட்டி வாழ வைக்கின்ற அரசாக விளங்குகிறது என்பதற்கான புள்ளி விவரங்களையும், அதற்காக எவ்வளவு பணத்தைச் செலவழிக்கவும் தயாராக மத்தியிலே உள்ள அரசு இருக்கிறது என்பதையும் அவர் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இன்னொன்றும் சொன்னார் – இந்த அரசில் நடைபெறுகின்ற காரியங்களுக்கு நானும் ஒரு காரணம் என்றார். அந்தக் காரணம் சரியா தவறா என்பதைவிட, நான் எப்படிக் காரணமாக இருக்க முடியும் என்றால் இந்தியாவினுடைய தேர்தல் முழுமையாக முடிவுற்று எந்தெந்த கட்சியின் சார்பில் யார் யார் – எத்தனை பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள் என்று கணக்குப் பார்க்கிற நேரத்தில் – நான் டெல்லியிலே இருந்த திருமதி சோனியாகாந்தி அவர்களோடு பேசிய நேரத்திலும் – டெல்லிக்கு நேராகச் சென்றிருந்த நேரத்திலும் – நம்முடைய தம்பி ஜி.கே. வாசன் போன்றவர்களோடு கலந்து பேசிய நேரத்திலும் – அழுத்தந்திருத்தமாக நான் சொன்னது – இந்தியாவை ஆளக்கூடிய மாபெரும் சக்தியாக நம்முடைய சோனியா காந்தி அவர்கள் விளங்க முடியும்.

எனவே, அவர்கள் ஒன்று பிரதமராகப் பொறுப்பேற்க வேண்டும் அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று அன்றைக்குச் சொன்னேன். அது காரணமாக இருக்குமேயானால், இந்த வளர்ச்சிகளுக்கெல்லாம் – நான் காரணம் என்று சொன்ன தம்பி பாலுவின் வாதத்தை மகிழ்ச்சிகரமாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

தமிழ்நாட்டின் தேவைகள் இந்தப் பாலம் மாத்திரமல்ல, நம்முடைய தமிழ் மொழிக்கான ஆக்கத்தை ஊக்கத்தை அளிக்கின்ற வகையிலும் நான் வலியுறுத்திக் கேட்ட நேரத்தில் எல்லாம் கொஞ்சம் கூட தயங்காமல் இல்லை என்று சொல்லாமல் அவற்றை வாரி வழங்கிய அந்த வள்ளல்தன்மை டெல்லியிலே இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு உண்டு என்பதையும் உங்களுக்கு நான் சொல்ல முடியும்.

## தமிழுக்குச் செம்மொழிப் பெருமை

உதாரணமாக செம்மொழியாக நம்முடைய தமிழ்மொழி ஆனது. செம்மொழி என்று தமிழ்மொழி அழைக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைக்காக நூறாண்டு காலத்திற்கு முன்பே பரிதிமாற் கலைஞர் – சூரிய நாராயண சாஸ்திரி பாடுபட்டார். அந்த முழக்கத்தைச் செய்தார். அவர் சூரிய நாராயண சாஸ்திரியாக இருந்தாலும் கூட தன்னுடைய பெயரை தனித்தமிழ்ப் பெயராக பரிதிமாற்கலைஞர் என்று மாற்றிக் கொண்டு – அவர் தமிழுக்காக உழைத்த நேரத்தில் அவருடைய ஆய்வின் முடிவாக தமிழ்மொழி – கிரேக்கம், லத்தீன், உருது, ஹுப்ரூ போன்ற மொழிகளின் வரிசையிலே வைத்து எண்ணத்தக்க, மதிக்கத்தக்க ஒரு மொழி இந்த மொழி செம்மொழி, இது செம்மொழி வரிசையிலே வைக்கத் தகுந்தது என்று முதல் குரல் கொடுத்தவர் பரிதிமாற்கலைஞர்.

இப்படி தமிழுக்காக குரல் கொடுத்தவர்களை, பாடுபட்டவர்களை நாம் மறந்தது கிடையாது. அந்தப் பரிதிமாற் கலைஞருடைய வீடு மதுரை மாநகரத்திலே எங்கேயோ ஒரு கிராமத்திலே மதுரைக்குப் பக்கத்தில் அந்த மாவட்டத்தில் இருப்பதை அறிந்து அந்த வீட்டை நம்முடைய அரசின் சார்பிலே விலைக்கு வாங்கி – அதை அரசுடைமையாக ஆக்கி – சின்னஞ்சிறிய வீடாக இருந்தாலுங்கூட, அது ஒரு நினைவுச் சின்னம் என்ற வகையிலே பரிதிமாற்கலைஞரின் வீட்டை நாம் விலைக்கு வாங்கி, அதை தமிழக அரசின் உடைமையாக ஆக்கி அதற்கொரு விழா எடுத்து அந்த

வீட்டு வாசலிலே பரிதிமாற் கலைஞரின் சிலையையும் வைத்தபோது அந்தத் தெருவெல்லாம் – அந்தத் தெருவிலே வாழ்கின்ற பிராமணச் சகோதரர்கள், தாய்மார்கள் கூடி நின்று வாழ்த்துரைத்தார்கள்.

நான் என்னுடைய பொது வாழ்க்கையில் முதன் முதலாக அவ்வளவு பார்ப்பனத் தோழர்களிடத்திலே வாழ்த்துப் பெற்ற ஒரேயொரு நிகழ்ச்சி அந்த நிகழ்ச்சிதான் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏன்? எதற்காக? தமிழுக்காக உலவியவர், தமிழுக்காகப் பெருமை சேர்த்தவர், தமிழின் மேன்மையை எடுத்துச் சொன்னவர், அதற்காகப் போர்க் குரல் கொடுத்தவர், இன்றைக்கு உயிரோடு இல்லாவிட்டாலும், அவருடைய அந்தச் சூளுரையை நிறைவேற்றுவதற்காக நாம் எடுத்து வைத்த வாதத்தை ஏற்றுக் கொண்டு, அதை நிறைவேற்றச் சொன்னவர் சோனியாகாந்தி அவர்கள். நாம் இதிலே வெற்றி பெற்றதும் – செம்மொழி என்கிற அந்த நிலையை ஏற்படுத்தியதும் – டெல்லியிலேயிருந்து சோனியா காந்தி அம்மையாரிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. தமிழுக்குச் செம்மொழி என்ற நிலை ஏற்பட்டதற்காக இந்தச் செய்தியைச் சொல்லும்போதே (நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் பெரு மழை பொழிந்தது) மழையும் நம்மை வாழ்த்திக் கொண்டிருக்கின்ற செய்தியை காணுகிறோம். இதை முன்கூட்டியே அறிந்துதான் சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள், "மாமழை போற்றதும், மாமழை போற்றதும்" என்று பாடி வைத்திருக்கிறார்,

அதிலே அம்மையார் சோனியா காந்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தியாவில் தமிழைச் செம்மொழியாக ஆக்குவதற்கு பாடுபட்டு, அதிலே வெற்றி பெற்றோம் என்ற பெருமையை ஒருவர் சொல்லிக்கொள்ள வேண்டுமேயானால், அந்தத் தகுதி கருணாநிதி அவர்களே, உங்களுக்குத்தான் உண்டு என்று எழுதிய கடிதம் இன்னமும் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட செம்மொழித் தகுதியை நம்முடைய மொழிக்குத் தந்தவர்கள் – வடக்கே இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலே டெல்லியிலே இருக்கின்ற மன்மோகன் சிங் அவர்களும், அவருக்கு வழிகாட்டியாக விளங்குகின்ற அம்மையார் சோனியா காந்தி அவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது.

**சேது சமுத்திரத் திட்டம்**

அப்படிப்பட்ட நல்லாட்சி, தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற ஆட்சி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தம்பி பாலுவை, இன்றைய தினம் நாம் சாலைப் போக்குவரத்து, கப்பல்



## அண்ணாவின் பொன்மொழி

**ஏற்றம் காண ஏற்ற வழி**

படித்தவன் உழவேண்டும்;
உழுபவன் படிக்கவேண்டும்.
படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க,
உழுபவன் உற்பத்தியைப் பெருக்க,
இரு சாராரும் இணைந்தால்தானே
ஏற்றம் காண முடியும்?

போக்குவரத்துத் துறைகளுக்கு அமைச்சராகப் பார்க்கிறோம். சில பேர் சொல்லுகிறார்கள் என்று நான் கூட கேள்விப்பட்டேன். பத்திரிகைகளிலே கூடப் படித்தேன். இவர்கள் இந்தத் துறையை சண்டை போட்டு – கப்பல் துறையை வாங்கியவர்கள் – அன்றைக்கே வெளி உறவுத் துறையை வாங்கியிருந்தால், இந்நேரம் இலங்கைக்குப் போய் நாம் தமிழர்களை மீட்டிருக்கலாமே என்று கூட ஒரு பைத்தியக்காரத்தனமான கருத்துப் பேசப்படுவதை நாம் அறிகிறோம்.

வெளி உறவுத் துறையாக இருந்தாலும், உள்ளாட்சித் துறையாக இருந்தாலும், தொழில் துறையாக இருந்தாலும், சுரங்கத் துறையாக இருந்தாலும் எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறைகளோடு கலந்தாலோசித்து வெளிநாட்டைப் பற்றி ஒரு முடிவை எடுக்கக் கூடிய அந்த அதிகாரம் பிரதமருக்குத்தான் உண்டு என்பதை அரசியல் புரிந்தவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆகவே, பாலுவை கப்பல்துறை, சாலைப் போக்குவரத்துத்துறை, துறைமுகத்துறை ஆகிய துறைகளில் பணியாற்றக் கூடிய அமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டுமென்று நாங்கள் அன்றைக்கு விரும்பியது உங்களுக்கு நினைவிருக்கும். 1967 ஆம் ஆண்டு தி.மு.கழகத்தின் ஆட்சி மலர்ந்த நேரத்தில் அண்ணா அவர்கள் தமிழகத்திலே எழுச்சி நாள் ஒன்றைக் கொண்டாடினார்கள். ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நாங்களே ஒரு எழுச்சி நாளைக் கொண்டாடினோம்.

அந்த எழுச்சி நாளில் அண்ணாவும் நாங்களும் பல ஊர்களிலே கூட்டம் போட்டு, அந்த நாளில் நோக்கத்தை எடுத்துரைத்தோம். அந்த எழுச்சி நாளில் நாங்கள்



எழுப்பிய கோரிக்கைகளிலே ஒன்று – நாங்கள் வைத்த மிக முக்கியமான வேண்டுகோளிலே ஒன்று சேலம் இரும்புத் தொழிற்சாலை. நெய்வேலி நிலக்கரி இரண்டாவது சுரங்கம். அடுத்தது சேது சமுத்திரத் திட்டம். இதிலே நெய்வேலி பெருந்தலைவர் காமராஜர் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு முடிவடைந்து அடுத்தடுத்து சுரங்கங்கள் தோண்டுவதற்கான சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

அதைத் தொடர்ந்து சேது சமுத்திரத் திட்டத்திற்காக வாதாடினோம், போராடினோம். அந்தத் திட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றச் சொல்லி, அந்தப் பொறுப்பை அந்தத் துறையின் அமைச்சர் தம்பி பாலுவிடம் மத்திய அரசு தந்திருக்கிறது என்றால் அவர் அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பார் என்ற நம்பிக்கையோடு தான் என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

இப்போது வேறு துறைகளைப் பெற்றிருக்கலாம் என்றால் என்ன துறைகளைப் பெறச் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நாம் இன்றைக்குப் பெற்றிருக்கின்ற துறை – பாலுவிற்காக அல்ல – எனக்காக அல்ல – அல்லது நம்முடைய தம்பி வாசனுக்காக அல்ல – நம்முடைய தங்கபாலு அவர்களுக்காக அல்ல – அன்பரசனுக்காக அல்ல – நாம் பெற்றிருக்கின்ற இந்தத் துறை தமிழகத்தை வளம் பொருந்திய நாடாக ஆக்குவதற்காக – தமிழகத்திலே இன்றைக்கு பாறையாக இருக்கின்ற இடத்தையெல்லாம் சோலைவனமாக ஆக்குவதற்காக – வணிக பூமியாக ஆக்குவதற்காக – வெளிநாட்டு வாணிபங்கள் விரிவடைதவதற்காக – அதற்காகத்தான். தமிழகத்தின் வளத்தைப் பெருக்குவதற்காகத்தான் சேது சமுத்திரத் திட்டம்.

இந்தத் திட்டத்தை ஏறத்தாழ நூறாண்டு காலமாகத் தமிழ்நாட்டின் ஆன்றோர்கள், சான்றோர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், வித்தகர்கள் அத்தனைபேரும் ஆய்ந்து இது நல்ல திட்டம், நிறைவேற்றலாம் என்று சொல்லி, அதற்கு சர். ஏ. ராமசாமி முதலியார் தலைமையிலே ஆய்வு நடைபெற்று, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களை டெல்லியிலே சந்தித்து பரிந்துரை செய்து, பண்டிதநேரு அவர்களும் அதற்கு தன்னுடைய ஒத்துழைப்பைத் தருவதாகச் சொல்லி, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இடையிலே பல சங்கடங்கள் ஏற்பட்டு, இன்றைய தினம் அந்தத் திட்டம் ஏறத்தாழ முக்கால் பகுதி நிறைவேறியிருக்கின்ற சூழ்நிலையில் அதைத் தடுக்க சில பேர் இன்றைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.



## அண்ணாவின் பொன்மொழி

### தமிழ்ப்பற்றும் ஒருமைப்பாடும்

உலகையே தன் வீடாக முதன் முதல் நினைத்தவன் தமிழன்தான். அப்படிப்பட்ட தமிழனின் தமிழ் மொழிப்பற்றை குறுகிய மனப்பான்மை என்று யாரும் கணக்கிட்டு விட முடியாது. யார் தடுத்தாலும் யார் மறுத்தாலும் தாய் மொழிப்பற்று குன்றிவிடாது. பொங்கித்தான் வழியும். தமிழ் மீது பற்றுக் கொண்டிருப்பது தேசியத்துக்கு ஊறு ஏற்படுத்தும்; ஒருமைப்பாட்டைக் கெடுக்கும் என்று சிலர் நினைப்பது பொருளற்றது!

### தமிழகம் வளம் பெறும்

குறிப்பாக பக்கத்திலே இருக்கின்ற ஒரு அரசு ஒரு நாட்டின் அரசு – நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதை விரும்பவில்லை. ஏனென்றால் இந்தத் திட்டத்தை தமிழகத்திலே நிறைவேற்றினால் தமிழகம் மேலும் வளம் பொருந்தியதாக ஆகிவிடும், மேலும் பலம் பொருந்தியதாக ஆகிவிடும். தமிழகம் பலம் பொருந்துவதும், வளம் சிறப்பதும் தனக்குப் பிடிக்காத ஒன்று என்பதால் அவர்கள், சிங்களவர்கள் சில பேர் தமிழகத்திலே இருக்கிற சில பேரை வளைத்துப் போட்டு – ஏற்கெனவே, எவ்வளவு சீக்கிரமாக இந்தத் திட்டம் வேண்டுமென்று சொன்னார்களோ, அவர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தை இன்றைக்கு எதிர்த்துப் பேசுகிறார்கள் என்றால் அது திட்டத்தின் மீதுள்ள கோபத்தால் அல்ல, அந்தத் திட்டத்தை நாம் எடுத்து நிறைவேற்றக்கூடாது, அந்தப் பெயர் பாலுவிற்கு வந்து விடக் கூடாது, அந்தப் பெயர் இங்குள்ள கூட்டணிக்கு வந்து விடக் கூடாது, கூட்டணியிலே உள்ள காங்கிரஸ் கட்சிக்கு வந்து விடக்கூடாது, கூட்டணியிலே உள்ள தி.மு.கழகத்திற்கு வந்து விடக்கூடாது, கூட்டணியிலே உள்ள தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கு வந்து விடக்கூடாது. எனவேதான் இந்தத் திட்டத்தை இன்றைக்கு அவர்கள் வேண்டாமென்று சொல்கிறார்கள்.

நீங்கள் கடந்த கால தேர்தல் அறிக்கையை எடுத்துப் படித்துப் பார்த்தீர்களேயானால், அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் திட்டவட்டமாக சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும், அது சிறந்த திட்டம், அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் தமிழ்நாடு பாழாகும் எப்படியும் இதை நிறைவேற்றியே தீருவேன் என்று சபதம் செய்தவர்கள், இப்போது என்ன சொல்கிறார்கள்? அந்தத் திட்டத்தை எப்படியும் நான் தடுத்தே தீருவேன் என்று சொல்கிறார்கள் என்றால், என்ன தாராளமான மனப்பான்மை? என்ன தமிழ் உணர்வு? என்ன நாட்டைப் பற்றிய நல்ல எண்ணம்? எவ்வளவு அதி அற்புதமான சிந்தனை? இவைகளை எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எண்ணிப் பார்க்கின்ற மக்களின் எண்ணிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டிலே குறைந்து வருகின்ற காரணத்தால் எவரும் எதையும் பேசலாம் என்றாகி விட்டது. அப்படி ஆகிவிட்ட காரணத்தினாலேதான் இந்தத் திட்டங்களைப் பற்றி நாம் பேசும்போது, அந்தத் திட்டங்களிலே தங்களுக்கு உள்ள வெறுப்பைக் காட்டி, அதைத் தடுத்தே தீரவேண்டுமென்று உச்ச கட்டத்திற்குச் செல்கிற சில தலைவர்களை நாம் பார்க்கிறோம். அவர்களை நீங்கள் வைக்க வேண்டிய இடத்திலே வைக்க வேண்டும். அவர்களை நீங்கள் ஒதுக்க வேண்டிய இடத்திற்கு ஒதுக்க வேண்டும். அவர்களை நீங்கள் போட வேண்டிய இடத்திலே போட வேண்டும்.


இங்கே தம்பி பாலுவை இந்த வட்டாரத்து மக்கள் தேர்வு செய்த காரணத்தால் இதோ மேம்பாலங்கள், மேம்பாலங்கள், என்று தொடர்ந்து என் உயிரை வாங்கி கொண்டிருக்கிறார் – திறப்பு விழாவிற்கு வா, கல்நாட்டு விழாவிற்கு வா என்று என்னைத் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்.

பாரதிதாசன் பாடியதைப் போல, “தொந்தரவுக்குள்ளே தோழி நான் சுகம் கண்டேன்” என்பதைப் போல – அந்தத் தொந்தரவு கூட எனக்குச் சுகமாகத்தான் இருக்கிறது, ஆகவே தம்பி, நீ தொந்தரவு செய்து கொண்டே இரு, தொந்தரவு செய்கின்ற அளவிற்கு திட்டங்களை இங்கே கொண்டு வா, நிறைவேற்று, வாழ்த்துவதற்கு நான் வருகிறேன் என்று உங்களோடு சேர்ந்து பாலுவின் முயற்சிகளை – மத்திய அரசு, மாநில அரசுக்குச் செய்கின்ற உதவிகளைப் பாராட்டி, போற்றி இந்த விழாவிலே என்னுடைய உரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் அளப்பரிய செயல்பாடுகள்

தமிழகத்தில் உள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் நோக்கில் ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் ஒரு நல வாரியம் தொடங்கப்பட்டு அந்த நல வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன.



தமிழக அரசின்கீழ் 25 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டுவருகின்றன. அவற்றின் செயல்பாடுகள், இந்த வாரியங்கள் மூலம் வாரிய உறுப்பினர்களான ஏழை எளிய தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் முதலியவை குறித்து ஆய்வு செய்திட முடிவு செய்து, முதற்கட்டமாக தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் பணிமுன்னேற்றங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.10.2008 அன்று தலைமைச் செயலகத்தில் விரிவாக ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியத்தின் தலைவராகிய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவரான மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியங்களின் தலைவரான மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம் என மொத்தம் 8 வாரியங்களின் தலைவரான மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் திரு. குமரி அனந்தன், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவரான தமிழ்நாடு மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. சேம நாராயணன் ஆகியோரும், தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களும், உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களிலும் உறுப்பினர்களாகும் தொழிலாளர்கள் நலம்பெறும் வகையில் அவர்களது குடும்பங்களுக்கும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அதாவது,

விபத்து மரணம்
ஏற்பட்டால் – 1இலட்சம் ரூபாய்;



இரண்டு கைகள் இழப்பு,
இரண்டு கால்கள் இழப்பு,
ஒரு கை மற்றும்
ஒரு கால் இழப்பு,

இரண்டு கண்களும் முழுமையான
இழப்பு என்றால் – 1இலட்சம் ரூபாய்;

ஒரு கை, ஒரு கால் அல்லது
ஒரு கண் பார்வை
இழப்பு ஏற்பட்டால் – 50,000 ரூபாய்;

– என்பன போல ஊனத்தின் தன்மைக்கேற்ப ஒரு இலட்ச ரூபாய்க்குட்பட்டு நிவாரண உதவிகள் தனிநபர் விபத்துத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

இயற்கை மரணத்திற்கு
உதவித் தொகை – 15,000 ரூபாய்;

ஈமச் சடங்குகளுக்கு
உதவித் தொகை – 2,000 ரூபாய்:

**கல்வி உதவித் தொகை**

10ஆம் வகுப்புப் படிக்கும்
பெண் குழந்தைக்கு – 1,000 ரூபாய்;

10ஆம் வகுப்புப் தேர்ச்சி
பெற்றவர்களுக்கு – 1,000 ரூபாய்;

11ஆம் வகுப்புப் படிக்கும்
பெண் குழந்தைக்கு – 1,000 ரூபாய்;

12ஆம் வகுப்புப் படிக்கும்
பெண் குழந்தைக்கு – 1,500 ரூபாய்;

12ஆம் வகுப்புப் தேர்ச்சி
பெற்றவருக்கு – 1,500 ரூபாய்;

முறையான பட்டப் படிப்புக்கு – 1,500 ரூபாய்;

விடுதியுடன் பட்டப் படிப்பு – 1,750 ரூபாய்;

தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு – 2,000 ரூபாய்;

விடுதியுடன் பட்டப் படிப்பு – 1,750 ரூபாய்;

தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு – 2,000 ரூபாய்;

விடுதியுடன் தொழில் பட்டப் படிப்பு – 4,000 ரூபாய்;

தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு – 4,000 ரூபாய்;

விடுதியுடன் தொழில் பட்ட மேற்படிப்பு –6,000 ரூபாய்;

| | | |
|---|---|---|
| ஐ.டி.ஐ. அல்லது தொழில் நுட்பப் படிப்புக்கு | – | 1,000 ரூபாய்; |
| விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழில்நுட்பப் படிப்புக்கு | – | 1,200 ரூபாய்; |
| திருமண உதவித் தொகை | – | 2,000 ரூபாய்; |
| கர்ப்பிணிப் பெண்களுக்கு | – | 6,000 ரூபாய்; |
| கருச்சிதைவு / கருக்கலைப்பு நேர்ந்தால் | – | 3,000 ரூபாய்; |
| மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்திட | – | 500 ரூபாய் வரை; |
| 60 வயதானால் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு | – | 400 ரூபாய்; |

-என்ற அடிப்படையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

**இந்த அரசு அமைந்தபின் 13.5.2006 முதல் 15.10.2008 வரை,**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 8 இலட்சத்து 7 ஆயிரத்து 602 தொழிலாளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டு, அவர்களில் 1 இலட்சத்து 17 ஆயிரத்து 85 தொழிலாளர் குடும்பங்களுக்கு 35 கோடியே 89 இலட்சத்து 11 ஆயிரத்து 485 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டில் அப்போதைய தி.மு.க. அரசினால் தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டுவரும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 5 இலட்சத்து 91 ஆயிரத்து 227 தொழிலாளர்களில் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 63 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 25 கோடியே 59 இலட்சத்து 26 ஆயிரத்து 760 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

2000–2001ஆம் ஆண்டில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கிய தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் முதலான 9 அமைப்புசாரா நல வாரியங்களை முந்தைய அ.தி.மு.க அரசு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் இணைத்துவிட்டது.

ஆனால், அந்த 9 வகை அமைப்புசாரா தொழில்களிலும் பாடுபட்டுவரும் ஏழைத் தொழிலாளர் குடும்பங்களின் நலன்களில் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் அவையனைத்தையும் 1.9.2006 முதல் மீண்டும் தனித்தனி நல வாரியங்களாக செயல்படும் வகையில் இந்த அரசு ஆணையிட்டதுடன், மேலும் பல அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களையும் உருவாக்கி அவற்றின்மூலம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 37 ஆயிரத்து 813 தொழிலாளர்களில் 2 ஆயிரத்து 572 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 63 இலட்சத்து 2 ஆயிரத்து 787 ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 22 ஆயிரத்து 456 தொழிலாளர்களில் 2 ஆயிரத்து 923 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 71 இலட்சத்து 62 ஆயிரத்து 499 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 13 ஆயிரத்து 621 தொழிலாளர்களில் 2 ஆயிரத்து 325 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 48 இலட்சத்து 15 ஆயிரத்து 524 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 2 இலட்சத்து 28 ஆயிரத்து 601 தொழிலாளர்களில் 47 ஆயிரத்து 923 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 12 கோடியே 7 இலட்சத்து 10 ஆயிரத்து 949 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 34 ஆயிரத்து 953 தொழிலாளர்களில் 3 ஆயிரத்து 671 பணியாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு கோடியே 26 இலட்சத்து 58 ஆயிரத்து 429 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 19 ஆயிரத்து 449 தொழிலாளர்களில் 780 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 16 இலட்சத்து 561 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 1 இலட்சத்து 10 ஆயிரத்து 687 தொழிலாளர்களில் 22 ஆயிரத்து 851 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 5 கோடியே 37 இலட்சத்து 81 ஆயிரத்து 373 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 5 ஆயிரத்து 257 தொழிலாளர்களில் 526 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 13 இலட்சத்து 57 ஆயிரத்து 135 ரூபாய் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு ஓவியர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 2,080 தொழிலாளர்களில் 108 பணியாளர்களின் குடும்பங்களுக்கு இரண்டு இலட்சத்து 27 ஆயிரத்து 275 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொற்கொல்லர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 10 ஆயிரத்து 37 தொழிலாளர்களில் 524 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 13 இலட்சத்து 57 ஆயிரத்து 753 ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 10 ஆயிரத்து 367 தொழிலாளர்களில் 399 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 11 இலட்சத்து 77 ஆயிரத்து 321 ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

22.1.2007இல் தொடங்கப்பட்டு செயல்பட்டுவரும் தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 65 ஆயிரத்து 582 தொழிலாளர்களில் 3 ஆயிரத்து 809 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 86 இலட்சத்து 71 ஆயிரத்து 166 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**“14 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களிலும் 15.10.2008 வரை 19 இலட்சத்து 59 ஆயிரத்து 732 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 10 ஆயிரத்து 559 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 83 கோடியே 46 இலட்சத்து 61 ஆயிரத்து 17 ரூபாய் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.”**

இந்த 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களிலும் 15.10.2008 வரை 19 இலட்சத்து 59 ஆயிரத்து 732 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 10 ஆயிரத்து 559 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 83 கோடியே 46 இலட்சத்து 61 ஆயிரத்து 17 ரூபாய் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்.

மேலும், இந்த அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்றும், இந்த வாரியங்களின் மூலம் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங் களுக்கும் உரிய நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்திடவேண்டும் என்று வாரியங்களின் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்.


முதற்கட்டமாக தொழிலாளர் நலத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து 28.10.2008 அன்று ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து 30.10.2008 அன்று எஞ்சியுள்ள 11 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் ஆகியோரும் சம்பந்தப்பட்ட துறைகளின் செயலாளர்களும், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளும் உடனிருந்தனர்.

இந்த ஆய்வைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வாரியங்களின் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலைகள் குறித்து பின்வருமாறு கூறினார்:

**தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம்**

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 7.8.2006 அன்று தொடங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் தலைமையில் 18.1.2007 அன்று விவசாயத் தொழிலாளர் நல வாரியம் தொடங்கப் பட்டது. இவ்வாரியத்தின்கீழ் 74 இலட்சத்து 61 ஆயிரத்து 583 விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1 கோடியே 69 இலட்சத்து 94 ஆயிரத்து 416 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 15.10.2008 வரை மொத்தம் 3 இலட்சத்து 39 ஆயிரத்து 558 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு 197 கோடியே 23 இலட்சத்து 78 ஆயிரத்து 122 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு மீனவர் நல வாரியம்**

தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலையங்களில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென 'தமிழ்நாடு மீனவர் நல வாரியம்' மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் தலைமையில் 29.6.2007 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் போலவே மீனவர் நல வாரிய உறுப்பினர்களுக்கும் நல உதவிகள் அனுமதிக்கப்படுகின்றன. மாநிலம் முழுவதுமாக 1 இலட்சத்து 24 ஆயிரத்து 460 மீனவத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். இவ்வாரியத்திற்கு அரசு 5 கோடி ரூபாய் நிதி வழங்கி மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அளிக்கிறது. இதுவரை 203 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 21 ஆயிரத்து 250 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கேபிள் டிவி தொழிலாளர்கள் நலவாரியம்**

கேபிள் டி.வி. தொழிலில் ஈடுபட்டிருப்போரின் நலன்களைக் கருத்தில் கொண்டு கேபிள் டி.வி. தொழிலாளர்கள் நலவாரியம் 28.3.2008 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன், முதற்கட்டமாக கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அதிநவீன கேபிள் டி.வி. ஒளிபரப்பு சாதனங்களை நிறுவி, கட்டுப்பாட்டு அறைகளை அமைத்து, 2008 ஜூலை மாதம் 15ஆம் நாள் முதல் தஞ்சாவூரிலும், ஆகஸ்டு 15ஆம் நாள் முதல் கோயம்புத்தூரிலும் செப்டம்பர் 15ஆம் நாள்முதல் திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களிலும் தொலைக்காட்சி நடத்துபவர்களிடமிருந்து சிக்னல்களைப் பெற்று, உள்ளூர் கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்கு வழங்கும் தனது பணியைத் தொடங்கியுள்ளது. தற்போது சென்னை மாநகரில் தனது சேவையைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. 50 இலட்ச ரூபாய் அரசு நிதியுதவியுடன் செயல்படும் இவ்வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்த்தல் முதலிய பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்**

'தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்' மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் தலைமையில் 20.4.2007 அன்று தொடங்கப்பட்டு உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக முதற்கட்டமாக 1 கோடி ரூபாய் நிதி அனுமதித்துள்ளது. இவ்வாரியத்தில் 11 ஆயிரத்துக்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம்**

'தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம்' மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 20.4.2007 அன்று தொடங்கப்பட்டு உறுப்பினர் சேர்க்கும் பணிகள் நடைபெறுகின்றன. இவ்வாரியத்திற்கு அரசு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 1,221 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 51 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 58 ஆயிரம் ரூபாய் நலத்திட்ட உதவிகளாக அளிக்கப்பட்டுள்ளன. மேலும் உறுப்பினர்கள் சேர்த்தல், நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைமையில் செயல்படும் மற்றொரு வாரியமாகிய 'தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்' 27.5.2008 முதல் செயல்படுகிறது. இதுவரை 4 ஆயிரத்து 213 பேர் உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டுள்ளனர். நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**"74 இலட்சத்து 61 ஆயிரத்து 583 விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1 கோடியே 69 இலட்சத்து 94 ஆயிரத்து 416 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 15.10.2008 வரை மொத்தம் 3 இலட்சத்து 39 ஆயிரத்து 558 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு 197 கோடியே 23 இலட்சத்து 78 ஆயிரத்து 122 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது."**

**தமிழ்நாடு கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம்**

'தமிழ்நாடு கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம்' மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் 22.4.2007 அன்று தொடங்கப்பட்டு, 33 ஆயிரத்து 396 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட அரசு 10 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம்**

'தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம்' மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் 24.4.2007 முதல் தொடங்கப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை 52 ஆயிரம் பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 2,875 பேருக்கு 4 இலட்சத்து 63 ஆயிரத்து 578 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்திற்கு அரசு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் செயல்படும் மற்றொரு வாரியமாகிய 'தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்' 10.4.2008 அன்று தொடங்கப்பட்டு, தமிழகத்தில் உள்ள அரவாணிகள் அனைவரையும் வாரிய உறுப்பினராகச் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்திற்காக அரசு 50 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

**தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்**

'தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்' மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 20.4.2007 அன்று தொடங்கப்பட்டு, உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் அவர்களது குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்குமான பணிகள் நடைபெற்று வருகின்றன. நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக அரசு 1 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

**தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 8.6.2007 முதல் செயல்பட்டு வரும் மற்றொரு வாரியமாகிய தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் 9 ஆயிரத்து 895 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 811 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நலத்திட்ட உதவிகள் வழங்கிட அரசு 1 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

இந்த ஆய்வின் முடிவில் சமூகப் பாதுகாப்பு எதுவுமில்லாத சூழ்நிலையில் தங்களது உடல் வலிமையை மட்டுமே மூலதனமாகக் கொண்டு பல்வேறு தொழில்களிலும் உழைத்துவரும் ஏழை–எளிய தொழிலாளர் குடும்பங்கள் சமூகப் பாதுகாப்பு உணர்வையும், அரசின் உதவிகளையும் பெற்றுப் பயனடையவேண்டும் என்பதற்காகவே உருவாக்கப் பட்டுள்ள இந்த அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் தொழிலாளர்கள் உரிய நேரத்தில் உதவிகளைப் பெற்றுப் பயனடையும் வகையில் உறுப்பினர்கள் சேர்த்தல், நலத்திட்ட உதவிகளை உடனுக்குடன் வழங்குதல் முதலிய பணிகளில் முனைப்போடு ஈடுபடுமாறு பல்வேறு வாரியங்களின் தலைவர்களாக இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் பங்குபெற்ற அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்.

> "தமிழக அரசின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ் 2006க்குப்பின் 2 இலட்சத்து 6 ஆயிரத்து 300 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 319 கோடியே 16 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது; அதேபோல, ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2006க்குப்பின் இதுவரை 10 இலட்சத்து 78 ஆயிரத்து 612 ஏழை மகளிருக்கு 487 கோடியே 56 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது."

இதனைத் தொடர்ந்து தமிழக அரசின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ் 2006க்குப்பின் 2 இலட்சத்து 6 ஆயிரத்து 300 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 319 கோடியே 16 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதென்றும்; அதேபோல, ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2006க்குப்பின் இதுவரை 10 இலட்சத்து 78 ஆயிரத்து 612 ஏழை மகளிருக்கு 487 கோடியே 56 இலட்ச ரூபாய் வழங்கப் பட்டுள்ளதென்றும் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருமண நிதியுதவி கோரும் பெண்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் உடனுக்குடன் உதவித் தொகைகள் கிடைப்பதில் மனித நேய உணர்வோடு அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கினார்.

* * *

# நாம் போற்றிட வேண்டிய கண்ணியமான நினைவை எண்ணித்தான், சாலைக்கு இராஜீவ்காந்தியின் பெயரைச் சூட்டியிருக்கிறோம்



இராஜீவ்காந்தி சாலை திறப்பு விழா மற்றும் ஒரகடம் தொழில் பூங்கா
மேம்பாட்டுப் பணிகள் தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின் உரை

சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் 29.10.2008 அன்று இராஜீவ்காந்தி சாலை திறப்பு விழா, மற்றும் ஒரகடம் தொழில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை :-

இங்கே எழுச்சி மயமாக விழா ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் சோகமும், அதே நேரத்திலே சுகந்தமும் கலந்து வீசுகின்ற சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டிய தவிர்க்க முடியாத இன்றியமை யாமைக்கு நாமெல்லாம் ஆட்பட்டிருக்கிறோம். இங்கே நம்முடைய நண்பர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு.கிருஷ்ணசாமி வந்திருக்கிறார். இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற இந்தியத் திருநாட்டின் இளந் தலைவர் – இராஜீவ்காந்தியின் பெயரால் அமைந்துள்ள இந்த இராஜீவ்காந்தி சாலை என்ற பெயருக்கு – அதை இன்று நாம் தொடங்கி – அந்தப் பெயரை உச்சரிப்பதற்கு – அதைச் சூட்டி ஆறுதல் பெறுவதற்கு நம்முடைய நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் தான் காரணம் என்பதை இங்கே நான் நன்றி உணர்வோடு எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய அலுவலகத்திற்கு அழைத்துச்

சென்றார்கள். நான் பிறந்தது முதல் – முதன் முதலாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்குச் சென்றது அதுதான் முதல் முறை. என்னை அழைத்துச் சென்றது கிருஷ்ணசாமி அவர்கள்தான். அங்கே அழைத்துச் சென்று வரவேற்புரையாற்றி, பாராட்டுரை வழங்கி கடைசியாக அழைத்த காரியத்தை சாதித்துக் கொண்டதும் கிருஷ்ணசாமி அவர்களின் அந்தத் திட்டத்தை, தந்திரத்தை, அவர் தீட்டிய அந்தச் சாதனையை நான் அன்றைக்கே போற்றிப் பாராட்டி அவருடைய கோரிக்கையை அதே இடத்தில் நிறைவேற்றுகிறேன் என்று சொன்னேன். ஒருவேளை அவர் அந்த அலுவலகத்திற்கு என்னை அழைத்துச் சென்று அந்தக் கோரிக்கையை வைக்கா விட்டாலும், ஒரு கடிதம் மூலமாகத் தெரிவித்திருந்தாலும் – தமிழகத்தினுடைய தலைவர்கள், இந்தியத் திருநாட்டின் தலைவர்கள், நாட்டு விடுதலைக் காகப் போராடிய குடும்பத்தின் குலவிளக்குகள், யாராக இருந்தாலும் தியாகத் திருவிளக் குகளாக விளங்கியவர்கள் மறைந்திருந்தால் அவர்கள் வேறொரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே என்று கருதாமல் அவர்கள் தியாகத்தின் காரணமாக நம்மைச் சேர்ந்தவர்கள் தான் – நாம் அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் என்ற அந்த உணர்வோடு அவர்களுடைய பெயர் நிலைக்க நான் காரியமாற்றி வந்திருக்கிறேன் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

இப்போது புதிதாகக் கட்டப் படுகின்ற சட்டசபைக் கட்டிடத்திற்கு அங்கே அமைந்துள்ள அந்த இடத்திற்குப் பெயர் – முன்பெல்லாம் இல்லை – ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்ற அந்தப் பெயரைச் சூட்டி – அந்தப் பெயர் அங்கேயிருக்கிற தென்றால் – ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சியின் முதல் அமைச்சராக இருந்தவர் ஆயிற்றே, நாம் திராவிடக்கட்சி சார்புடையவர் ஆயிற்றே, அந்தப் பெயரை வைப்பதா என்று எண்ணவில்லை. ஓமந்தூரார் காங்கிரஸ்காரராக இருந்தாலும், தியாகத்திற்குரியவர் – ஏழைப் பங்காளர் – இன்னும் சொல்லப் போனால் தாடி இல்லாத ராமசாமி நாயக்கர் என்று உயர்சாதி மக்களால் ஒரு காலத்திலே அழைக்கப்பட்டவர் – மன்னிக்க வேண்டும், அப்படிக் கேலி செய்யப்பட்டவர். அவருடைய பெயரை அங்கே வைத்து நான் மகிழ்ந்தேன்.

அதைப் போலவே நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பெரும் கவிஞர் – தேசியக் கவிஞர். அவருடைய பெயரால் திரவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டிய பத்து மாடிக் கட்டிடத்திற்கு – நாமக்கல் கவிஞர் மாளிகை என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தேன். இன்றும் அந்தப் பெயரால் அந்தக் கட்டிடம் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

**கல்வி வளர்ச்சி நாளாக காமராசர் பிறந்த நாள்**

பெருந்தலைவர் காமராஜர் மறைந்தபிறகு சாலைக்கும் – மண்டபங்களுக்கும் பெயர் வைத்தது மாத்திரமல்ல – அவருடைய கவலை, ஏழையெளிய வீட்டுப் பிள்ளைகள், தாழ்த்தப்பட்டோர் வீட்டுப் பிள்ளைகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வீட்டுப் பிள்ளைகள், மாடு மேய்க்கின்ற அளவுக்கு, ஆடு மேய்க்கின்ற அளவிற்கு கிராமப்புறங்களிலே வாழ்கின்ற படிப்பதற்கு வழியில்லாமல் வாடுகின்ற அந்தப் பிள்ளைகள் எல்லாம் படிக்க வேண்டுமென் பதற்காக அவர்களுக்கு கல்வி அறிவு ஊட்ட, பெருந்தலைவர் காமராஜர் எடுத்த முயற்சி கல்விக் கண் திறந்த காமராஜர் – என்ற பட்டத்தை அவர் பெறுவதற்கு காரணமாயிற்று. எனவேதான், காமராஜர் பிறந்த நாளான, ஜூலை 15ஆம் தேதி பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் என்று அதிகாரப் பூர்வமாக அரசியல் ரீதியாக ஆட்சியின் மூலமாக அறிவித்து – அதோடு நான் அமைதி கொள்ளாமல், யாராவது அடுத்த ஆட்சிக்கு வந்து, அந்தப் பெயரை மாற்றிவிட்டால் என்ன செய்வது என்பதற்காக – காமராஜர் பெயரால் அமைந்த அந்த நாளை சட்டமாகவே – சட்டசபையிலே நிறைவேற்றி ஜூலை 15 கல்வி வளர்ச்சி நாள் காமராஜர் பிறந்த நாள் – இதை சட்டப் பூர்வமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட வேண்டும் என்று ஆக்கியதும் நான்தான்.

இதை நான் தொடர்ந்து வளர்த்திக் கொண்டே போகலாம். ஏனென்றால் தேசியத்திற்காக பாடுபட்டு தியாகம் செய்தவர்களை – திராவிட இயக்கத்தைச் சேர்ந்த

> **அண்ணாவின் பொன்மொழி**
>
> அஞ்சாநெஞ்சு படைத்த இலட்சியவாதிகள் தாம் ஒரு நாட்டிற்கு கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள் ஏனெனில், பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால் இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டிகள் தோறும் நடமாடுவார்கள்.

நாங்கள் என்றைக்கும் ஒதுக்கிப் பார்த்ததில்லை. தியாகம் எங்களையும், அவர்களையும் ஒன்றுபடுத்தியிருக்கிறது. தியாகம் எங்களையும், அவர்களையும் இணைத்திருக்கிறது. அந்த வகையிலே நான் பெருந்தலைவர் காமராஜருடைய பெயரை சட்டப்பூர்வமாகவே கல்வி வளர்ச்சி நாள் என்பதற்கு சூட்டுவதற்கான வழி வகைகளைச் செய்து இன்றைக்கும் அது நிலவி வருகிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். எனவே இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர், வேறு கட்சியைச் சேர்ந்தவர், அவருடைய தியாகத்தை நாம் மதிக்கத் தேவையில்லை என்று கருதுகின்ற வழக்கம் எங்களுக்கு இல்லை, எங்களை – எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அப்படி எங்களைப் பழக்கவும் இல்லை. எனவேதான் இன்றைக்கு இந்தியத் திருநாட்டின் இளந்தலைவர் – இராஜீவ்காந்தியின் பெயரை இந்தச் சாலைக்கு சூட்டியிருக் கிறோமென்றால் நண்பர் கிருஷ்ணசாமி கேட்டார் என்பதற்காக மாத்திரமல்ல, என்னை அழைத்து வரவேற்பு அளித்தார் என்பதற்காக மாத்திரமல்ல, இந்த மண்ணில் அவர் சிந்திய ரத்தம் – அதற்கு நாம் அளிக்க வேண்டிய மதிப்பு, மரியாதை, நாம் செலுத்த வேண்டிய நன்றி – நாம் போற்றிட வேண்டிய கண்ணியமான நினைவு அதை எண்ணித்தான் இன்றைக்கு இந்தச் சாலைக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாய் செலவிலே அமைக்கப் பட்டுள்ள இந்தச் சாலைக்கு அந்தப் பெருமகனுடைய பெயரைச் சூட்டியிருக்கிறோம்.

**இராஜீவ்காந்தியுடன் சந்திப்பு**

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இராஜீவ் காந்தி இந்த மண்ணிலே மறைந்ததைப் பற்றி என்னுடைய அருமை நண்பர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் தங்கபாலு அவர்கள் இங்கே உருக்கமாக சில வரிகளிலே சுட்டிக் காட்டினார். அந்த உருக்கம் என்றைக்கும் நம்முடைய உள்ளங்களிலே நிலைத்திருக்கக் கூடிய உருக்கம் என்பதிலே மாறுபட்ட கருத்துக்கு இடமே கிடையாது. அந்த இராஜீவ்காந்தி அவர்கள் இன்றைக்கு நாம் பேசிக்கொண்டிருக்கிற இலங்கைப் பிரச்சினையில் எப்படி நடந்து கொண்டார் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் ஆதாரப் பூர்வமாக என்னிடம் இருக்கின்றன. அதிலே அவருக்கும் எனக்கும் இருந்த தொடர்பு 1989ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலின்போது – இராஜீவ்காந்தி அவர்கள் தமிழகத்திலே காங்கிரஸ் கட்சிக்காகப் பிரச்சாரம் செய்தார். நான் அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய வேண்டிய – கட்சியின் தலைவராக இருந்தேன். அந்தத் தேர்தல் முடிந்த பிறகு, நான் முதலமைச்சராக ஆன பிறகு எனக்குள்ள ஒரு பொறுப்பு – ஒரு கடமை உண்டு, பிரதமரை முதலமைச்சர் என்ற முறையில் சந்திக்க வேண்டும். அவரைச் சந்திப்பதற்காக டெல்லிக்குச் சென்றேன். என்னுடன் தம்பி முரசொலிமாறன் வந்தார். பிற்பகல் 2 மணிக்கு இராஜீவ்காந்தியைச் சந்திக்க நேரம் கிடைத்தது. சந்தித்தபோது, அவரும் நானும் தேர்தலிலே இரு முனையிலே போட்டி போட்டு – இரு கட்சிகளுக்குப் பிரச்சாரம் செய்தோம் என்ற நிலையே அப்போது இல்லை.

இருவரும் சகோதரர்களைப் போல – தேர்தலில் நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு – அதைப் பற்றிய கவலையே இல்லாமல் இனிமையாகப் பழகினார். நான் அதே இனிமையோடும், உரிமையோடும் அவரிடத்திலே பழகினேன். அன்று மாலையே சென்னைக்குத் திரும்புவதாகச் சொன்னேன். இல்லையில்லை, இரண்டு நாள் டெல்லியிலே தங்கி



**அண்ணாவின் பொன்மொழி**

## ஆற்றல் வேண்டும்

**நாம்** எண்ணியதைச் செயல்படுத்த முதலில் ஆர்வம் வேண்டும். ஆர்வம் இருந்தால்தான் நம்பிக்கை பிறக்கும். பிறகு அதற்கான வழி வகைகளை ஆராய வேண்டும். அதைச் செயல்படுத்த ஆற்றல் வேண்டும். நாம் மட்டும் ஆற்றல் பெற்றால் போதாது. அந்த ஆற்றல் மற்றவர்களுக்கும் வரும்படி செய்ய வேண்டும். இத்தனைக்கும் பிறகுதான் நாம் எண்ணிய எண்ணத்தைச் செயல்படுத்த முடியும்.

என்னோடு இலங்கையைப் பற்றி கலந்து பேசிவிட்டு போகலாம் என்று அன்புக் கட்டளையிட்டார். நான் இரண்டு நாள் தங்க இயலாதே, சென்னையிலே வேலை இருக்கிறதே என்று சொன்னேன். இல்லையில்லை, நாளை வெளி யுறவுத்துறைச் செயலாளர் நட்வர்சிங் அவர்களை நீங்கள் தங்கியிருக்கின்ற தமிழ்நாடு இல்லத்திற்கு அனுப்பி வைக்கிறேன், இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றி விரிவாக உங்களிடம் பேசுவார். அந்த விவரங்களையெல்லாம் கேட்டு விட்டு – மீண்டும் நாளை மாலையிலே என்னை வந்து சந்தித்தால், பிறகு சில விவரங்களைச் சொல்லுகிறேன் என்றார். அதன்படி நட்வர்சிங் வந்தார், அவரோடு கலந்து பேசினேன் – காலையிலே 7 மணிக்கு வந்த நட்வர்சிங்கோடு நான்கு மணி நேரம் பேசினோம். பேசி முடித்துவிட்டு, இராஜீவ்காந்தியைச் சந்திக்க அவருடைய அலுவலகத்திற்குச் சென்றேன். பேசிய விஷயங்களையெல்லாம் அவரிடம் விவரமாகச் சொன்னேன். அவ்வளவையும் கேட்டு விட்டு, இலங்கை சம்பந்தமாக ஒரு நல்ல முடிவை மேற்கொள்ள நாம் இன்னும் ஒரு முறை பேச வேண்டுமென்று சொன்னார். என்ன பேசினோம். என்ன முடிவுகளை அதைப் பற்றியெல்லாம் எடுத்தோம் என்பதையெல்லாம் இப்போது சொல்ல நேரமில்லை. நான் சட்டசபையிலே இரண்டு மாதங்களுக்கு முன்பு அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் வந்தபோது – நான் குறிப்பாகப் பேசி விளக்கியிருக்கிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு காங்கிரஸ் கட்சிக்கு வாக்குக் கேட்டுக் கொண்டிருந்த அந்தக் கால கட்டத்திலேயே கோவையிலே நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினை பற்றி இராஜீவ்காந்தி அவர்கள் பேசியிருக்கிறார். அது முரசொலியிலோ அல்லது தி.மு.க. ஏடு ஒன்றிலோ வந்த செய்தி அல்ல. 6.11.1989 தேதியிட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையிலே வந்த செய்தி. "கோவையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முழு ஒத்துழைப்பு தந்து வருவதற்காக தி.மு.க அரசுக்கு இராஜீவ்காந்தி பாராட்டுத் தெரிவித்தார்" என்று அப்பொழுதே இலங்கைப் பிரச்சினையிலே மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு தந்த கட்சி என்று நான் அல்ல, அன்றையப் பிரதமர் இராஜீவ்காந்தி அவர்கள் கோவைக் கூட்டத்திலே 5.11.1989 அன்று பேசி, அது "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் 6.11.1989 அன்று வெளிவந்தது.

அதைப்போலவே திருச்சியிலே 5.11.1989 அன்று நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலே – அவர் பேசியது அதே எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 6.11.1989 அன்று முதல் பக்கத்தில் வெளியாகி யிருக்கிறது என்ன சொன்னார் என்று சொன்னால், "இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கடந்த பல மாதங்களாக ஒத்துழைப்பு வழங்கி வரும் தி.மு.க. அரசுக்கும், முதலமைச்சர் கருணாநிதிக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்" என்று வந்திருக்கின்றது.


ஆக இலங்கைப் பிரச்சினையிலே இந்த அரசும், மத்திய அரசும் ஒத்துப் போவது என்பது இன்றல்ல. அன்றைக்கே தொடங்கிய ஒன்றுதான் என்பதற்காகத்தான் இந்த ஆதாரங்களை இந்த நேரத்தில் இராஜீவ் பெயரால் ஒரு சாலை தொடங்கப்படுகின்ற நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகின்றேன். இப்படி அன்றைக்கு ஏற்பட்ட அந்த இலங்கையைப் பற்றிய தொடர்பு இன்றைக்கும் எப்படியோ எங்களைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இதில், அபிப்பிராய பேதத்திற்கு இடமில்லை. நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது கழக அரசு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு எடுத்திருக்கிற நிலை – இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் – இந்த நிலை தான் நாங்கள் வேறு நிலை எதுவும் எடுக்கவில்லை. அன்றைக்கு எந்தக் கொள்கையைக் கொண்டி ருந்தோமோ, அதே கொள்கை யைத்தான் இன்றைக்கும் கொண்டிருக்கிறோம் போர் இல்லாத ஒரு சூழ்நிலை இலங்கையிலே உருவாக வேண்டும். அமைதி உருவாக வேண்டும். அந்த அமைதியை உருவாக்குவது யாராக இருந்தாலும் சரி, அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். அந்த அமைதியை உருவாக்க மத்திய அரசோடு நாம் ஒத்துழைக்க வேண்டும் என்பதில் மாநில அரசை நடத்திக் கொண்டிருக்கின்ற எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**காந்திய வழியில் தீர்வு**

இப்படி ஒத்துழைக்கிறேன், ஒத்துழைக்கிறேன் என்று சொல் கிறானோ, எனவே ஒற்றுமையா

கவே இருந்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று சில பேருக்கு சங்கடம் – சில பேருக்கு வருத்தம் – சில பேருக்குக் கவலை – சில பேருக்கு வாட்டம் – சில பேருக்கு வேதனை – சில பேருக்கு ஒரு அருவருப்பு – அதனால் அவர்கள் தேர்தலை மனதிலே வைத்து ஒரு பெரிய பிரச்சினையை அணுகுகிறார்களே அல்லாமல், தமிழர்களை – தமிழ் மக்களுடைய உயிர்களை மையமாக வைத்து இந்தப் பிரச்சினையை அணுகவில்லை, ஆனால் சென்னையிலே வந்து என்னைச் சந்தித்த மாண்புமிகு வெளி உறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் ஆனாலும், நான் ஆனாலும், எங்களைச் சந்திக்க வைத்த வழிகோலிய திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்கள் ஆனாலும், எங்கள் எண்ணம் எல்லாம் தமிழர்களுடைய சிக்கல் தீர வேண்டும் – அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற சங்கடம், துன்பம் அகல வேண்டும் என்பதிலேதான் – எங்களுடைய அக்கறை எல்லாம். அதனால்தான் நாங்கள் துப்பாக்கிக்கு துப்பாக்கி – பீரங்கிக்கு பீரங்கி – என்றெல்லாம் இல்லாமல் போர் விமானத்திற்கு எதிர் விமானம் – என்றெல்லாம் இல்லாமல் – அதற்காக காந்திய வழி என்று நண்பர் தங்கபாலு சொன்னதைப் போல – காந்திய வழியில் ஒரு பக்கத்திலே உள்ளவர்கள் கடைப்பிடிப்பது என்பதல்ல – இருவரும் அமர்ந்து ஒரு இடத்தில் – ஏற்கெனவே பேசிய சமரசத்தைப் போல – பேசி ஒரு நல்ல அமைதியான வழியை அந்த நாட்டிலே ஜனநாயகம் பூத்துக் குலுங்கக் கூடிய ஒரு வழியை இரு சாராரும் சேர்ந்துபேசி உருவாக்க வேண்டும். அதற்கு இந்தியாவோடும், இந்தியாவோடு சேர்ந்து தமிழ்நாடும் இருப்பதால் தமிழ்நாடும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதுதான் இன்றைக்கு எடுக்கப்பட்டுள்ள நிலை.



நான் இராஜீவ்காந்தியின் பெயரால் சாலையைத் திறந்து வைக்கும் நேரத்தில் இலங்கைக்கு ஏன் போனேன் என்றெல்லாம் நீங்கள் வியப்படைவீர்கள். இராஜீவ் காந்திக்கும், இலங்கைக்கும் உள்ள தொடர்பு – அவர் இலங்கை பிரச்சினையினால் எந்த அளவிற்கு முதலிலே ஒரு முறை தாக்குண்டார் என்பதும் – அதற்குப் பிறகு அவர் தன்னுடைய வாழ்வையே தமிழ் மண்ணிலே பகிர்ந்தளித்தார் என்பதும், அவருடைய குருதி இங்கேதான் கொட்டியது என்பதும் மறந்து விடக் கூடிய சரித்திர நிகழ்ச்சி அல்ல. எனவேதான், இலங்கையை எண்ணும்போது இராஜீவ்காந்தி நினைவுக்கு வருகிறார். இராஜீவ்காந்தியின் பெயரால் சாலை திறக்கும்போது இலங்கையை நினைவு கூர்கிறோம். இலங்கை நினைவுக்கு வரும்போது அங்கே வாடிக் கொண்டிருக்கின்ற ஏழையெளிய குழந்தைகள், தாய்மார்கள், சேலை இல்லாமல், ஆடை இல்லாமல், வேட்டி இல்லாமல், துண்டு இல்லாமல், படுக்க பாய் இல்லாமல், தின்னச் சோறு இல்லாமல் – தூங்க ஒரு வீடு இல்லாமல், மழையில், வெயிலில் அங்கே அனாதைகளாய், அபலைகளாய் அந்த நாட்டிலேயே வாழ முடியாமல் இந்தியாவிற்கு அனாதைகளாக வருகின்ற அந்தக் காட்சியெல்லாம் நம் கண்முன்னே தெரிகிறது. அந்தக் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும். நாம் நம்முடைய கண்ணீரைத் துடைத்துக் கொள்கின்ற காலம் வெகுவிரைவிலே வரவேண்டும். அந்தக் காலம்தான் இலங்கையிலே அமைதி ஏற்பட்டது, என்ற செய்தி வருகின்ற காலம்.

அந்தக் காலத்தைக் கொண்டு வருகின்ற வழியாக இன்றைக்கு திறக்கப்பட்டுள்ள இராஜீவ்காந்தி சாலை என்கின்ற இந்த வழி அமையட்டும். இந்த வழியாக அந்த அமைதி வரட்டும். இந்தச் சாலையிலே பஸ்கள் ஓடும், பேருந்துகள் ஓடும், கார்கள் ஓடும், வண்டிகள் ஓடும், மக்கள் நடமாடுவார்கள் என்பது மாத்திரமல்ல, இந்த இராஜீவ் காந்தி வழியிலே இந்தியாவே மகிழ்ச்சியடையக் கூடிய அளவிற்கு இலங்கைக்கு அமைதி வரட்டும், அதைத்தான் என்னுடைய வேண்டுகோளாக, என்னுடைய விருப்பமாக, என்னுடைய விழைவாக, என்னுடைய ஆசையாக இங்கு வெளியிட்டு இந்த விழாவிலே உங்களையெல்லாம் சந்தித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். ❖

# ரூ.750 கோடி செலவில் 4ஆவது கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு முடிவு



15.9.2006 அண்ணா பிறந்த நாளன்று தொடங்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை மூன்று கட்டங்களில் 1,517 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 62 இலட்சத்து 80 ஆயிரம் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டு, இதுவரை 1,266 கோடியே 17 இலட்சத்து 4 ஆயிரத்து 222 ரூபாய் செலவில் 51 இலட்சத்து 34 ஆயிரத்து 326 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன; தொடர்ந்து வழங்கப் படுகின்றன.

நான்காம் கட்டமாக தற்போது நடப்பு ஆண்டில் மேலும் 750 கோடி ரூபாய் செலவில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட தமிழக அரசு முடிவு செய்தது.

அதனடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் முன்னிலையில் 15.10.2008 அன்று வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிப் பெட்டிகள் திறக்கப்பட்டன. முதல் நிலை ஆய்வுக்குப்பின் ஒப்பந்தப்புள்ளிகளை அளித்த 19 நிறுவனங்களும் அடுத்தக்கட்டமான தொழில்நுட்ப மதிப்பீடு நிலைக்குத் தகுதி பெற்றதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கி குழு முடிவு செய்தது.

தொழில்நுட்ப மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை முழுவதும் நிறைவு செய்த 17 நிறுவனங்கள், அடுத்த கட்டமான விலைப்புள்ளிகளைத் திறக்கும் கட்டத்திற்குத் (Price Bid) தகுதி பெற்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்யாத இரண்டு நிறுவனங்கள் நிராகரிக்கப் பட்டன.

4.11.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு தலைமைச் செயலகத்தில் மீண்டும் கூடியது. இக்கூட்டத்தில், தகுதிபெற்ற 17 ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் மாண்புமிகு முதலமைச்சர், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு உறுப்பினர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஒப்பந்த தாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்பட்டன. குறைந்தபட்ச விலைப்புள்ளியான ரூ.2,321/–ஐ அளித்த திருவாளர்கள் பீஜீஇன்டர்நேஷனல் நிறுவனத்தினிடம் தொழில் நுட்ப வல்லுநர்குழு பேச்சு வார்த்தை நடத்தி, தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையை நிர்ணயம்

செய்தபின் மற்ற ஒப்பந்ததாரர்களிடம் இறுதி விலைப்புள்ளிக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க ஒப்புதல் பெற்று, எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யலாம் என்றும், இக்கூட்டம் 5.11.2008 அன்று காலை 11.30 மணிக்கு நடத்தப்படலாம் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து தொழில் நுட்ப வல்லுநர் குழு, குறைந்த விலையை அளித்துள்ள திருவாளர்கள் பீ.ஜீ. இன்டர்நேஷனல் நிறுவனத்தினரிடம் முதலில் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்நிறுவனம், ஏற்கெனவே மிகக் குறைவான விலைப்புள்ளி கொடுத்திருப்பதால் மேலும் விலையைக் குறைக்க இயலாது என்று தெரிவித்துவிட்டனர்.

இதன் அடிப்படையில் மற்ற ஒப்பந்ததாரர்களை அழைத்து இதே விலைக்கு அவர்களும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க இயலுமா என்று கேட்டபோது, 2 (இரண்டு) நிறுவனத்தினர், அதாவது, எம்.ஐ.ஆர்.சி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மற்றும் எல்.பி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் ஆகியோர் மறுத்துவிட்டனர்.

எஞ்சிய 14 (பதினான்கு) நிறுவனங்களான, வீடியோகான் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், பெல்டெக் (இந்தியா) லிமிடெட், ஜீன்ஸ் எலக்ட்ரோடெக் லிமிடெட், மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட், டிக்சன் டெக்னாலஜீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், க்ளியர் விஷன் இன்டஸ்ட்ரீஸ், ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட், கெவின் இன்போடெக் பிரைவேட் லிமிடெட், டொங்குவான் யாங்கு எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிமிடெட், சீனா, சலோரா இன்டர்நேஷனல் லிமிடெட், ஈஸ்ட் இந்தியா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், சன்டெக் விஷன், கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட், டிரென்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் ஆகியோர் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு குறைந்த இறுதி செய்யப்பட்ட விலைப்புள்ளியான ரூ.2,321/–க்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 5.11.2008 அன்று இக்குழுவின் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் டி. சுதர்சனம் (காங்கிரஸ்), சி. கோவிந்தசாமி (இந்தி கம்யூனிஸ்ட்–மார்ச்சிஸ்ட்), வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), எச். அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்) சட்டமன்ற உறுப்பினர்கள், மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) மற்றும் து. ரவிக்குமார் (விடுதலை சிறுத்தைகள்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்குழு கூட்டத்தில் ஒரு வண்ணத் தொலைக்காட்சி பெட்டியின் விலை ரூ.2,321/– என்ற அடிப்படையில்,

1) பீ.ஜீ. இன்டர்நேஷனல் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

2) க்ளியர் விஷன் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

3) கெவின் இன்போடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 75 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

4) சலோரா இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

5) சன்டெக் விஷன் நிறுவனத்திடமிருந்து 50 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

6) டொங்குவான் யாங்கு எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சத்து 87 ஆயிரத்து 500 தொலைக்காட்சிப் பெட்டிகளும்

7) வீடியோகான் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்,

8) டிக்சன் டெக்னாலஜிஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்,

9) ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

10) கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

11) ஜீனஸ் எலக்ட்ரோடெக் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

12) ஈஸ்ட் இந்தியா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

13) பெல்டெக் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 4 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

14) டிரென்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

15) மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்,

ஆக நான்காம் கட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக மொத்தம் 41 இலட்சத்து 62 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான கொள்முதல் செய்வதென அன்றைய கூட்டத்தில் ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖

# மகளிர் சுயஉதவிக் குழுவினர் திறமையாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுகிறார்கள்

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு




சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு
மணிமேகலை விருதும் - 3 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியும் வழங்கும் விழா
25.11.2008 அன்று, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை :-

தமிழகம் எப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறது, எப்படியெல்லாம் உயர்ந்திருக்கிறது என்பதை இங்கே உரையாற்றிய அரசின் உள்ளாட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் நண்பர் ஷெட்டி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். தமிழகம் உயர்ந்திருக் கிறதோ இல்லையோ, அசோக் வர்தன் ஷெட்டியின் தமிழ் உயர்ந்திருக்கிறது என்பதை அவருடைய வரவேற்புரையிலிருந்து, கருத்துரையிலிருந்து நான் புரிந்து கொண்டேன். அவ்வளவு தெளிவான உரையை அவர் இங்கே ஆற்றியிருக்கிறார்.

ஷெட்டி அவர்கள் பேசும் போது, தம்பி ஸ்டாலின் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, இலக்கணத் திலிருந்து வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா என்றெல்லாம் பல பாக்களைச் சொல்லிப் பாராட்டினார். நான் அப்போது ஸ்டாலினிடம் சொன்னேன், ஏ, அப்பா, உன்னைப் பற்றி எத்தனைப் பா என்றேன். என்னைப் பொறுத்தவரையில் – வெண்பாவும் அல்ல, கலிப்பாவும்

அல்ல, ஆசிரியப்பாவும் அல்ல, நான் விருத்தப்பா. இப்போது வெண்பாக் களுக்கும், கலிப்பாக்களுக்கும், ஆசிரியப்பாக்களுக்கும் வழி விடுகின்ற விருத்தப்பாவாகத் தான் இங்கே வந்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

### பாராட்டு

இந்த விழா என்னுடைய நினைவு களை 1989 ஆம் ஆண்டுக்குத் துரத்துகின்ற வகையிலே அமைந்துள்ள விழாவாகும். தருமபுரி மாவட்டத்தில் இந்த ஆட்சியில் 1989 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சீரிய, சிறப்பான திட்டம்தான் மகளிருக்கான சுய உதவிக் குழுக்களைத் தோற்றுவித்த திட்டமாகும். அதைத் தோற்றுவித்த காரணத்தால், அதனுடைய தொடர் வளர்ச்சியைத் தொடங்கிய முதல் இன்று வரையிலே நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு இன்றைக்கு 'மணிமேகலை விருது' வழங்குகின்ற அளவிற்கு பெருமையும் மாண்பும் உருவாகியிருக்கின்றது என்பதை அறியும்போது இந்த மாண்பினையும், பெருமையையும் உருவாக்கியது நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் என்பதையும், அவருக்குத் துணையாக இருக்கின்ற ஷெட்டி போன்ற அதிகாரிகள் என்பதையும் நான் எண்ணிப்பார்த்து, நான் அவர்களையெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நான் வந்து அமர்ந்தது முதல் இதுவரையிலே பேசியவர்கள், பேச்சைப் படித்தவர்கள், வாழ்த்திய வர்கள் அத்தனை பேருடைய நாவிலும் நடனமாடிய ஒரு சொல் – இலட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் – என்பதுதான். இப்படி லட்சக்கணக்கிலே, கோடிக் கணக்கிலே பணம் புழங்கிக் கொண்டிருக்கின்ற இடமாக, இந்த இடம் மாறியதற்குக் காரணமே, பணத்தை வைக்க வேண்டியவர் வைத்து, கொடுக்க வேண்டிய இடத்திலே கொடுத்து, பெற வேண்டிய நேரத்திலே பெற்று, அதைப் பாதுகாக்கின்ற அமைப்பாக இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்ற அமைப்புகள் இன்றையதினம் இருக்கின்றன. இதே முறையில் இதே வகையில், இதே நிலையில், இதே கட்டுப்பாட்டுகளோடு, சட்டதிட்டங் களோடு, விதிமுறைகளோடு தம்பி ஸ்டாலின் பேசும்போது குறிப்பிட்டதைப்போல – ஆடவர் பங்கு பெறுகிற திட்டமாக இது அமைந்திருக்குமேயானால், பல சோடை சொத்தைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் இது பெண்களுடைய சுய உதவிக் குழுக்களாக அமைந்து, அவர்கள் பாடுபட்டுப் பணியாற்றி, அக்கறையோடு, ஆர்வத்தோடு அவர்கள் இந்தக் காரியத்திலே ஈடுபடுகிற காரணத்தால் பணம் பத்திரமாகவும் இருக்கிறது, பாதுகாப்பாகவும் இருக்கிறது. தன்னைப் பெருக்கிக் கொள்கிற அளவிற்கு வளர்கின்ற அளவிற்கு வளர்ச்சி பெற்று வருகிறது என்பதை நான் அறிந்து இந்தத் தாய்மார்களை யெல்லாம் மிக மிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் – இன்றைய நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் ஒரு ஐந்து இடங்களில் – கூட்டமைப்புகளில் – மணிமேகலை விருது என்று வழங்கப்பட் டிருக்கின்றது. ஒவ்வொரு விருதும் ஒரு இலட்ச ரூபாயோடு இணைத்து வழங்கப்படுகின்ற விருதுத் தொகை என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். ஆர்வத்தை, அக்கறையைத் தூண்டக் கூடிய ஒன்றாகும்.



## அண்ணாவின் பொன்மொழி

### பெண் கல்வி வேண்டும்!

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.




இந்த ஐந்து முக்கியமான விருதுகளை மணிமேகலை விருதுகளைப் பெற்றவர்களுக்கு ஒரு இலட்ச ரூபாய் வீதம் வழங்கப்பட்டதில், அதனைப் பெற்றவர்கள் எந்தெந்த ஊர்க்காரர்கள் என்று பார்த்தேன். திருவாரூர் மாவட்டம் – திருவாரூர் மாவட்டம் யாருடைய மாவட்டம் என்பது உங்களுக்குத் தெரியும், எங்கள் மாவட்டம். திருவாரூர் மாவட்டத்திற்கு மாத்திரமல்ல, அடுத்து விருது பெற்றது, காஞ்சிபுரம் மாவட்டம், அடுத்து விருது பெற்றது விருதுநகர் மாவட்டம், திருவாரூர் மாவட்டம், கருணாநிதி பிறந்த மாவட்டம் – காஞ்சிபுரம் மாவட்டம், கருணாநிதியை ஆளாக்கிய அண்ணா பிறந்த மாவட்டம் – விருதுநகர் மாவட்டம் எங்களுக்கு முன்பிருந்து அரசு புரிகின்ற இலக்கணத்தைக் கற்பித்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த மாவட்டம் இப்படி மூன்று தலைவர்கள் பிறந்த மாவட்டங்களில் இந்தத் திட்டம் செழிப்புற வளர்ந்து, ஐந்து கூட்டமைப்புகள் மணிமேகலை விருதைப் பெற்றிருப்பதற்காக நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுகளை வழங்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நிலை எப்படி வந்தது? சுய உதவிக் குழுக்கள் அதிலும் குறிப்பாக மகளிர் சுயஉதவிக் குழுக்கள் – அவர்கள் திறமையாகச் செயல்படுவார்களா என்ற அய்யப் பாடு இருந்தாலுங் கூட – அதையும் மீறி செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை பிறந்து, அந்த நம்பிக்கை வெற்றிகரமாக இன்றைக்குச் செயல் படுகிறார்கள் என்ற செய்தியை நமக்குச் சொல்கிறது என்றால், இதற்கு நான் எப்படி 89 ஆம் ஆண்டு, தருமபுரியில் இந்த சுய உதவிக் குழுக்கள் அமைவதற்கு நான் இருந்த, நான் நடத்திய ஆட்சி காரணமாக அமைந்ததோ, அதைப் போலத்தான் இந்தியாவில் வங்கிகளை தேசியமயமாக ஆக்குகின்ற இந்தத் திட்டமும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தூண்டுதலால்தான் – கோரிக்கையால்தான் ஏற்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**வங்கிகள் தேசிய மயம்**

இன்றைக்கு சுய உதவிக் குழுக்களால் ஆதாயம் பெறுகின்ற யாராக இருந்தாலும், அவர்கள் மகளிராக இருந்தாலும், அந்த மகளிருக்கு உதவிகளைச் செய்கின்ற வங்கித் தலைவர்கள், வங்கி நிருவாகிகளாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் மறந்து விடாமல் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று – 1969 ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்து, மறைந்த பிறகு, அந்தப் பொறுப்பு என்னுடைய தோளிலே சுமத்தப்பட்டது. நான் முதன் முதலாக டெல்லிப் பட்டிணத்திற்கு – அங்கே நடைபெற்ற முதல் அமைச்சருடைய மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர், இந்தியாவின் பிரதமர், அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்: அப்போது துணைப் பிரதமராக இருந்தவர் மொரார்ஜி தேசாய். அந்த மாநாட்டிலே நான் பேசும்போது குறிப்பிட்டேன், சேலம்



## அண்ணாவின் பொன்மொழி

### தமிழ்

தமிழைத் தக்க முறையில் பயன்படுத்தும் பணியில் அரசுத் துறையினர் மட்டுமல்ல வேறுபல துறைகளைச் சேர்ந்தவர்களும் மும்முரமாக ஈடுபட்டிருப்பது தமிழுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

**– அறிஞர் அண்ணா**

இரும்பாலை, சேது சமுத்திரத் திட்டம் – இவைகள் எல்லாம் எங்கள் தமிழ்நாட்டிற்குத் தேவை என்பதைக் குறிப்பிட்டுவிட்டு, பொதுவான பொருளாதாரத் திட்டங்களைப் பற்றி அந்த முதல் அமைச்சர்கள் மாநாட்டிலே பேசும்போது, நான் உறுதிபடச் சொன்னேன் – நீங்கள் இந்தியாவிலே இருக்கின்ற பெரிய வங்கிகளையெல்லாம் தேசிய மயமாக ஆக்குங்கள், அப்படிச் செய்தால் ஏழையெளியவர்களுக்கு பணம் கிடைக்கும், கடன் கிடைக்கும், உழவர்களுக்கு, வணிகர்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, சாமானியர் களுக்கு, சாதாரணமானவர்களுக்கு சுலபமாக கடன் கிடைக்கும், அந்தக் கடனும் ஒழுங்காக வந்து சேரும், பயத்தோடு வந்து சேரும், பாசத்தோடு வந்து சேரும், நன்றி உணர்வோடு திரும்பக் கிடைக்கும், ஆகவே நீங்கள் வங்கிகளை தேசியமயமாக ஆக்க வேண்டும் என்ற திட்டத்தை அன்றைக்கு அறிவித்தேன். அந்த முதலமைச்சர்களுடைய மாநாட்டில் மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் அஜாய் முகர்ஜியும் அமர்ந்திருந்தார். அந்த மாநிலத்தின் துணை முதல் அமைச்சர் தோழர் ஜோதிபாசும் வந்திருந்தார். அவர்கள் யாரும் எழுப்பாத இந்தக் குரலை அண்ணாவின் தம்பியாகிய நான்தான் அன்றையதினம் அந்த மாநாட்டிலே – முதலமைச்சர்கள் மாநாட்டிலே எழுப்பினேன். அதை இந்திரா காந்தி அம்மையார் ஏற்றுக் கொள்வது போல தலையசைத்து புன்னகை புரிந்து ஆமோதித்து வரவேற்கின்ற முக ஜாடையையும், காட்டினார். ஆனால் அவருக்குப் பக்கத்திலே இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள், துணைப் பிரதமர் ஏற்றுக் கொள்ளவில்லை மறுத்துப் பேசினார். நான் முதல் நாள் பேசியது, மறுநாள் காலையிலே, டெல்லியிலே உள்ள தினசரிப் பத்திரிகைகள் ஆங்கிலம் மற்றும் இந்திப் பத்திரிகைகளிலேயும் தலைப்புச் செய்தியாக – தமிழ்நாடு முதலமைச்சர் வங்கிகளை தேசிய மயமாக ஆக்க வேண்டும் என்று வற்புறுத்தினார் – என்று வெளியிட்டிருந்தார்கள். அதற்கு அடுத்த நாள்தான், பேசுவதற்கு மீண்டும் ஒரு முறை நேரம் கேட்டுப் பெற்று – தோழர் ஜோதிபாசு அவர்கள், முதல்நாள் அஜாய் முகர்ஜி, மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் பேசாததை, இவர் பேசியபோது, நான் பேசியதை வழிமொழிவதைப்போல பேசினார். அதற்குப் பிறகு, சில மாதங்களுக்குப் பிறகு இந்திரா காந்தி அம்மையார் வங்கிகளை தேசியமயமாக ஆக்கி ஆணை பிறப்பித்தார்கள்.

இன்னும் உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டுமேயானால் – இந்திரா காந்தி அம்மையார் அவர்களை முதன் முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், தமிழகத்திற்கு அழைத்து குறிப்பாக தலைநகரம் சென்னைக்கு அழைத்து ராஜாஜி மண்டபத்து வாயிற்புறத்திலே பேச வைத்து, 14 வங்கிகளை தேசிய மயமாக்கினார்கள் என்பதற்காக 14 பொருட்களை, தமிழகத்திலே கிடைக்கக் கூடிய சின்னங்களை, மாமல்லபுரம் கோயில், நடராஜர் சிலை என்று இப்படி 14 பொருட்களை இந்திரா காந்தி அம்மையாருக்கு, 14 வங்கிகளை தேசியமய மாக்கினார் என்பதற்கு அடையாளமாக பரிசாகத் தந்தவன் இந்தக் கருணாநிதி தான் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், என்னைப் பெருமைப் படுத்திக் கொள்வதற்காக அல்ல. இதற்கு மூலவேர், பணம் புழங்க, ஏழைகளுக்கு தங்கள் கைகளிலே கடன் கிடைக்க, சாதாரணமான

வர்கள், பாட்டாளிகள், உழைப்பாளிகள் இவர்கள் எல்லாம் பல தொழில்களை நடத்த, வசதியுடன் காரணம் – அந்த மூலக் காரணத்திற்கு மூலமாக இருந்தது முன்னேற்றக் கழகம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

இப்போது சில பேர் சொல்லக் கூடும் – கருணாநிதி பிற்போக்கு வாதி, கருணாநிதிக்கு கம்யூனிசம் தெரியாது, கருணாநிதிக்கு சமதர்மம் தெரியாது, கருணாநிதிக்கு சமத்துவக் கொள்கை புரியாது, எல்லாவற்றையும் நாங்கள்தான் நாட்டிலே சமைத்து பரிமாறிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லலாம். சமைக்கத் தெரியும் அவர்களுக்கு, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பரிமாறத் தெரியாது. யாருக்குப் பரிமாற வேண்டும், முதலில் எப்படி சமைக்க வேண்டும் என்ற அந்தக் கலை தெரிந்து அதைச் சமைத்துப் பரிமாறிய பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத்தான் முதன் முதலாக உண்டு. 1969 ஆம் ஆண்டிலேயே அதற்கு வழிகாட்டி, அன்னை இந்திரா காந்தி இடத்திலே வலியுறுத்தி, மொரார்ஜி தேசாய் மறுத்தும் கூட, அதற்கு இடம் தராமல், முதன் முதலாக இந்தியாவிலே வங்கிகளை தேசிய மயமாக ஆக்கிய அந்தப் பெருமை, அதற்குக் காரணமாக இருந்த பெருமை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு என்பதற்காகத் தான் இதை நான் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

இப்படி மக்கள் பணம் இது – வங்கியிலே இருக்கின்ற பணம் என்றால் – அது மக்கள் பணம். மக்களுக்காகச் செலவழிக்கப்பட வேண்டிய பணம். மக்களுடைய தேவைகளுக்காக – அவர்களை வாழ வைப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய பணம். அதை ஒழுங்குற, செம்மையுறப் பயன்படுத்துகின்ற நிலைக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்து இருப்பதுதான் சுய உதவிக் குழுக்கள்.

இந்தச் சுய உதவிக் குழுக்களின் சார்பாக வழங்கப் படுகின்ற விருதுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று தம்பி ஸ்டாலினும் அதிகாரிகளும் கேட்டார்கள். நல்ல முறையில் செயல்படுகின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பரிசுகள் வழங்கப்போகிறோம், அந்த விருதுகளுக்கு என்ன பெயரிடலாம் என்றார்கள். பொதுவாக நான் வீட்டிலிருந்து வெளியே வரும்போதோ, அல்லது அலுவலகத்திற்குச் செல்லும் போதோ என்னிடம் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வந்து காட்டி பெயர் வையுங்கள் என்று தாய்மார்கள் கேட்பது வழக்கம். அதைப்போல இந்தச் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் விருதுகளுக்கு என்ன பெயர் என்று கேட்டார்கள்.

நான் அப்போது சொன்னேன் – பெண்களிலே தனக்கென்று – தன்னுடைய சுகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் – தன்னுடைய வாழ்க்கையைப் பற்றிக் கவலைப் படாமல் – பிறரை வாழவைக்க – அதிலும் குறிப்பாக ஏழையெளியோரை வாழவைக்கப் பாடுபட்ட பெண்மணி மணிமேகலைதான், அந்த மணி மேகலையின் பெயரை வையுங்கள் என்று நான் சொன்னேன். அந்தப் பெயரை வைத்து இன்றைக்கு மிகச் சிறப்பாக மாப்புகழ் கொண்ட மணிமேகலையினுடைய சிறப்பு மேலும் ஓங்குகிற அளவிற்கு இந்த அரசின் சார்பாக தம்பி ஸ்டாலினும், அவருடைய அதிகாரிகளும் சிறப்பாக ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, தக்கவர்களுக்கெல்லாம் இந்த விருதினை வழங்கியமைக்காக என்னுடைய பாராட்டுகளையும், மகிழ்ச்சியையும், வாழ்த்துகளையும் வழங்கி விடைபெறுகிறேன்.

* * *



## அண்ணாவின் பொன்மொழி

### அயல்நாட்டுப் பயணம்–ஏன்?

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்துகொள்ளாதது பழைய காலப்பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்துகொள்ள விழைகிறோம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறோம். அத்தனை ஆர்வம் உள்ளது. அங்கு காணுகின்றவற்றைத் தெரிந்தவகையில் புகுத்தலாம் என்பதை நம்மவர்கள் தெரிந்துகொள்ள இந்த அயல்நாட்டுப் பயணங்கள் துணையாக இருக்கும்.




# இதுவரை 60 இலட்சத்து 63 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டு 3,78,564 சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருது மற்றும்
சுழல்நிதி வழங்கும் விழாவில் (25.11.2008)
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை:–

இந்த சிறப்பான விழாவில், 3,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியத்தை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுள்ள இந்த விழாவிலே வழங்குவதற்கும், அதேபோல நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் சுயஉதவிக் குழுக்களுக்கு சிறப்பான திட்டங்களை, பல்வேறு சலுகைகளை வழங்கவேண்டுமென்று நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முடிவு எடுத்து, சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்க வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அவர்களுக்கு மாவட்ட அளவிலே, வட்டார அளவிலே, கிராம அளவிலே விருதுகளை வழங்கி சிறப்பிக்க வேண்டுமென்று, நம்முடைய துறைக்கு ஆணையிட்டு, அதை நிறைவேற்றுகின்ற வகையில் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் மணிமேகலை விருது என்ற சிறப்பான விருதினைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

### இந்தியாவிலேயே முதலிடம்

நம்முடைய கலைஞர் அவர்களின் கரங்களால், இங்கே மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கிறது. மகளிர் சுயஉதவிக்குழு முதன் முதலில் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை 1989ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், அன்று முதலமைச்சர் பொறுப்பில் இருந்தபோது, தருமபுரி மாவட்டத்திலே தொடங்கி வைத்தார். தொடங்கி வைத்த நேரத்தில் அன்றைக்கே நம்முடைய முதல்வர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்படுவதன் காரணம் – அரசியல் நோக்கத்தோடு அல்ல, கட்சியினுடைய வளர்ச்சிக்காக அல்லது தேர்தல் நேரங்களில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல. நம்முடைய தாய்மார்கள், சகோதரிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களில்

## தாய்நாடும் – தாய்மொழி பிறந்தநாடும்

உலகு எங்கும் தமிழர்கள் பரவி வாழ்கிறார்கள். அவர்கள் எந்த நாட்டில் குடிமக்களாகி வாழ்கிறார்களோ அந்த நாடுதான் அவர்களுடைய தாய்நாடாகும். மலேசிய நாட்டில் வாழும் தமிழ் மக்களாகிய உங்களுக்கு தாய்நாடு மலேசிய நாடுதான். தமிழ்நாடு உங்கள் தாய்மொழி பிறந்தநாடு.

– அறிஞர் அண்ணா

தங்களை ஒப்படைத்துக்கொண்டு அவர்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ்ந்திட வேண்டும், யாரையும் எதிர்பார்க்காமல் அவரவரவர்கள் சொந்தக் காலிலே நிற்கக் கூடிய ஒரு சூழ்நிலையை பெற்றாக வேண்டும். அவர்களின் வாழ்க்கையினை முறைப்படுத்திக்கொண்டு, அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதிகளில், வட்டாரங்களில், அந்தந்த சூழ்நிலைக்கேற்ப அவரவரவர்கள் சிறுசிறு தொழில்களைச் செய்ய, அதற்குத் தேவையான பணம், தேவையான நிதியை வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியிலே கடனாகப் பெற்று, அவர்கள் தங்கள் வாழ்க்கையினை வளமாக்கிக்கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு தொடங்கப்பட்ட அமைப்புதான் இந்த மகளிர் சுய உதவிக்குழு.

அப்படிப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு படிப்படியாக வளர்ந்து கம்பீரமாக இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலே இருக்கின்ற முதலிடம் பெற்றுள்ள மாநிலங்களிலே தமிழகமும் இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மகளிர் திட்டத்தின்கீழ், இதுவரை 60 இலட்சத்து 63 ஆயிரம் உறுப்பினர்களைக்கொண்டு 3,78,564 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 2,64,165 குழுக்கள் ஊரகப் பகுதியிலும், 1,14,399 குழுக்கள் நகரப் பகுதியிலும் செயல்பட்டு வருகின்றன. இன்னும் சிறப்பாகச் சொல்வதென்றால், 5ஆம் முறையாக தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுக் காலத்தில், 60 ஆயிரத்து 826 சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை, நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மேயர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல், கடந்த கால ஆட்சி நடைபெற்றபோது, இதே மகளிர் சுயஉதவிக் குழுக்கள் எந்த நிலையில் இருந்தது என்பதை மறந்திருக்க மாட்டீர்கள், ஆனால் 1989ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக்குழு தொடங்கி வைக்கப்பட்ட போது சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சிக்கான தொகையை தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு 45 ரூபாயாக வழங்கினார்கள். ஆனால் கடந்த கால ஆட்சியில் ரூபாய் 45லிருந்து, வெறும் ரூ.7.50 ஆக குறைக்கப்பட்டது. இதனால்தான் 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், தேர்தலைச் சந்தித்தபோது, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், கழகம் ஆட்சிக்கு வந்தால், எங்களை நம்பி வாக்களித்து எங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்தால் என்ன என்ன வாக்குறுதிகளை தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொல்லப்பட்டதோ, அவைகள் எந்த அளவிற்கு காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

### பல்வேறு சலுகைகள்

மீண்டும் கழகம் ஆட்சிக்கு வந்தால், 89ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பயிற்சிக்கான கட்டணத்தை மீண்டும் நாங்கள் வழங்குவோம் என்று தேர்தல் நேரத்தில் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்தார்கள். மீண்டும், தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயிற்சிக்கான கட்டணமாக ரூ.45ஐ தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்ல, குழுக்களின் பராமரிப்புத் தொகை, பயிற்சிக்கான காலம் ஆகியவைகள் முறைப்படுத்தப்பட்டு, பல்வேறு சலுகைகள், பல சாதனைகள், நம்முடைய மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்காக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

2006ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், சுய உதவிக் குழுக்களிடமிருந்து சுழல் நிதி மானியம் ஊரகப் பகுதிகளிலே இருக்கின்ற குழுக்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி மீண்டும் வந்தபிறகு, நகர்ப்புற,

மாநகர் ஆகிய பகுதிகளிலே உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியத்தை வழங்கவேண்டுமென்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டு, அதை இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டு வருவது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

அது மட்டுமல்ல இந்தத் துறையினுடைய பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், தமிழகம் முழுவதும் இருக்கின்ற மாவட்டங்களில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, ஆய்வு நடத்தியபோது, பொதுமக்கள் ஒரு கோரிக்கையை தொடர்ந்து எங்களிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் அனைவரும் அந்தக் கோரிக்கையை தொடர்ந்து சுட்டிக்காட்டினார்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் நம்மிடத்திலே மனுக் கொடுத்தார்கள்.

**உடனடியாக நிதி ஒதுக்கீடு**

என்னவென்று கேட்டால், இவற்றில் தகுதி பெற்றிருக்கக்கூடிய சுயஉதவிக் குழுக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால், தகுதி பெற்றிருக்கக்கூடிய பல குழுக்களுக்கு இன்னும் பல சுழல்நிதி வரப்பெறவில்லை என்பதுதான். இது தொடர்பாக அதிகாரிகளை வரவழைத்து ஆய்வு மேற்கொண்டு, அது உண்மைதான் என்பதைத் தெரிந்து கொண்டோம். ஏறக்குறைய 1 இலட்சத்து 50 ஆயிரம் குழுக்கள் தகுதி பெற்றிருந்தும் சுழல் நிதி கிடைக்கப்பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தோம். இதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக 150 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்தார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏறக்குறைய 1 இலட்சத்து 50 ஆயிரம் குழுக்கள் தகுதி பெற்றிருந்தும் சுழல் நிதி கிடைக்கப்பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தோம். இதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக 150 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்தார்கள்**

இங்கே, இந்தியன் வங்கியின் தலைவர் அவர்கள், தங்கள் வங்கிகள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்கள் அனைத்தும், அதாவது 100க்கு 99 சதவிகிதத்தை அவர்கள் திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்தார்கள். 100க்கு 99 சதவிகிதம் பேர் இன்றைக்கு கடனைத் திருப்பிச் செலுத்தி இன்றைக்கு ஒரு பெருமையை, உங்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்திற்கே நீங்கள் பெருமையைச் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**19 ஆண்டு கால வரலாறு**

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு இன்றைக்கு வங்கிக் கடன்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கடன் வழங்கிக் கொண்டிருக்கின்ற கணக்கைப் பார்த்தால், சுமார் 29 இலட்சத்து 25 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு 18 ஆயிரத்து 41 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியிருக்கிறது. இதில் தமிழகத்திற்கு மட்டும் 4 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 4 ஆயிரம் கோடி வரை கடன் வந்துள்ளது என்று சொன்னால், இதனை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 4 ஆயிரம் கோடி வரை கடனாக வங்கிகளிலிருந்து இன்றைக்குத் தமிழகம் பெற்றிருக்கிறது என்று சொன்னால் இது 19 ஆண்டு கால வரலாறு.

ஆனால், இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 2,000 கோடி ரூபாயை சுய உதவிக் குழுக்காக வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்கிறோம் என்றால், இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மீது வங்கிகள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் இது எடுத்துக் காட்டுகின்றது என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அது மட்டுமல்ல, தேசிய அளவிலே இந்தியன் வங்கியைப் பொறுத்தவரையிலே ஒரு கணக்கு, அதாவது 2 இலட்சத்து 64 ஆயிரத்து 825 சுய உதவிக் குழுக்களுக்கு 1 இலட்சத்து 864 கோடியே 87 இலட்சம் ரூபாய் இந்திய வங்கி கடனாக அளித்துள்ளது. ஆகவே, அதில் தமிழகத்திற்கு மட்டும் 1,159 கோடி ரூபாயைக் கடன் உதவியாக இந்தியன் வங்கி தந்துள்ளார்கள். ஆகமொத்தம் 62 சதவிகிதம் தமிழகத்தில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் தந்திருக்கின்றார்கள். மேலும்,

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியானது இந்தியா முழுவதும் அவர்களால் வழங்கப்பட்டுள்ள கடன் பகுதியில் 48 சதவிகிதம் நம்முடைய தமிழகத்திற்குக் கடனாக வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் இதைத்தான் நீங்கள் சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதோடு, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் கையால் இன்றைக்கு விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், அது எதற்கு என்று கேட்டால், சுய உதவிக் குழுக்களுக்கென்று ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டது. ஆக, அந்தக் கூட்டமைப்பினை உருவாக்கியதன் காரணத்தினால், குறிப்பாக முதன் முதலில் நாகை

**இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 2,000 கோடி ரூபாயை சுய உதவிக் குழுக்காக வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்கிறோம் என்றால், இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மீது வங்கிகள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் இது எடுத்துக் காட்டுகின்றது**

தமிழகத்தில் தொடங்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள் என்றால் இந்திய வங்கி தமிழகத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளது. இதற்கு காரணம் மகளிர் சுய உதவிக் குழுவுடைய உங்கள் நோக்கம்தான், உங்கள் எண்ணம்தான், உங்கள் வெற்றிதான் என்று எடுத்துச் சொல்லி, உங்களை அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.




மாவட்டத்திலேயே 5 தொகுதிகளாக இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப் பட்டுள்ளன. அந்தக் கூட்டமைப்பினால் என்ன பயன் என்று கேட்டால், பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலம் இந்த வட்ட அமைப்பு களுக்கு அதிக பட்சமாக கடன் வழங்கப்படுகிறது. ஆகவே, இதனை இங்கே வந்திருக்கக்கூடிய நீங்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்தியா முழுவதும் சுய உதவிக் குழுக்களுக்காக தனியாக 15 வங்கிகள் தொடங்கவிருப்பதாகவும், அதில் 10 வங்கிகள்

இந்த அரசும், இந்த வங்கிகளும், இன்றைக்கு உங்களுக்காக பல பணிகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. அவற்றை நீங்கள் சிறப்பான முறையிலே முறையாகப் பயன்படுத்திக் கொண்டு, இந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றக்கூடிய உந்து சக்தியாக இருக்கக் கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலே அமைத்திருக்கக்கூடிய உங்களுடைய ஆட்சிக்கு தொடர்ந்து என்றும் துணை நிற்க வேண்டும், தொடர்ந்து உங்கள் நல்லாதரவை வழங்கி உங்களுடைய வாழ்க்கைத் தரத்தை நீங்கள் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று உங்களை அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

★ ★ ★

# உடன்குடி 2 x 800 மெகாவாட் அனல் மின் திட்டம் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 26.10.2007 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய அரசு நிறுவனமான பாரத மிகு மின் நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில், தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில்

இத்திட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம், பாரதமிகு மின் நிறுவனம் (பி.எச்.இ.எல்) மற்றும் பிற நிதி நிறுவனங்கள் முதலீடு செய்கின்றன. இத்திட்டத்திற்கான முக்கிய இயந்திரங்கள் பி.எச்.இ.எல் நிறுவனத்திடமிருந்து பெறப்படவுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியம் இத்திட்டத்தைச் செயல்படுத்தி மின் நிலையத்தை இயக்கும்.

இத்திட்டத்திற்கான கூட்டு நிறுவனம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கூட்டு நிறுவனத்திற்கு, உடன்குடி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டு முயற்சி வரைவு ஒப்பந்தத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான கூட்டு நிறுவன ஒப்பந்தம் (Joint Venture Agreement) 26.11.2008 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைவர்



2×800 மெகாவாட் திறனுள்ள மிக உயரிய அனல் மின் திட்டம் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 8,700 கோடியாகும்.

திரு. சு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., மற்றும் பாரத மிகுமின் நிறுவனத்தின் தலைவர் திரு. கி. ரவிக்குமார் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., எரிசக்தித்துறைச் செயலாளர் திருமதி. ஸ்மிதா நாகராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உறுப்பினர் (மின்உற்பத்தி) திரு. பாலசுப்பிரமணியன், முதன்மைப் பொறியாளர் திரு. எஸ். ராஜேந்திரன், பாரத மிகுமின் நிறுவனத்தின் இயக்குநர் (நிதி) திரு. சி.எஸ். வர்மா, பொது மேலாளர்கள் திரு. டி.என். வரதராஜன், திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், திரு.பி. அருண்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இத்திட்டத்திற்கு உடன்குடி கிராமத்தில் 760 ஏக்கர் பரப்பளவில் உள்ள அரசு புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. தமிழக அரசு மேற்படி நிலத்தில் திட்டம் தொடர்பான பணிகளை செய்வதற்கு நுழைவு அனுமதி 29.02.2008இல் வழங்கியுள்ளது.

கள ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேற்படி நிலத்தில் உள்ள முட்புதர்கள் அகற்றும் பணி நடைபெறுகிறது. ஆழ் கடல் துளை குழி ஆய்வுப்பணி (Marine Bore Hole Study) ஏற்கெனவே நிறைவு பெற்றது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்வதற்கு 13.2.2008 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. சுற்றுச்சூழல் ஆய்வுப் பணி முடிக்கப்பட்டு, சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் பொதுமக்கள் கருத்து கேட்பு நடத்தப்படும்.

இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வதற்கு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Report) இறுதி செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) இறுதி செய்யப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கான நிலக்கரி கப்பல்கள் மூலம் கொண்டுவரப்படும் என்பதால், கடலில் தளம் அமைப்பதற்கான ஆய்வு செய்யும் பணியை ஐ.ஐ.டி., சென்னை நிறுவனம் ஆய்வு செய்து அறிக்கை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் முதல் யூனிட் மார்ச் 2012லும் இரண்டாவது யூனிட் செப்டம்பர் 2012லும் இயக்கப்படவுள்ளது. ❖


---

## ஆதிதிராவிட விவசாயிகள்
## தாட்கோவில் பெற்ற
## கடன் முழுவதையும்
## நீக்கம் செய்து
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
## கலைஞர் அவர்கள்
## ஆணை

2008–2009ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட விவசாயக் கடன்கள் இரத்து செய்யப்பட்டதைப் போன்றே, ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்திடமிருந்து பெற்று நிலுவையில் உள்ள விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பினையொட்டி, ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் (தாட்கோ) விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்துள்ள பணிகளுக்காகவும்; விவசாய நிலத்தை உழுவதற்கான இயந்திரம், விவசாயப் பண்ணை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, துளையிடும் இயந்திரம் போன்ற விவசாயத் திட்டங்களுக்காகவும் ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை 3 கோடியே 47 இலட்சம் ரூபாய்; கடன் தொகை மீதான வட்டி 59 இலட்சம் ரூபாய்: அபராத வட்டி 1 கோடியே 19 இலட்சம் ரூபாய் – ஆக மொத்தம் 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் முழுவதையும் ஆதிதிராவிட விவசாயிகளின் நலன் கருதி நீக்கம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

# இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும்



## தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம்

தமிழக சட்டப்பேரவையில் 12–11–2008 அன்று, அவை முன்னவரும் நிதியமைச்சருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் "பேரவை விதி 185(2) மற்றும் 190–ஐ தளர்த்தி 12–11–2008 அன்று, அரசினர் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் என்று கூறினார். இதனையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்தார். அந்தத் தீர்மானம் வருமாறு :

ஏறத்தாழ நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை; பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் முடிவுக்கு வராமல், அந்த மண்ணின் மைந்தர்களாம் தமிழின மக்களின் உயிர், உடைமைகள் எதற்கும் உத்திரவாதமில்லாமல்; அவர்களின் குடும்பங்கள், குழந்தை குட்டிகள் என இலட்சக்கணக்கானோர் அகதிகளாக அயல் நாடுகளுக்கு ஓடியவர்கள் போக எஞ்சியிருப்போர், எந்த நேரத்திலும் மரணத்தை எதிர்பார்த்து துடித்துத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலை குறித்து முடிவெடுக்க அக்டோபர் 14ஆம் தேதி நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் தீர்மானத்திற்கிணங்க; கடலில் எல்லை வகுக்கப்பட்டு ஓர் உடன்பாட்டின் மூலம் தமிழக மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும், உரிமைக்கும் பாதுகாப்பு வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டாலும் நமது பக்கத்து நாட்டிலேயே நமது உடன்பிறந்த தமிழ் மக்கள், நித்த நித்தம் சிந்தும் ரத்தமும் வடிக்கும் கண்ணீரும் நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சிகளாகிவிட்ட கொடுமைக்கிடையே; இந்தியப் பேரரசின் உதவியுடன் இலங்கைத் தமிழர்களுக்கான உணவு, உடை, மருந்து போன்ற அத்யாவசியப் பொருள்களை, தமிழகத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகளின் வாயிலாக அனுப்பி வைக்கிறோம் எனினும்; அவர்களுக்கு இந்த உதவிகள் மட்டும் போதுமானதல்ல.

அவர்களின் உயிர், உடைமை ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு, இலங்கையில் அமைய வேண்டிய அமைதி நிறைந்த சமநிலை வாழ்வு, இவை அங்குள்ள தமிழர்களுக்கு உறுதி செய்யப்படவேண்டும். அதற்கான அழுத்தமான நடவடிக்கையை நமது இந்திய மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் இந்த அவல நிலை உலகெங்கிலும் வாழும் தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக வரலாற்று ரீதியாகவும், கலாச்சாரம் மற்றும் பண்பாடு ரீதியாகவும் ஒன்றாக உள்ள ஏழு கோடி இந்தியத் தமிழர்களின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதன் விளைவாகத் தமிழகத்தில் அனைத்து அரசியல் இயக்கங்களும், அரசியல் சார்பற்ற அமைப்புகளும், ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி, இலங்கை அரசுக்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. மாணவர்கள், வணிகர்கள், திரைப்படக் கலைஞர்கள், திரைப்படத் தொழில் நுட்பக் கலைஞர்கள், சின்னத்திரை கலைஞர்கள், தொழிலாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் என எல்லாத் தரப்பினரும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறார்கள்.

அரசு சார்பில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து சென்னையில் வரலாறு படைத்த மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்தி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய மாபெரும் நிகழ்ச்சி மறக்கவொண்ணாதது.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் நீங்க வேண்டுமானால், அங்கு உடனடியாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். இது உலகத் தமிழர்களின் ஏகோபித்த விருப்பமாகும்.

போர் நிறுத்தம் என்பது இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என தமிழக முதலமைச்சர் வெளியிட்ட கருத்தைத் தொடர்ந்து, போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கு நாங்கள் தயார் என்று மற்றொரு தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், இலங்கை அரசும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டு உடனடியாகப் படைகளைப் பழைய நிலைக்கு விலக்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் தமிழர்களின் கோரிக்கைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்துகிறது.

இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசை போர் நிறுத்தத்திற்கு இணங்க வைத்து தமிழர் பகுதிகளில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு சட்டப்பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. ★

# 80 ஆயிரம் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் டன் எடையுள்ள நிவாரணப் பொருள்கள்




இலங்கையில் பாதிப்புக்கு ஆளாகியிருக்கும் தமிழர்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, நிதி உதவிகளும், நிவாரணப் பொருள்களும் இதுவரையில் பத்து கோடி ரூபாய் அளவுக்கு தமிழக அரசுக்கு வந்து சேர்ந்துள்ளன.

அரிசி, பருப்பு, டீத்தூள், சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களுடன், குளிக்கும் சோப்பு, துவைப்பதற்கான சோப்பு, பற்பசை ஆகியனவும், வேட்டி, கைலி, சேலை, பெண்கள் அணியும் ஆயத்த ஆடை, துண்டுகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகிய துணி வகைகளும் அடங்கிய நிவாரணப் பொருட்கள் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்குவதற்காகத் தனித்தனியே சிப்பங்களாகத் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளன.

தமிழக அரசினால் முதல் கட்டமாக அளிக்கப்படும் ஏறத்தாழ 2,000 டன் எடையுள்ள இந்த நிவாரணப் பொருட்கள் சென்னையில் இருந்து கப்பல் மூலம் கொழும்பு துறைமுகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு இலங்கையில் உள்ள இந்திய நாட்டுத் தூதரிடம் ஒப்படைக்கப்படும். அவரிடமிருந்து இந்த நிவாரணப் பொருள்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர், இலங்கையில் பாதிப்புக்கு ஆளாகியிருக்கும் மக்களின் ஏறத்தாழ 80 ஆயிரம் தமிழர் குடும்பங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படும்.


இந்த நிவாரணப் பொருள்கள் கப்பல் மூலம் இலங்கைக்குக் கொண்டுசெல்லப்படுவதையும், அங்கு பாதிப்புக்கு ஆளாகியுள்ள தமிழ் மக்களுக்கு இவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்திய தூதரகம் மேற்கொள்வதையும் கண்காணிக்கும் பொறுப்பை மத்திய அரசின் வெளியுறவுத்துறை ஏற்றுள்ளது.

இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள இந்த நிவாரணப் பொருள்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6.11.2008 அன்று பார்வையிட்டார். அவ்வமயம் செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழுமத்தின் அலுவலர் திரு. தாமஸ் ரீஸ், மத்திய அரசின் வெளியுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரி திரு. ஐ.எம். பாண்டே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

✶ ✶ ✶

# மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலா ரூ.2 ஆயிரம் மற்றும் குடும்பத்திற்கு இலவசமாக பத்து கிலோ அரிசி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அறிவிப்பு



பெரும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல் தீர்த்திட பாதிக்கப்பட்டோருக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவியும், குடும்பத்திற்கு இலவசமாக பத்து கிலோ அரிசியும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்.

தமிழகம் முழுவதும் பெய்த பலத்த மழையினால் பல மாவட்டங்களில் வெள்ளம் கரை புரண்டோடியது. சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கினார்.

பல்வேறு மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக முதற்கட்டமாக நூறு கோடி ரூபாய் நிதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் நிவாரண உதவித் தொகையும், இலவசமாக குடும்பத்திற்கு பத்து கிலோ அரிசியும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இதுகுறித்து தமிழக அரசு 29.11.2008 அன்று வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழகத்தில் ஒரு வார காலமாக தொடர்ந்து பெய்து வரும் பெருமழை காரணமாக பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு – தலா 2000 ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து – அவ்வாறு நிதி உதவி பெறுவோருக்கு பத்து கிலோ அரிசியும் இலவசமாக வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29.11.2008 அன்று ஆணையிட்டுள்ளார்கள். ★

# சென்னையில் கொட்டிய மழையில்
# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று
# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினார்



சென்னை மாநகரத்தில் பெருமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 28.11.2008 அன்று பார்வையிட்டார்.


சென்னை மாநகரத்தில் 28.11.2008 அன்று காலை பெருமழையினால் பாதிக்கப்பட்ட கோட்டூர்புரம், காந்தி மண்டபம், சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், பெரம்பூர் ஆகிய பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். அந்தப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்ததுடன், நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கி ஊக்கப்படுத்தினார். காந்தி மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரொட்டிகள் வழங்கினார். அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகள் பற்றிய விவரங்களை மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெரம்பூரில் செய்தியாளர்களிடம் பேசும் போது, "மத்திய அரசு மாநில அரசுக்குத் தேவையான நிவாரண நிதி உதவிகளை வழங்கிடுமென்று எதிர்பார்க்கிறேன். தமிழ்நாட்டில் புயல்–தொடர்ந்து பெய்து வரும் பெருமழையினால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் மத்திய அரசுக்குத் தரப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் அதிகாலை நானே தொலைபேசியில் நேரடியாகத் தொடர்புகொண்டு, அந்தந்த மாவட்டங்களில் சேத விவரங்களைக் கேட்டறிந் துள்ளேன். மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு செய்ய வேண்டிய நிவாரண உதவிகள் அனைத்தும் உடனடியாகச் செய்யப்படும்" என்று கூறினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியம், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. ஆயிரம் விளக்கு உசேன், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் திரு. ராதாகிருஷ்ணன், இ.கா.ப., ஆகியோர் சென்றனர்.

தமிழகத்தில் வரலாறு காணா கனமழையினால் கடலோர மாவட்டங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளித்த நாகையருகே புயல் மையங் கொண்டதையடுத்து கடும் சூறாவளிக் காற்றுடன் பெரும் மழை கொட்டத் தொடங்கியது. தொடர்ந்து இரவு பகலாக இடைவிடாமல் பெய்த கடும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

புதுவை, கடலூர், நாகை, தஞ்சை மாவட்டங்களில் கடும் புயலுடன் 80 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய சூறாவளி காற்று மழையினால் ஏராளமான பயிர் நிலங்கள்



நீரில் மூழ்கின. கடலோர மாவட்டங்களில் குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர்கள் பல ஆயிரம் ஏக்கர் தண்ணீரில் மிதக்கின்றன. வெள்ளப் பெருக்கினால் சாலைகள் பழுதடைந்து போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் பள்ளிக் கூடங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஆங்காங்கு மாவட்ட நிருவாகங்கள் சார்பில் உணவு வழங்கப்பட்ட ஏராளமான மரங்கள் சாய்ந்தும், நூற்றுக்கணக்கில் கால்நடைகள் உயிரிழந்தும், பெரும் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளதுடன், இந்தப் பெரும் மழைக்கும் புயலுக்கும் 90–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் இரண்டு நாட்கள் விடுமுறை விடப்பட்டது. கடைகளும், வர்த்தக நிறுவனங்களும் செயல்பட முடியாத அளவிற்கு சூறாவளியுடன் கூடிய மழை நீடித்தது.

கடும் மழையைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் ஆகியோரை உடனே பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆங்காங்கு விரைந்து சென்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினர். பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

மேலும் 27.11.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளச் சேதங்கள் குறித்து விவாதித்ததுடன், மழையினால் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா ரூ.1 இலட்சம் நிதி வழங்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ.2 ஆயிரம் நிதிஉதவியும், மேலும் பாதிப்படைந்து, உடமைகளை இழந்தோருக்கு உடனடி நிவாரணமும் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள ரூ.100 கோடி நிதி ஒதுக்கியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இந்தச் சூறாவளி மழைக்குப் பெரிதும் பாதிப்படைந்த சுமார் 55 வட்டங்கள், 1,380 வருவாய் கிராமங்களில் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு 242 மையங்கள் திறக்கப்பட்டு அவர்களுக்கு உரிய நிவாரண உதவிகள் அரசின் சார்பில் வழங்கப்பட்டன.

அதுமட்டுமின்றி பெரும் மழையினால் பல ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கி அதனால் விவசாயிகள் பாதிப்படைந்தனர். பாதிப்படைந்த பகுதிகளை மத்திய அரசின் குழுவினர் பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு கேட்டுக்கொண்டதன் பேரில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் மத்திய அரசின் சார்பில் குழுவினை தமிழகத்திற்கு அனுப்பிட நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

சென்னை மாநகரில் கொட்டும் மழையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாநகர மேயர் மற்றும் அதிகாரிகளுடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிட தயாரிக்கப்படும் உணவுக் கூடங்களுக்குச் சென்று அதனையும் பார்வையிட்டு சோதித்துப் பார்த்து நல்லமுறையில் உணவு வழங்கிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மாண்புமிகு அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார். சென்னை மாநகரில் தென்சென்னை, வட சென்னை பகுதிகளில் இரண்டு நாட்களாக வெள்ளம் சூழ்ந்த பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு உடனடி நிவாரண உதவிகளை மக்களுக்கு வழங்கிட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

சென்னை நகரில் இரவு–பகல் என இடைவிடாது தொடர்மழை கொட்டிக் கொண்டிருந்தபோதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை 9 மணியளவில் மழை கொட்டிக்கொண்டும் சூறாவளிக் காற்று விட்டு விட்டு வீசிக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல்; வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

★

# பெருமழையால் பாதிக்கப்பட்ட

## தஞ்சை - திருவாரூர் - நாகை மாவட்டங்களில்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று நிவாரண உதவி







தமிழகத்தில் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை பார்வையிட்டு அந்த மக்களுக்கு ஆறுதல் கூறியும், நிவாரணப் பணிகளை பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை நியமித்து அந்தந்த பகுதிகளுக்கு உடனடியாக சென்றிட நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டார்.

அதன்படி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மழையினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலூர், தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் வெள்ளச் சேதங்களை பார்வையிட கடலூர் மாவட்டத்திற்கு சென்று பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக 29.11.2008 அன்று தஞ்சை மாவட்டத்தில் காலை 8.30 மணிக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலியமங்கலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் மழையினால் வீடுகளில் தங்கமுடியாமல் அரசு மேல் நிலைப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள 2,000 பேருக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் குறித்து அவர்களிடம் கேட்டறிந்தார்.

அத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தையும் சாப்பிட்டுப் பார்த்தார். அங்கு தங்கியுள்ள மக்களுக்கு உணவு உள்ளிட்ட



வசதிகள் செய்து தர அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

அப்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர் களிடம் கூறியதாவது :–

"கடந்த 5, 6, நாட்களாக தொடர்ந்து பெய்த கடும் மழையின் காரணமாக கடலோர மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூரில் பயிர்கள், வீடுகள், சாலைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் இந்த கன மழையினால் சேதமடைந்துள்ளது. மேலும் வீடுகள் முழுவதுமாகவும், பகுதியாகவும் பழுதடைந்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 330 வெள்ள நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு அதில் 90 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள் போன்ற அத்தியாவசிய உதவிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. கணக்கெடுக்கும் பணி முடிவடைந்ததும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைப்பார்கள். அதன் அடிப்படையில் நிவாரணமும், இழப்பீடும் வழங்கப்படும்''.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின் அவர்களுடன் மாண்புமிகு மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. எஸ்.எஸ். பழனி மாணிக்கம், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன், மாவட்ட ஆட்சியர் திரு. பெ. சந்திரசேகரன், இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை. சந்திரசேகரன்,

திரு. கி. த. மகேஷ் கிருஷ்ணசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப., சிறப்புப் பார்வையாளர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்கர் இ.ஆ.ப., ஆகியோர் சென்றனர்.

தொடர்ந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளப் பகுதிகளை பார்வையிடச் சென்றார்.

மாவட்ட எல்லையான கோயில் வெண்ணியில் தொடங்கி நீடாமங்கலத்திற்கு சென்றார். வழியில் பரப்பனமேடு கிராமம் அருகே பாமணி ஆறு உடைப்பு ஏற்பட்டு அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் தண்ணீர் புகுந்ததோடு பயிர்களும் மூழ்கியுள்ளதை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட உடைப்பு ஏற்பட்டுள்ள பகுதிக்கு தண்ணீரில் நடந்து சென்று பார்த்து உடைப்பினை சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

அப்போது விவசாயிகள் மூழ்கியுள்ள பயிர்களை எடுத்து வந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் காண்பித்தனர். விவசாயிகளுக்கு ஆறுதல் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக அரசினால் உரிய நிவாரணம் வழங்கப்படும் கலங்க வேண்டாம் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து நீடாமங்கலம் சென்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சுற்றியுள்ள கிராமங்களான சித்தமல்லி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த அங்குள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 1,000 பேரைச் சந்தித்து ஆறுதல் கூறியதோடு அங்கு உணவு உள்ளிட்ட வசதிகள் குறைவின்றி வழங்கப்படுகிறதா என்று கேட்டார். மேலும் தேவையான வசதிகளை செய்து தர ஆணையிட்டார்.

இதையடுத்து ரயில்வே கேட் பகுதியில் அமைந்துள்ள துணை மின் நிலையம் தண்ணீரில் மூழ்கியிருந்தது. அங்கு சென்று பார்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்குள்ள நீரை வெளியேற்ற உடனடி நடவடிக்கை எடுக்க ஆணையிட்டார்.

தொடர்ந்து திருவாரூர், முகந்தனூர், கிளரியம் உள்ளிட்ட பகுதிக்கு சென்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே நீரில் சூழ்ந்துள்ள கிராம மக்களை சந்தித்து ஆறுதல் கூறியதோடு அவர்களுக்கு உரிய அடிப்படை உதவிகள் கிடைத்திட நடவடிக்கை எடுத்தார்.

திருவாரூரில் கமலாபுரத்தைச் சேர்ந்த வைரக்கண்ணு என்பவர் சுவர் இடிந்து விழுந்து இறந்துவிட்டார். அவரது குடும்பத்திற்கு அரசின் சார்பில் வழங்கப்படும் 1 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி ஆறுதல் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 29.11.2008 அன்று தஞ்சையில் தொடங்கி, சாலியமங்கலம் வழியாக நீடாமங்கலத்தை கடந்தும் தேசிய நெடுஞ்சாலை 4 அடி உயர தண்ணீரில் மூழ்கிருந்தது. அந்தச் சாலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாகனம் நீந்தி ஊர்ந்து சென்றது. ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தூரம் அதே நிலை நீடித்தது.

வழியெங்கும் ஆங்காங்கே மூழ்கிய பயிரையும் தண்ணீர் சூழ்ந்துள்ளபடி கலங்கி நின்ற தாய்மார்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து ஆறுதல் கூறியதும், மூழ்கிய பயிர்களுக்கு வாடி நின்ற விவசாயிகளை வாஞ்சையுடன் விசாரித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு கைவிடாது உங்களுக்கு உரிய நிவாரண உதவி வந்து சேரும் கவலை கொள்ள வேண்டாம் என்று அவர் கூறிய வார்த்தைகள் அங்கே வாடி நின்ற மக்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும் புதிய தெம்பையும் அளித்தது.

* * *

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியில் இதுவரை 62 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு 4 கோடியே 61 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.



சிறந்த தமிழறிஞர்களின் நூல்கள் பொது மக்கள் அனைவரையும் சென்றடைதல் வேண்டும் என்னும் உணர்வோடு, அவர்தம் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவற்றைப் படைத்துள்ள சான்றோர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி 2006–2007ஆம் ஆண்டில் 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு 1 கோடியே 23 இலட்ச ரூபாயும், 2007–2008ஆம் ஆண்டில் 19 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு 1 கோடியே 75 இலட்ச ரூபாயும் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2008–2009ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 27 தமிழறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமை யாக்கப்படும் எனவும், அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப, சான்றாவணம் அளித்த 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.6.2008 அன்று மொத்தம் 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கினார்கள். மற்ற 6 தமிழறிஞர்களுள் மரபுரிமையர் சான்றாவணம் அளித்துள்ள சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோரின் மரபுரிமையர்க்குத் தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்ச ரூபாய்; எழுத்தாளர் விந்தன், பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனார் ஆகியோரின் மரபுரிமையர்க்கு தலா 5 இலட்ச ரூபாய் வீதம் 10 இலட்ச ரூபாய்; 2006–2007ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின்



மரபுரிமையர்க்கு 6 இலட்ச ரூபாய்; கடந்த 29.9.2008 அன்று, உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் சிலை திறப்பு விழாவின்போது பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது மரபுரிமையர்க்கு 12 இலட்ச ரூபாய் என மொத்தம் 48 இலட்ச ரூபாய்க்கான காசோலைகளை, அவரவர்களின் மரபுரிமையர்கள் 97 பேருக்கு 28.11.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்த மகத்தான திட்டத்தின் வாயிலாக 2006க்குப் பின் இதுவரை 62 தமிழறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர் குடும்பங்களுக்கு மொத்தம் 4 கோடியே 61 இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**கவிதைப்போட்டியில்**
**வென்றோருக்குப் பரிசு**

இத்துடன், தமிழக அரசின் ஆட்சிமொழித் திட்டப் பொன்விழாவை முன்னிட்டு, அரசு அலுவலகங்களில் தமிழ் மொழி பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை வலுப்படுத்தும் நோக்கில், 2006 நவம்பர்த் திங்களில் அரசு அலுவலர்கள், பணியாளர்களுக்கெனவும், பொது மக்களுக்கெனவும் தமிழ் வளர்ச்சித்துறை இரண்டு பிரிவாக நடத்திய "ஆட்சியில் தமிழ்" எனும் தலைப்பிலான கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களில் ஒவ்வொரு பிரிவிலும் முதற் பரிசு 5 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசு 3 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசு 2 ஆயிரம் ரூபாய் எனவும், ஆறுதல் பரிசாக 500 ரூபாய் வீதம் 10 பேருக்குமாக மொத்தம் 16 கவிஞர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பரிவுத் தொகையாகவும், பரிசுத் தொகையாகவும் பெற்றுக் கொண்ட 113 பேரும் மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்த் தொண்டுகளைப் பாராட்டி தங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நெகிழ்ச்சியுடன் தெரிவித்து வாழ்த்துகள் கூறினர்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி,இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) வை.கண்ணபுரக்கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.


* * *

சிறுகதை

# செவ்வாழை

● அறிஞர் அண்ணா

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப்பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும் கூட, வயலிலே அவன் பட்ட கஷ்டத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்து விட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டிருக்கிறதா என்று கவனித்துவிட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம் – அவனுடைய முதல் பையன் காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கரையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமை கூட ஏற்பட்டது, குப்பிக்கு.



"குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சிடப்போகுது. ஜாக்ரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று – ஆமாம். செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும் – ரொம்ப ருசி – பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்" என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள் – அதுமட்டுமா – பக்கத்துக் குடிசை – எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத் தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப்பற்றிப் பேசிக் கொள்ள முடியும் – அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றிப் பேச முடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பயல் கரியன், "செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்" என்று சொல்லுவான்.

"ஒண்ணுக்கூட எனக்குத் தரமாட்டாயாடா– நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன்? கவனமிருக்கட்டும் – வறுத்த வேர்க்கடலை கொடுத்தி ருக்கிறேன்; கவனமிருக் கட்டும்" – என்று எதிர்க்குடிசை எல்லப்பன் கூறுவான்...

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே "உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன் முத்து, "சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதீங்க – ஆமா – பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்து விடுவாங்களோ, யாரு கண்டாங்க" என்று சொல்லுவான் – வெறும் வேடிக்கைக்காக அல்ல – திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம் வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான் – செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்துபோகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப் படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது – கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும் – குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்து விடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான் அவன் சொந்தமாக மொத்தமாக பலன் பெறுவதற்கு உதவக்கூடிய, உழைப்பு! இதில் பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே பாடுபட்டு கண்ணைப்போல வளர்த்து வரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும் – செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.



கன்று வளர்ந்தது கள்ளங் கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமை போல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டு விட்டது.

> "கன்று வளர்ந்தது
> கள்ளங் கபடமின்றி,
> செங்கோடனுக்குக்
> களிப்பும் வளர்ந்தது.
> செங்கோடனின்
> குழந்தைகளுக்கு இப்போது,
> விளையாட்டு இடமே,
> செவ்வாழை இருந்த இடந்தான்!"

"இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?" கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

"இரண்டு மாசமாகும்டா கண்ணு" என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று – செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையை பெருமையுடன்.


பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்துவிஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைர மாலையைக் கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்க மாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின் வைர மாலையைவிட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று, குலை முற்றமுற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும் ஓங்கி வளரலாயிற்று, "எப்போது பழமாகும்?" என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?' என்று கேட்பான் பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகிறோம்–இடையே தரகர் இல்லை – முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது – அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தனக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும் – அதுதானே

முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்.

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான் – பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால், மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது – பழம் தர வேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, 'அச்சாரம்' கொடுத்தனர். பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது – ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும்பகுதி. இதோ, இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது – எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது – இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம் – பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா என்றெல்லாம்கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இதுபோன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லி விட்டார். கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும் போது, 'பழம்' தேவை என்று தோன்றாமலிருக்குமா? 'இரண்டு சீப்பு வாழைப்பழம்' என்றார் பண்ணையார்.



"ஏனுங்க பழம் – கடையிலே நல்ல பழமே இல்லை – பச்சை நாடாத்தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

"சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்? – வேறே நல்ல பழமா எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க – அதை கொண்டுகிட்டு வரலாம்" என்றான். "சரி" என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!! அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலை காரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று – நாக்குக் குழறிற்று – வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்கு பிறந்த நாள் பூஜை – என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை – அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை – இன்று



## அண்ணாவின் பொன்மொழி

### மக்கள் வாழ்வு

சமுதாயக் கொடுமைகள்
ஒருபுறமும் சாதிப் பூசல்கள் ஒருபுறமும்,
வைதீகம் ஒரு புறமும், வீண் வாய் வேதாந்தம்
வேறோர் புறமும் இருந்து கொண்டிருப்பதால்தான்
இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர்.
மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

– நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல் – எனும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம், ஒரு வாழைக் குலை! அவருடைய அந்தஸ்துக்கு, இது ஒரு பிரமாதமா! என்று ஊர் ஏசுகிறது போல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.

'அப்பா' ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன் – மாடு மிதித்து விடாதபடி பாதுகாத்தேன் – செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா, உன்னை கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா! – என்று அழு குரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா?' என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப் பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா, குலையை வெட்டப் போறாரு – செவ்வாழைக் குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் – உள்ளே கொண்டு வந்தான் – அரிவாளைக் கீழே போட்டான் – 'குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன் – அழாதீங்க – இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கண்ணு மரமாகிக் குலை தள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்" என்று கூறிக் கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று, இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்கு வர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான் – அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப் பிள்ளை போல் வளர்த்து என்ன பலன்...!



அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல – ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு. . .? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான் – எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள் – எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கரை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஒயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான், ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங்காலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள். பழம் வாங்கிக் கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பை முதலிலேயே தீர்த்துவிட்டான் – அவன் விற்றான் கடைக்காரனுக்கு – அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒரு அணாடா, பயலே – காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா – போடா" என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா, பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலு வீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்குமென்று! பழம் இருக்கிறது; கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொறித்துக்கொண்டே. செங்கோடன், கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான், வாழை மரத்துண்டுடன்.

"ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம் பார்வதி பாட்டி செத்துப் போயிட்டா, அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான். "எங்க வீட்டுச் செவ்வாழைடா" என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்து விட்டோம் – மரத்தை வெட்டி 'பாடை'யிலே கட்டி விட்டோம்" என்றான் கரியன்.

பாபம், சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை. தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை.

★

# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.24.22 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகள்

## மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்



பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத் திடலில் 26.9.2008 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ரூ. 24.22 கோடி மதிப்பிலான 151 புதிய திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்து, 11 ஆயிரத்து 347 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ. 3 கோடியே 84 இலட்சம் மதிப்பில் சுழல்நிதி மற்றும் கடனுதவிகளை வழங்கினார். இந்த விழாவில், புதிய திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றும்போது, "கடந்த இரண்டரை ஆண்டுகளில் மூன்றாவது முறையாக பெரம்பலூருக்கு வருகை தந்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 4 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பெரம்பலூர் நகராட்சி மக்களுக்காக ரூ. 28 கோடி மதிப்பில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது". இதுதவிர, இன்றைய விழாவில் தொடங்கப்பட்டுள்ள முழு கணினி மாவட்டம் திட்டத்திற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் சேவை மையம் பணிகளை நிறைவேற்ற மத்திய அரசு ரூ. 3 கோடியே 4 லட்சம் ஒதுக்கீடு வழங்கியுள்ளது. மேலும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 3ஐ இன்போடெக் நிறுவனம் பெரம்பலூர் மாவட்டத்தில் 51 மையங்களையும், அரியலூர் மாவட்டத்தில் 72 மையங்களையும் தொடங்கி அரசின் 200 வகையான படிவங்களையும், 110 சேவை திட்டங்களையும் அந்தந்த கிராமப் பகுதிகளில் பொதுமக்கள் எளிதாக பெறும் வசதியும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை 3 ஆயிரத்து 127 சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப் பட்டுள்ளன. இவற்றில் 49 ஆயிரத்து 555 மகளிர் உறுப்பினராக உள்ளார்கள். இவர்கள் மூலம் ரூ. 8 கோடி 47 இலட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் உட்கடன் வழங்கியதில் ரூ. 46 கோடியே 84 இலட்சம் புழக்கத்தில் உள்ளது.

2006ஆம் ஆண்டு முதல் 513 மகளிர் சுயஉதவிக் குழுக்களும், 201 ஆண்கள் சுயஉதவிக் குழுக்களும் துவக்கப்பட்டுள்ளன. இன்றைய விழாவில், மாவட்டத்தின் வளர்ச்சிக்காக ரூ. 14 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள 121 பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ரூ. 5 கோடியே 87 லட்சம் மதிப்பிலான 30 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மகளிர் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குவதுடன், அரசின் பல்வேறு துறைகளின் மூலம் 2,848 பயனாளிகளுக்கு ரூ. 4 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 1 இலட்சத்து 50 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 150 கோடியினை ஒதுக்கீடு செய்து மானியமாக வழங்க உத்தரவிட்டுள்ளார். 99% சதவீத அளவுக்கு கடனை பெண்கள் திரும்பச் செலுத்துகின்றனர் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். இவற்றை மாவட்ட மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார். 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கியதை பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பிறந்தநாள் முதல் 1 கிலோ அரிசி 1 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ. 5 ஆயிரம் வழங்கப்பட்டதை படிப்படியாக உயர்த்தி தற்பொழுது ரூ. 20 ஆயிரம் வழங்கப்படுகிறது. 50 வயதுவரை திருமணம் ஆகாத முதிர்கன்னிகளுக்கு மாதந்தோறும் ரூ. 400 வழங்கும் திட்டம் இந்த ஆட்சியில் தொடங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கும் திட்டத்தில் 4ஆவது கட்டமாக 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இதுபோல் இந்த அரசு அறிவிக்கும் அனைத்து திட்டங்களும் மக்களுக்கு பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படும், என்று தெரிவித்தார். முன்னதாக, மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் தொடங்கப்படவுள்ள 123 பொது சேவை மையங்களைத் தொடங்கி வைத்து, அரணாரை மற்றும் வாலாஜாநகரம் மையத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் வீடியோ கான்பரன்ஸிங் முறையில் உரையாடி இத்திட்டத்தின் பயன்கள் குறித்தும், அப்பகுதிக்கான அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த விழாவில் மாண்புமிகு மத்தியத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ.இராசா அவர்கள் தலைமை வகித்துப் பேசும் போது,"தமிழகத்திலேயே பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில்தான் அனைத்துக் குடியிருப்பு களுக்கும் ரூ. 231.95 கோடி மதிப்பிலான காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோல், பெரம்பலூரில் அரசு மருத்துவக்கல்லூரியும், அரியலூரில் அரசு பொறியியல் கல்லூரியும் ஒரே ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளதும் இங்குதான். கடந்த ஆண்டுகளில் அரசு கலைக்கல்லூரியும், 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் இங்குதான் ஒரே ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இவ்விழாவில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக, மாவட்ட ஆட்சியர் திரு. அனில் மேஷராம், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வெ. நடராஜன் நன்றி கூறினார். இந்த விழாவில் பெரம்பலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.ஆ. இராசா அவர்களின் தந்தை பெயரிலான "ஆண்டிமுத்து சின்னப்பிள்ளை அறக்கட்டளையின்" மூலம் 30 ஏக்கர் நில தானம் வழங்குவதற்கான ஆவணங்களை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், மருத்துவக்கல்லூரி முதல்வர் மற்றும் தனி அலுவலர் பாலசுப்பிரமணியன் அவர்களிடம் வழங்கினார். இதேபோல், முழு கணினி மாவட்ட திட்டத்தின் தொடக்கமாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மடி கணினியை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினார்.

த. மருதபிள்ளை,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்.

# கிராமசபைக் கூட்டத்தில்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பு



தமிழக ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் நான்கு முறை கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, 2.10.2008 அன்று உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் உள்ள ஊராட்சிகளில் கிராமசபைக் கூட்டங்கள் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சமூக தணிக்கை, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் துவக்கப்பட்ட பணிகள் மற்றும் அதன் முன்னேற்றங்கள், முழு சுகாதார இயக்கத்தின் பணிகள், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஊரக அடிப்படை வசதித் திட்டம் பற்றிய விவரங்கள், 2007–2008ஆம் ஆண்டிற்கான கிராமக் கணக்குகள் மற்றும் தணிக்கை, ஊராட்சித் தலைவர் எழுப்பும் இதர முக்கியத் தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெற்று ஊராட்சியின் வளர்ச்சிக்கு முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இக்கூட்டத்தில் ஊராட்சித் தலைவர், பொதுமக்கள், அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், ஊழியர்கள் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள காரம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், எந்தவித முன்னறிவிப்புமின்றி, பொதுமக்களுடன் பொதுமக்களாகக் கலந்து கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் இராஜேந்திர குமார், இ.ஆ.ப., ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், கூட்டத்தில் பங்கேற்று, சென்ற முறை நடத்தப்பட்ட கிராம ஊராட்சியின் நடவடிக்கைக் குறிப்பை நேரடியாக ஆய்வு செய்ததுடன் 2007–2008ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கிராமக் கணக்குகளைக் கேட்டார்.



2007–2008ஆம் ஆண்டு கிராமக் கணக்கு தணிக்கை செய்யப்படாமலிருந்ததைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அலுவலர் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், கட்சி வேறுபாடின்றி பங்கேற்ற பொதுமக்கள் தெரிவித்த அனைத்து கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் சார்பில் கேட்டுக்கொண்டபடி, தகுதியுள்ள எஞ்சிய 27 சுய உதவிக் குழுக்களுக்கும் உடனடியாக சுழல் நிதி வழங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டதுடன், காரம்பாக்கம் – காந்தி நகர், அன்னை அஞ்சுகம் நகர் பகுதியில் நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமல் உள்ள பட்டா தொடர்புடைய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகாண, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், இக்கூட்டத்தில், பொதுமக்களால் கோரப்பட்டபடி செட்டியார் அகரம் பகுதியில் 3.5 கி.மீ தூரத்திற்கு உள்ள ஒன்றியச் சாலைகளை தார்ச்சாலையாக தரமான முறையில் உடனடியாக அமைத்திடவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இக்கூட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலைக் கேட்டு, நிதர்சனமான உண்மைகளை அறிந்து, ஊராட்சிக்கு உடனடியாகத் தேவைப்படும் பணிகளுக்கு, நிதி ஆதாரங்களை உருவாக்குவதற்குரிய கருத்துகளை வழங்கி, அவர்கள் இதுவரை செய்துள்ள பணிகளுக்குப் பாராட்டு தெரிவித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றிய தன்மையை பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

❖ ❖ ❖

## அண்ணாவின் பொன்மொழி



### தமிழனின் பண்பு

தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கி விட்டார்கள் தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல; யாரையும் தாழ்த்துவதும் அல்ல. தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு போதும் ஒருப்பட மாட்டோம்.

# சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோருக்கு முதல்முறையாக இலவச பேருந்துப் பயண அட்டைகள்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.11.2008 அன்று வழங்கினார்கள்

இயலா குழந்தைகள் பேச்சுத்திறன் பயிற்சியும், உடல் வள நலப்பயிற்சியும் பெறுவதற்கு தனியார் நிறுவனத்தால் நடத்தப்படும் பயிற்சி மையங்களுக்குச் சென்று வர மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கும், அவர்களின் பெற்றோர் ஒருவருக்கும் பேருந்தில் பயணம் மேற்கொள்ள இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படும் என்றும், இச்செலவினத்தை சென்னை மாநகராட்சி ஏற்கும் என்றும் சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் துவக்கமாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.11.2008 அன்று தலைமைச் செயலகத்தில் பேச்சுத்திறன் பயிற்சியும், உடல் வளப் பயிற்சியும் பெற உள்ள 22 மாணவர்களுக்கும், மாணவர்களுடன் பயிற்சி மையத்திற்குச் சென்று வர அவர்களுடைய பெற்றோர் ஒருவருக்கும் இலவச பேருந்துப் பயண அட்டைகளை வழங்கினார்கள்.

சென்னை மாநகராட்சிப் பள்ளியில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களுடன், அவர்களது பெற்றோர்களும் மனவளப் பயிற்சி மையத்திற்குச் சென்று பயிற்சிகள் அறிந்து மாணவர்கள் மனவளப் பயிற்சிகள் மேற்கொள்ள உறுதுணையாக அமைந்திடும் வகையில் பெற்றோர்களுக்குச் சென்னை மாநகராட்சி இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டது.

இதன் மூலம் உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்ற மாணவர்களுடன் சகஜமாக இணைந்து பழகும் நட்பு சூழல் ஏற்பட வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக சென்னை மாநகராட்சியின் இந்த அரிய முயற்சிக்குச் சென்னை மாநகராட்சிப் பள்ளியில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவ / மாணவியர் அவர்களின் பெற்றோர்கள் தமிழக அரசுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இதுவரை சென்னை மாநகராட்சி மூலம் 6,397 பள்ளி மாணவ / மாணவியர் உடல் ஊனமுற்றோர் என்று கண்டறியப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக தகுதியானவர்களுக்கு இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா சுப்பிரமணியன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி. ஆர். சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு. ந. இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப. ரவி, நிலைக்குழுத்தலைவர் (கல்வி) திருமதி. கே. ஜானகி, துணை ஆணையர் (கல்வி) திருமதி. அனுஜார்ஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ★

# இந்தியாவிலேயே மகளிர் சுயஉதவிக்குழுக்களின் செயல்பாடுகள் தமிழகத்தில் முதலிடத்தில் உள்ளன

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு சுழல்நிதி வழங்கும் விழா, வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 20.11.2008 அன்று புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ரீட்டா ஹரிஸ் தாக்கர்,இ.ஆ.ப., தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் இரா.மகேந்திரவேல் வரவேற்புரையாற்றினார்.





புதுக்கோட்டைக்கு வருகை புரிந்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலில் ரூ.1.25 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தினை திறந்து வைத்து, மகளிர் சுய உதவிக் குழுவினரின் கைவினைப் பொருட்கள் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

பின்னர் ரூ.79.92 கோடி மதிப்பிலான 882 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.26.58 கோடி மதிப்பிலான 288 புதிய கட்டடங்கள், சாலைகளைத் திறந்து வைத்து 3,250 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 48,750 உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.18.90 கோடி மதிப்பிலான சுழல் நிதியும் 8,874 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.5.83 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி, விழாப் பேருரையாற்றினார்.

அப்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையில் கூறியதாவது :–

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கக்கூடிய விழாவா? அரசினுடைய எழுச்சி மிகுந்த விழாவா? அல்லது மகளிர் அணியினுடைய மாநாடா? என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்கு மிகுந்த எழுச்சியோடு ஏற்றத்தோடு இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

என்னுடைய கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கு முன்பு என்னுடைய உள்ளத்திலே ஓடிக் கொண்டிருக்கின்ற ஒரு உணர்வை நான் இந்த இடத்திலே வெளிப்படுத்த விரும்புகிறேன். அதனை நான் வெளிப்படுத்துகின்றபோது இங்கே வீற்றிருக்கக்கூடிய தாய்மார்களுக்கு அருமைச் சகோதரிகளுக்கு கொஞ்சம் கோபம் வரலாம். அப்படியே கோபம் வந்தாலும் அடுத்த விநாடியே அதுமாறி நீங்கள் அனைவரும் பெருமைப்படத்தக்கூடிய வகையில் அது நிச்சயமாக மாறும் என்பதையும் நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன்.



அதாவது சாதாரணமாக சொல்வார்கள், 5 ஆயிரம் பெண்கள் இருந்தால் அந்த இடம் எப்படி இருக்கும். கொஞ்சம் கலகலப்பாக அல்லது அதையும் தாண்டி கொஞ்சம் சலசலப்பாக ஏன் அதையும் மீறி கொஞ்சம் கைகலப்பு ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை கூட உருவாகும். இது எதார்த்தமாகப் பேசக்கூடிய ஒரு செய்தி. ஆனால் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலே பார்க்கிறேன் 5-6 பெண்கள் அல்ல 50-60 சகோதரிகள் அல்ல, 500-600 தாய்மார்கள் அல்ல, ஏன் 5 ஆயிரத்தையும் தாண்டி பல்லாயிரக்கணக்கிலே திரண்டிருக்கக்கூடிய நம்முடைய மகளிர் குழுவினைச் சார்ந்து இருக்கக்கூடிய மகளிர் சுய உதவிக்குழுவில் இடம் பெற்றிருக்கக்கூடிய உங்களிடத்திலே இப்பொழுது தோன்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் கட்டுப்பாட்டை இந்த அமைதியைக் காணுகின்ற நேரத்தில் இதுதான் மகளிர் அணியை தலைவர் கலைஞர் அவர்கள் எந்த உணர்வோடு தொடங்கி வைத்திருக்கின்றாரோ அது வெற்றி பெற்று இருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக அதற்கு ஒரு சாட்சியாக ஒரு சான்றாக இது அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது நிச்சயம் மிகையாகாது.

**882 பணிகள்**

ஆகவே, அந்த உணர்வோடு நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியிலே இன்றைக்கு அடிக்கல் நாட்டுவிழா ஊரக வளர்ச்சித்துறையின் சார்பிலே ரூபாய் 53 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டில் தந்தை பெரியார் பெயரில் அமையவிருக்கக்கூடிய சமத்துவபுரம், கலையரங்கம், நூலகக் கட்டடம், சமுதாயக்கூடம், உள்ளிட்ட 272 பணிகளுக்கும் சுனாமி திட்ட செயலாக்க அலகின் மூலமாக ரூபாய் 11 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் குளங்கள், சத்துணவுக் கூடம், வடிகால்கள், உள்ளிட்ட 196 பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூபாய் 12 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் 405 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்பட, கட்டக்கூடிய அந்தப் பணிகள் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூபாய் 92 இலட்சம் மதிப்பீட்டிலே புதிய அலுவலகக் கட்டடம், சமுதாயக் கூடம் உள்ளிட்ட 8 பணிகள் ஆக ரூபாய் 79 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டில் 882 பணிகளுக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கிறது.

திறப்பு விழாவைப் பற்றி குறிப்பிடவேண்டுமென்று சொன்னால், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூபாய் 3 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம், நூலகக் கட்டடம், சமுதாயக் கூடம், வணிக வளாகம், உள்ளிட்ட 148 பணிகள் சுனாமி திட்ட விரிவாக்க அலகின் கீழ் ரூபாய் 3 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்புத் திட்ட வீடுகள், பொதுக் கிணறுகள் உள்ளிட்ட 31 பணிகள் பேரூராட்சித்துறை சார்பிலே ரூபாய் 28 இலட்சம் நெடுஞ்சாலைத்துறையின் சார்பிலே ரூபாய் 1 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் 2 சாலைப் பணிகள், போக்குவரத்துத் துறையின் சார்பிலே இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னால் அதனுடைய திறப்பு விழாவை நடத்திவிட்டுத்தான் இந்த மேடைக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

**288 கட்டடங்கள்**

ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டிருக்கக்கூடிய அலுவலகக் கட்டடப்பணிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டக் கிடங்கு ஆக ரூபாய் 26 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டிலே 288 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கக்கூடிய பணிகள் இன்றைய தினம் மக்களுடைய பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு சுழல் நிதி – இங்கே எல்லோரும் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார்கள். சுழல் நிதியைப் பொறுத்தவரையிலே 3,250 சுய உதவிக் குழுக்களுக்கு 48,750 உறுப்பினர்கள் பயன்படக்கூடிய வகையிலே அரசு மானியம் தலா 10 ஆயிரம் மற்றும் வங்கிக் கடனோடுகூடிய சுழல் நிதியாக ரூபாய் 18 கோடியே 90 இலட்சம் இந்த விழாவின் மூலமாக வழங்கப்பட இருக்கின்றது. இந்த விழாவிலே 3,250 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகின்றது என்று சொன்னால் ஏதோ அடையாளத்திற்கு 10 பேருக்கு, 20 பேருக்கு, 25 பேருக்கு, தந்துவிட்டு நாங்கள் போகமாட்டோம். ஒட்டு மொத்தமாக இங்கு வந்திருக் கக்கூடிய அனைத்துக் குழுவினருக்கும் வழங்கிவிட்டுத்தான் இந்த மேடையைவிட்டு நாங்கள் இறங்கப்போகிறோம்.

தமிழக வரலாற்றில் இந்திய வரலாற்றில் மட்டுமல்ல; உலகிலேயே, கின்னஸ் ரெக்கார்டில் பதிக்கப்படக்கூடிய வகையிலே சுழல் நிதியை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அத்துணை பேருக்கும் தொடர்ந்து வழங்கக்கூடிய ஒரு நிலையை இன்றைக்கு எம்முடைய துறை உருவாக்கியிருக்கிறது.

அதேபோல் நலத்திட்ட உதவிகள்; அரசினுடைய பல்வேறு துறைகள் – வருவாய்த் துறை, தாட்கோ, மீன்வளத் துறை, சமூகநலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வேலைவாய்ப்புத்துறை, சுகாதாரத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மைத்துறை, என்று பலதுறைகளின் சார்பில் ரூபாய் 24.73 கோடி மதிப்பீட்டில் 57,624 பயனாளிகள் பயன்படக்கூடிய வகையிலே நலத்திட்ட உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்படவிருக்கிறது. ஆகமொத்தம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படக்கூடிய சுழல் நிதி உள்பட நலத்திட்ட உதவிகள் அடிக்கல் நாட்டு விழா திறப்பு விழா இவைகளின் ஒட்டுமொத்த மதிப்பீட்டைப் பார்க்கின்ற போது ரூ.131 கோடியே 23 லட்சம் மதிப்பீட்டிலே நடை பெறக்கூடிய விழாவாக இந்த விழா இன்று எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சுயஉதவிக்குழுவைப் பொறுத்தவரை நான் உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், பல நிகழ்ச்சிகளில் பலர் எடுத்துச் சொல்லி இருக்கலாம், இருந்தாலும் நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த விரும்புவது; இந்த சுயஉதவிக் குழுக்கள் முதன்முதலில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான் 1989ஆம் ஆண்டு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த திட்டம் முதன்முதலில் தர்மபுரி மாவட்டத்தில்தான் தொடங்கி வைக்கப்பட்டது.

**மகளிர் தன்னம்பிக்கை பெற்று வாழ வேண்டும்**

சுயஉதவிக்குழுக்கள் என்பது ஏதோ அரசியலுக்காக அல்ல, கட்சியினுடைய வளர்ச்சிக்காக அல்ல அல்லது தேர்தல் வருகின்ற பொழுது உங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அல்ல. இந்தத் திட்டம் எதற்காக தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று உண்மையிலே சொன்னால்; தமிழகத்தில் இருக்கக்கூடிய பெண்கள் தாய்மார்கள் மிக தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ்ந்திடவேண்டும். யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் அவரவர்கள் சொந்தக்காலில் நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் பெற்றாகவேண்டும்.

நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களிலேயே ஒப்பிட் டுப் பார்க்கும்பொழுது தமிழகம் முதலிடம் பெற்றி ருக்கிறது. ஆக அப்படிப்பட்ட இந்த சுய உதவிக் குழுக் களும் இடம் பெற்றுள்ளன. இதில் தமிழக சுயஉதவிக் குழுக்களின் கணக்கு புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மாவட்ட ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உருவாக்கப்பட்டுள்ள 9,720 சுய உதவிக்குழுக்களில் 1,50,979 மகளிர்களும் 6,426 இளைஞர்களும் இதிலே உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளார்கள்.


ஆகவே இந்த சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு அந்த நேரத்தில் கழக ஆட்சி வந்த பிறகு பயிற்சித் தொகை ரூ.45 வழங்கப்பட்டது. ஆனால் தமிழகத்தில் இடையிடையே ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. உங்களுக்குத் தெரியும். அந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நேரத்தில் பயிற்சிக்கான தொகை ரூபாய் 7.50 ஆக குறைக்கப்பட்டது. ஆனால் கலைஞர் அவர்கள் 2006–லே ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் தேர்தல் நேரத்திலே மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் கலைஞர் முதல்வராக வந்தால் மீண்டும் அந்தப் பயிற்சிக் கான தொகை ரூ.45ஆக வழங்கப்படும் என்று உறுதி மொழி எடுத்துச் சொல்லப்பட்டது. ஆட்சிக்கு வந்தோம் பயிற்சிக்கான தொகை உடனடியாக உயர்த்தி இப்பொழுது ரூபாய் 45ஆக வழங்கப்பட்டு வருகிறது என்பது உங்களுக்கு தெரியும்.

அது மட்டுமல்ல; ஊரகப் பகுதிகளில் இருக்கக்கூடிய சுயஉதவிக்குழுக்களுக்குத்தான் 2006–க்கு முன்னால்

சுழல்நிதி வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. நான் இப்பொழுது 2006க்கு பின்னால் ஊரகப் பகுதிகளுக்கு மட்டுமல்ல, மாநகரப் பகுதிகளுக்கும் சுழல்நிதிமானியம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையின் அமைச்சராக நான் பொறுப்பேற்றதற்குப் பின்னால் தமிழ்நாடு முழுவதும் நான் ஆய்வுப் பணி மேற்கொண்ட பொழுது, நம்முடைய மக்களின் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அமைச்சர் பெருமக்கள், அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுயஉதவிக்குழுக்களில் இடம் பெற்றிருக்கக் கூடிய சகோதரிகள் எல்லாம் எங்களைச் சந்திக்கின்ற பொழுது தொடர்ந்து ஒரு கோரிக்கையை எடுத்துச் சொன்னார்கள். சில இடங்களில் சுயஉதவிக்குழுக்கள் தகுதி பெற்றிருந்தும் அவர்களுக்கு

அவர்களிடம் குறிப்பிட்டுக்காட்டி அதன்பிறகு, மத்திய அரசினர் வங்கியினுடைய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு – அவர்களுக்கு உதவியாக விளங்கிட வேண்டும் என்ற ஒரு செய்தியை அவர்களுக்கு அறிவுறுத்தி அதற்குப் பிறகு நாங்கள் சென்னையிலே அரசின் அங்கீகாரம் பெற்றிருக்கக்கூடிய வங்கி அதிகாரிகளை அழைத்து ஒரு கூட்டம் போட்டோம். அந்தக் கூட்டத்திற்கு மத்திய நிதித்துறை இணை அமைச்சரும் வந்திருந்தார்.

அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த அதிகாரிகளுடன் கலந்து பேசி உண்மை என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கு உடனடியாக கடன் வழங்க சுழல்நிதி மானியத்தை வழங்க அவர்களும் ஒப்புதல் தந்து அதற்குப் பிறகு முதல்வரிடத்தில் நாங்கள் இந்தச் செய்தியை




சுழல்நிதி மானியம் வழங்கப்படவில்லை என்று ஒரு கணக்கை எங்களிடம் எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் இதுகுறித்து உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விசாரித்தோம். அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஆய்வுப் பணியை மேற்கொண்டார்கள். அப்படி மேற்கொண்டபொழுது அதன்பிறகு இது உண்மை என்று கண்டறிந்தோம். தகுதி பெற்றிருக்கக்கூடிய குழுவினர்கள் இன்னமும் சுழல்நிதி மானியம் பெறாமல் இருக்கிறார்கள் என்ற செய்தியை நாங்கள் அறிந்தோம். அதற்குப் பிறகு இங்கே அமர்ந்து இருக்கக் கூடிய மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பழனி மாணிக்கம் அவர்களிடத்திலே நாங்கள் இதுபற்றி எடுத்துச் சொல்லி அதன் பிறகு நிதியமைச்சர் ப.சிதம்பரம்

குறிப்பிட்டுச் சொல்லி, கடந்த சட்டமன்ற கூட்ட தொடரில் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து என்னுடைய துறையின் மானியக் கோரிக்கையை நாங்கள் தாக்கல் செய்த நேரத்தில்; முதலமைச்சர் அனுமதி பெற்று ஒரு அறிவிப்பை நான் வெளியிட்டேன். அதுதான் ஏறக் குறைய 1,50,000 குழுக்கள் தகுதி பெற்றிருக்கக்கூடிய இந்த குழுக்கள் சுழல்நிதி பெற முடியாத இந்தச் சூழ் நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்கள் அத்துணைபேருக்கும் சுழல்நிதி மானியத்தை வழங்கிட இந்த அரசு முடிவு செய்து இருக்கிறது. அதற்காக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்து இருக்கிறது என்று அந்த அறிவிப்பை நான் வெளியிட்டு அந்த அறிவிப்பின் அடிப்படையில்தான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அந்த

சுழல்நிதியை இன்றைக்கு நான் ஒவ்வொரு மாவட்டமாக வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

**தமிழகத்திற்குப் பெருமை**

அதுமட்டுமல்ல, வங்கிகளினுடைய அதிகாரிகள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது அந்த அதிகாரிகள்தான் என்னிடத்தில் திறமையாக எடுத்துச் சொன்னார்கள். கடன் பெறக்கூடிய சுயஉதவிக் குழுக்கள் அந்தக் கடனை வட்டியோடு வங்கியில் திருப்பிச் செலுத்துகிறோம். வாங்கிய கடனை இன்றைக்கு தமிழ்நாட்டில் 99 சதவிகிதம் பேர் அதனை திருப்பி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். எந்த மாநிலத்திலேயும் கிடையாது தமிழ்நாட்டில் மட்டும்தான் பெண்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்திவிடுகிறார்கள் என்று பெருமையோடு எடுத்துச்சொன்னார்கள். பெண்களாக இருக்கக் கூடிய நீங்கள் அதை இன்றைக்கு 99 சதவிகிதம் பேர் இன்றைக்கு திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் உள்ளபடியே இது உங்களுக்கு கிடைக்கக்கூடிய பெரும மட்டுமல்ல, இந்த அரசுக்கே தமிழகத்திற்கே கிடைத்திருக்கக்கூடிய ஒரு பெருமை என்று சொன்னால் அது நிச்சயம் மிகையாகாது.

**மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம் வங்கிகளுக்கு நம்பிக்கை**

இந்தியன் வங்கி இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய எல்லா மாநிலத்திலும் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தந்துகொண்டு இருக்கிறது. இந்தியா முழுவதும் தரக்கூடிய அந்தக் கடனைப் பொறுத்தவரைக்கும் ஒட்டுமொத்தமாக இது வரைக்கும் 2,65,000 ரூ.1,864 கோடி கடன் தந்திருக்கிறோம். இது இந்தியா முழுமைக்கும் இருக்கக்கூடிய கணக்கு. இந்தக் கணக்கை சொல்லிவிட்டு அடுத்து அவர் சொல்லுகிறார், 2,65,000 குழுக்களுக்கு 1,864 கோடி ரூபாய் கடன் தந்து இருக்கிறோம் என்று சொன்னால் அதிலே தமிழ் நாட்டிற்கு மட்டும் 1,72,000 குழுக்களுக்கு கடன் தந்து இருக்கிறோம். 1,331 கோடி ரூபாயை தமிழ்நாட்டிற்குத் தந்து இருக்கிறோம் என்று சொன்னால் மொத்தத்திலே 71 சதவிகிதம் தமிழ் நாட்டிற்கே கடன். ஆக தமிழ்நாட்டு மகளிர் சுய உதவிக்குழுக்கள் மீது எந்த அளவிற்கு இன்றைக்கு வங்கிகள் நம்பிக்கை பெற்றிருக்கின்றன என்பதற்கு இதைவிட ஒரு எடுத்துக் காட்டை உங்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

1929ம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சீர்திருத்த மாநாட்டிலே தந்தை பெரியார் அவர்கள் உரையாற்றுகின்றபோது, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக பல தீர்மானம் நிறைவேற்றுகின்றபோது அவர் குறிப்பிட்டுச் சொன்னார்; சொத்திலே பெண்களுக்கு சம உரிமை தந்தாகவேண்டும் என்று. அது 1989–ல் நிறைவேற்றித்தரப்பட்டது. கலைஞர் ஆட்சிக் காலத்திலே இப்படி எத்தனையோ தலைவர்கள் பெண்கள் உடன்கட்டை ஏறக்கூடிய கொடுமைகள் அந்தக் கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாத்து தந்தவர் ராஜா ராம் மோகன்ராய் அவர்கள் பெண்சிசு படுகொலை இப்படிப்பட்ட கொடுமையிலிருந்து காத்தவர் இராமலிங்க அடிகளார் அவர்கள். இதுபோல எண்ணற்ற தலைவர்கள் பாரதியாராக இருந்தாலும் சரி, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனாக இருந்தாலும் சரி. தமிழ்த்தென்றல் திரு.வி.க. வாக இருந்தாலும் சரி ஏன் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களாக இருந்தாலும் சரி, எத்தனையோ தலைவர்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், அவர்களையெல்லாம் தொடர்ந்து இன்றைக்கு நமது தலைவர் கலைஞர் அவர்கள் பெண்களுடைய முன்னேற்றத்திற்கே தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கக்கூடிய அந்தத் தலைவர்களையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிற அதற்காக பல திட்டங்களை யெல்லாம் நிறைவேற்றிக் கொண்டு இருக்கக்கூடிய அந்தச் சாதனைகளை வரிசையாக இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு பெண்கள்தான் எல்லாவற்றிலும் முன்னிலைப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலை இன்று நேற்றல்ல, வரலாறு வரலாறுகளாக அது இருந்து கொண்டிருக்கக்கூடிய உண்மை. ஆக அதை எல்லாம் அடிப்படையாக வைத்துதான் இன்றைக்கு எண்ணற்ற திட்டங்களை பெண்களுடைய முன்னேற்றத்திற்காக இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அதை நீங்கள் பயன்படுத்திக் கொண்டு உங்கள் வாழ்க்கை வளமாக்கிக் கொள்ளவேண்டுமென்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு அரசு நலத்திட்ட உதவிகள் மூலமாக பயன்பெறுவதற்காக வருகை தந்துள்ள பயனாளிகள் பெருமக்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து மகளிர் சுய உதவிக் குழுவினராக வந்திருக்கக்கூடிய நீங்கள் இன்றைக்கு சுழல்நிதியைப் பெற்று மேலும் உங்கள் வாழ்க்கையினை வளப்படுத்திக் கொள்வதற்கு இவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று உங்களுக்கெல்லாம் எனது அன்பான வேண்டுகோளை விடுத்து அத்துணை பேருக்கும் எனது வாழ்த்துக்களை பாராட்டுக்களை தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

விழாவில், மாண்புமிகு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி முன்னிலையுரையாற்றினார்.

மாண்புமிகு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு. எஸ்.எஸ். பழனிமாணிக்கம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் உள்ளிட்டோர் விழாவில் கலந்துகொண்டனர். ❖

# வளர்ச்சிப் பணிகளை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக நகர் ஊரமைப்புத் துறையில் பணியாளர்கள் நியமனம்

நகர் ஊரமைப்புத் துறையில் நீண்ட காலமாக காலியாக இருந்துவரும் 32 அளவையாளர்கள் – உதவி வரைவாளர் மற்றும் 20 களப்பணி உதவியாளர் பணிகளுக்குரிய நபர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, 23.10.2008 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நியமன ஆணைகளை வழங்கினார்.



அளவையாளர் – உதவி வரைவாளர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 6 நபர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 6 நபர்கள், பிற்படுத்தப்பட்டோர் 20 நபர்கள், அதில் பெண்களில் 2 நபர்கள் தாழ்த்தப் பட்டவர்கள், 2 நபர்கள் மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள், 10 நபர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் களப்பணி உதவியாளர்களில் 10 நபர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், 5 நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், 5 நபர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், அதில் பெண்களில், 3 நபர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், 1 நபர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர், 1 நபர் பிற்படுத்தப்பட்டவர் என நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர் ஊரமைப்புத் துறையில் சென்னைப் பெருநகர்ப் பகுதி நீங்கலாக தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் 2ஆம் நிலை நகர்ப்பகுதிகள் மற்றும் இதர நகராட்சிப் பகுதிகளின் அபிவிருத்திக்கான முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து அவற்றில் கண்டுள்ள சாலைகள் மற்றும் இதர அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவி வழங்குதல், மனைப்பிரிவு ஒப்புதல், பலமாடிக் கட்டுமானங்கள், தகவல் தொழில்நுட்ப அலுவலகம், தொழிற்சாலை கட்டுமானங்களுக்குரிய ஒப்புதல் வழங்குவது, புராதன நகர்ப்பகுதிகளின் அபிவிருத்திக்கான நிதியுதவி, மானியம் ரூ.50 இலட்சம் வரை வழங்குவது, நகர்ப்பகுதிகளில் பூங்கா அபிவிருத்திக்காக ரூ.25 இலட்சம் வரை வழங்குதல் போன்ற பணிகள் விரைவாக நடைபெற்றிட புதிதாக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் மூலமும், மேலும் காலியாக உள்ள வேறு பணியிடங்கள் விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலமும் இப்பணிகள் நிறைவேற்றப்படும்.




மேற்படி கூட்டத்தில் தமிழக அரசு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலர் திரு. அரங்க செல்லமுத்து, இ.ஆ.ப., மற்றும் நகர் ஊரமைப்புத்துறை ஆணையர் திரு. அஷோக் டோங்கரே, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் புதிய பணியாளர்களிடம் உரையாற்றும்போது, கடந்த ஆட்சியில் பணி நியமன தடை உத்தரவுச் சட்டம் இருந்தது, மாண்புமிகு தமிழக முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, அந்த உத்தரவை நீக்கி பல இலட்சம் பேர்களுக்கு வேலைகளை வழங்கியுள்ளார். இப்பணிபுரிய வந்துள்ள தாங்கள் இத்துறையில் உள்ள மூத்த அலுவலர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாகப் பணிபுரிந்து பொதுமக்களுக்கு உதவி செய்திடவும், இவ்வரசுக்கும் நற்பெயர் ஏற்படுத்தி தந்திடவும் கேட்டுக்கொள்கிறேன். பாண்டிச்சேரி மாநிலத்தில் உள்ள ஊரமைப்புப் போன்று திட்டங்களை உருவாக்கிட நீங்கள் உழைத்திடவேண்டும். உங்களுடைய புதிய, நவீன கருத்துக்களைத் தயக்கமின்றி எனக்கோ, அல்லது உயரதிகாரிகளுக்கோ தெரிவிக்கவேண்டும். உகந்த கருத்துக்கள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார். ★

பெயர் மாற்ற விண்ணப்பப் படிவத்தை இலவசமாக அளிக்கும்

# எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை வலைதளம்




தமிழக அரசின் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கான வலைதளத்தை (Website) 20.11.2008 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த வலைதளத்தின் முகவரி: www.tn.gov.in / Stationery Printing ஆகும் இந்த வலைத்தளத்தில் பொது மக்களுக்குத் தேவையான பல்வேறு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:–

★ தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்டுள்ள தகவல் அளிக்கும் அலுவலர்கள், மேல் முறையீட்டு அலுவலர்கள் மற்றும் அவர்களைத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

★ பொது மக்களின் நலன் கருதி தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்படும் அறிவிப்புகள், அரசால் வெளியிடப்படும் அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள், பொதுசட்டவிதிகள், ஆணைகள் வரையறுக்கப்பட்ட விதிகள், பணி விதிகள் (அடாக் விதிகள் உட்பட) மற்றும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும் சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள் தொடர்பான அறிவிப்புகள், வணிகவரித் துறையினால் வெளியிடப்படும் வரி விவரங்கள்.

★ தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்படும் பெயர் மாற்றம் / மத மாற்றம் தொடர்பான அறிவிப்புகள், பொதுமக்கள் தொடர்புடைய நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் தொழில்துறை தீர்ப்பாயத்தின் ஆணைகள்.

★ பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றம் செய்தல் தொடர்பான நடைமுறை விவரங்கள்.

★ தேவையற்ற கால விரயத்தினை தவிர்க்கும் வகையில் பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றத்திற்குத் தேவையான படிவங்களை இலவசமாக வலைதளத்திலிருந்து பெறுதல் குறித்த வழிமுறைகள்.

★ தமிழ்நாடு வாராந்திர அரசிதழ்கள் கிடைக்கும் விவரங்கள்.

★ இத்துறையின் கிளை அச்சகங்களில் அச்சிடப்படும் தமிழ்நாடு மாவட்ட அரசிதழ்கள் கிடைக்கும் விவரங்கள்.

★ விற்பனைக்கு உள்ள அரசு விதிகளடங்கிய கையேடுகள், சட்டத் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்களின் விவரங்கள்.

இவை தவிர, பிற அரசுத் துறைகளுக்கு இத்துறை ஆற்றிவரும் சேவை குறித்த விவரங்களும் இவ்வலைத் தளத்தில் விளக்கப்பட்டுள்ளன. அதன் சிறு பட்டியல் கீழே வழங்கப்படுகிறது.

★ அனைத்து அரசுத் துறைகளின் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடுதல், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள், குழு அறிக்கையில், வரவு–செலவு ஆவணங்கள், கமுக்க அறிக்கைகள் பல்வேறு துறைகளின் கையேடுகள் போன்றவற்றை அச்சிட்டு வழங்குதல்.

★ பிற அரசுத் துறைகளுக்கு வழங்கப்பட்டு வரும் எழுதுபொருட்களின் விவரங்கள்.

★ அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தின் பணி நேரங்கள். ஆகியவற்றோடு இத்துறையின் தலைமையிடமான ஆணையரகம் மற்றும் சென்னையில் உள்ள அலுவலகங்களான அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம் உயர்நீதிமன்ற வளாகம், அரசு எழுதுபொருள் அலுவலகம் மற்றும் வெளியூரில் உள்ள விருத்தாசலம், திருச்சி, புதுக்கோட்டை, சேலம், மதுரை மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை அச்சகங்களின் செயல்பாடுகள் குறித்தும் இவ்வலைதளத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

★ ★ ★

# தமிழகத்தில் முதன்முறையாக ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காக சிறப்பு ஏ.டி.எம். இயந்திரம்

தமிழகத்திலேயே முதன் முறையாக, ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காக, சிறப்பு ஏ.டி.எம் இயந்திரத்தை கடலூர் மாவட்டம் பெரிய கங்கனாங்குப்பம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அரசின் ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஊதியத்தை வழங்குவதற்கான சிறப்பு ஏ.டி.எம் இயந்திரத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்களது ஊதியத்தை எளிதாக பெற்றுக்கொள்வதற்காக இந்த சிறப்பு ஏ.டி.எம் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

முதல் கட்டமாக கடலூர் மாவட்டத்தில் இந்த சிறப்பு ஏ.டி.எம் இயந்திரங்கள், 5 இடங்களில் திறக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் இந்த சிறப்பு ஏ.டி.எம் இயந்திரங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அவர்கள் 22.11.2008 அன்று கடலூரில் தொடங்கி வைத்தார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏ.டி.எம் மூலம் ஊதியம் வழங்குவது குறித்த விவரம் வருமாறு:–

தமிழ்நாட்டில் முதல் கட்டமாக தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்ட 6 மாவட்டங்களில், கடலூர் மாவட்டமும் ஒன்று ஆகும். இம்மாவட்டத்தில் 2.2.2006 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டம் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டொன்றுக்கு 100 நாள் வேலை வாய்ப்பினை உறுதி செய்கிறது. ஊராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. பதிவு செய்துள்ள குடும்ப உறுப்பினர்கள், வேலைகோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும். அனுமதிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள தொழிலாளர்களுக்கு ஊராட்சி தலைவர் பணி ஒதுக்கீடு செய்து தருவார்.

குறைந்தபட்சம் ஊதியம் பெற 7 மணி நேரம் அல்லது பொறியியல் பிரிவு அலுவலர்களால் அளவீடு செய்து வழங்கப்பட்ட அளவில் பணியினை மேற்கொள்ள வேண்டும். ஒரு நாள் குறைந்தபட்ச ஊதியம் ரூ.80/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செய்து முடிக்கப்பட்ட பணியின் அளவைப் பொறுத்தே ஊதியம் அனுமதிக்கப்படும். ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நாளில் ஊதியப் பட்டுவாடா குழுவின் முன்னிலையில் ஊதியம் பட்டுவாடா செய்யப்படும். தொழிலாளர்களுக்கான ஊதியம் ரொக்கமாக ஊராட்சியின் மூலம் வழங்கப்படும். ஊதியப் பட்டுவாடா வெளிப்படையாக வழங்கிட ஏதுவாக ஒரு குறிப்பிட்ட பொது இடத்தில் ஊதியம் வழங்கப்படும்.

ஊதியப் பட்டுவாடா வெளிப்படையாக அமைந்திட ஏதுவாக கடலூர் மாவட்டத்தில் ஒரு முன் முயற்சியாக தொழிலாளர்களுக்கு ஏ.டி.எம் மூலம் ஊதியம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முன்மாதிரியாக கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 4 ஊராட்சிகளில் தேர்வு செய்யப்பட்டு ஏ.டி.எம் அமைக்கப்பட்டுள்ளது.

பெரியகங்கனாங்குப்பம், திருவந்திபுரம், பச்சையாங்குப்பம் மற்றும் பாதிரிக்குப்பம் ஆகிய ஊராட்சிகள் ஏ.டி.எம் அமைத்திடத் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகள் ஆகும். இந்திய தொழிற் நுட்பப் பயிற்சி மையம், சென்னை எனும் நிறுவனமும் என்லேக் எனும் நிறுவனமும் இணைந்து ஊராட்சிகளைத் தேர்வு செய்தது. ஏ.டி.எம் அமைப்பதற்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா முதன்மை வங்கியாகச் செயல்படுகிறது. என்லேக் நிறுவனம் ஆரம்பக் கணக்கெடுப்புகளை மேற்கொண்டது. இந்தியத் தொழில் நுட்பக் கழகம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் என்லேக் மற்றும் வோர்டெக்ஸ் ஆகிய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து ஏ.டி.எம் நிறுவுவதற்கு மின்னணு இசைவாக உள்ளதா என்று பரிசோதித்துக் கண்டறிந்தனர்.

ஏ.டி.எம் கருவியைக் கண்காணிக்கத் தகுதியான நபரை இந்திய தொழிற்நுட்ப நிறுவனம், என்லேக் மற்றும் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பாதிரிகுப்பம், பெரிய கங்கனாங்குப்பம், திருவந்திபுரம் மற்றும் பச்சையாங்குப்பம் ஊராட்சிகளில் கணினி பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி ஏ.டி.எம் அமைப்பிற்கு வலைதல இணைப்பு வசதி (இன்டர்நெட்) செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஏ.டி.எம் அமைப்பதற்கான அனுமதியை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வங்கியிடமிருந்து பெற்றுள்ளது.

தேசியத் தகவல் அலுவலரால் முற்றிலும் நவீனமயமாக்கப்பட்ட மென்பொருள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கல்வி அறிவற்ற மற்றும் படித்தறியாத தொழிலாளிகள் பயன்பெறும் வகையில் பையோ மேட்ரிக் சிஸ்டம் மூலம் மேற்படி ஏ.டி.எம் இயங்குகிறது. ஏ.டி.எம்மில் உள்ள தொடுதிரையில் தொழிலாளி தனது பெருவிரலைப் பதித்து இலகுவாக தனக்கு வேண்டிய தொகையை பெற்றுக் கொள்ளலாம். இந்திய தொழில்நுட்பக்கழகம் 26.2.2008 முதல் மேற்படி ஏ.டி.எம் இயக்குவது தொடர்பான பயிற்சியை அளித்து வருகிறது.

பெரிய கங்கனாங்குப்பம் ஊராட்சியில் பதிவு செய்துள்ள 690 தொழிலாளர்களில் பணிக்கு வருகை தரும் 420 தொழிலாளர்களுக்கு வங்கிக் கணக்கு துவக்கப்பட்டு, மேற்படி 420 தொழிலாளர்களுக்கும் ஏ.டி.எம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு வாராந்திர ஊதியம் வெளிப்படையாக வழங்கிடும் பொருட்டு ஏ.டி.எம் மூலம் இனி ஊதியப் பட்டுவாடா செய்யப்படும். ★

# நெல் உற்பத்தித் திறன் அதிகரிப்பு

## தமிழக அரசின் நடவடிக்கைகளால் குறுவை சாகுபடியில் தமிழகம் சாதனை

குறுவை சாகுபடிப் பருவத்தில் ஹெக்டேருக்கு 7.7 டன் சராசரி உற்பத்தித் திறன் கண்டு நெல் உற்பத்தியில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. சில விவசாயிகள் ஹெக்டேருக்கு 9 முதல் 12 டன் வரை அறுவடை செய்துள்ளனர்.

சாதாரணமாக மாநிலத்தில் சராசரி உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு ஆறு டன் அளவுக்கு இருக்கும். நீர்த் தேக்கங்களிலிருந்து குறித்த காலத்தில் நீர் விநியோகம், நெல் தீவிர சாகுபடி தொழில் நுட்ப முறையைக் கையாண்டது, உரங்கள் போதுமான அளவு கிடைத்தது போன்ற காரணங்களால் ஹெக்டேருக்கு ஏழு டன்னுக்கு மேல் உற்பத்தித் திறன் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக டெல்டா மாவட்டங்களில் ஹெக்டேருக்கு ஐந்து முதல் ஆறு டன் வரை காணப்படும் உற்பத்தித் திறன், இந்த முறை பல இடங்களில் எட்டு டன்னுக்கும் மேல் உள்ளது. திருச்சி மாவட்டம் மணச்சநல்லூரில் இரண்டு விவசாயிகள் ஒவ்வொருவரும் 10 மற்றும் 12 டன் அறுவடை செய்துள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் மற்றொரு விவசாயி ஹெக்டேருக்கு 11.24 டன் அறுவடை செய்துள்ளார். ஆனால் நாகை மாவட்டத்தில் குறைவான உற்பத்தித் திறனால் டெல்டா மாவட்டங்களில் ஹெக்டேருக்கு 5,756 டன்னாக சராசரி உற்பத்தித் திறன் இருந்தது. கடந்த ஆண்டு 12.46 இலட்சம் ஹெக்டேராக இருந்த குறுவை சாகுபடி நிலப்பரப்பு இந்த ஆண்டு 12.63 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்தது.

மாநிலத்தில் 75 சதவீத குறுவை அறுவடை முடிந்துவிட்டது என்றும், மீதமுள்ளது டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்துக்குள் அறுவடை செய்யப்பட்டுவிடும். கட்டுப்படுத்தப்பட்ட பாசனம் நல்ல உற்பத்தித் திறனை அளிக்கும் என்று விவசாயிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. இந்தப் பருவத்தில் இதற்குப் பலன் கிடைத்துள்ளது.

டெல்டா மாவட்டங்களில் நெல் உற்பத்தித் திறன் அதிகரிப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செய்யும் நெல் கொள்முதலில் பிரதிபலிக்கிறது. இந்த நிறுவனம் இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து 2.67 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளது. சுமார் 700 கொள்முதல் மையங்களில் தினசரி 1,500 டன் நெல் வருகிறது. இந்த அளவில் டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்துக்குள் இந்நிறுவனம் மூன்று இலட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்யும். ★



# வேளாண் தேவைகள் மற்றும் சேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கச் செய்யும் தமிழக அரசின் புதிய திட்டம்

வேளாண்மைப் பணியில் தேவைப்படும் அனைத்து இடுபொருட்கள் மற்றும் பிற தேவைகளும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யும் வகையில், வேளாண் ஆலோசனை மற்றும் சேவை மையத்தினை தமிழ்நாட்டில் 385 வட்டாரங்களிலும் அமைக்க அரசு ஆணை வழங்கியதன் மூலம், தமிழகத்தின் வேளாண்மையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.



ரூ. 33 கோடி செலவில் வேளாண் ஆலோசனை மையம், பண்ணை இயந்திர சேவை மையம் மற்றும் விதை சுத்திகரிப்பு மையம் அமைக்கும் மூன்று முக்கியத் திட்டங்களின் உதவிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, நுண்ணீர்ப் பாசன உபகரணங்கள் மற்றும் சான்று விதைகள் ஆகிய இடுபொருட்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்களாகவும் அவை செயல்படும்.

"வேளாண்மைத் தொழிலைப் பொருளாதார ரீதியாக, இலாபம் தரக்கூடிய வணிகத் தொழிலாக மேம்படுத்துவதே எங்கள் எண்ணம். தற்போது வேளாண்மையை அறிவியல் ரீதியாக மேற்கொண்டால், கிராமப்புற மக்களுக்குப் பெரிய அளவில் வேலைவாய்ப்பினை வேளாண்மைத் தொழிலினால் வழங்க முடியும்.



ஒருங்கிணைந்த வேளாண்மை வணிக மையங்களின் மூலம் அதிக அளவில் வருமானம் பெறமுடியும். மகாராஷ்டிராவில் இதுபோன்று இயங்கிவரும் மையங்கள் ஒவ்வொன்றும் 100 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகின்றது.

வேளாண் ஆலோசனை மையங்கள் அமைக்க வேளாண்மைப் பட்டதாரிகள் மட்டுமே தகுதியானவர்கள் என நிர்ணயிக்கப் பட்ட விதி தளர்த்தப்பட்டு, இம்மையங் களுக்கான உதவிகள் மேலும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. அரசு தற்போது நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி, வேளாண்மை அல்லது அதன் தொடர்பான கல்வியில் பட்டம் பெற்ற மற்றும் பட்டயப் படிப்புத் தகுதி உள்ளவர்கள், இவ்வேளாண் வணிக மையங்களை அமைக்க முன்வரலாம். மேலும், ஒய்வுபெற்ற விஞ்ஞானிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர் கள் மற்றும் வேளாண்மைத்துறை தொழில்நுட்ப அலுவலர்களும் இம்மையங்களைத் தொடங்கத் தகுதியானவர்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களும் இம்மையங்களைத் தொடங்கலாம்.

திட்ட வரைமுறைகளின்படி, வேளாண் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டபின், அம்மையத்தை அமைத்தவரின் விண்ணப் பத்தின் அடிப்படையில் அரசு மானியமாக ரூ.3 இலட்சம் வழங்குகிறது. டிராக்டர், பவர் டில்லர், லேசர் மூலம் நிலம் சமப்படுத்தும் இயந்திரம், உழிக்கலப்பை, விதை விதைக்கும் இயந்திரம், அனைத்துப் பயிர்களுக்கும் பயன்படுத்தும் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற பண்ணை இயந்திரங்களை வாங்குவதற்கு குறைந்தபட்சம் ரூ. 16 இலட்சம் முதலீடு செய்தவர்களுக்கு அரசு மானியமாக ரூ.4 இலட்சம் வழங்கும். மேலும் விதை சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் விதை நேர்த்தி மையம் அமைக்க குறைந்தபட்சம் ரூ.21.50 இலட்சம் முதலீடு செய்தால், அரசு மானியமாக ரூ. 7.5 இலட்சம் வழங்கும்.

இம் மூன்று மையங்களையும் அமைக்கும் தனி நபருக்கு அல்லது முகமைக்கு நுண்ணீர்ப் பாசனக் கருவிகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், சான்று விதைகள் போன்ற இடுபொருட்களையும் விற்பனை செய்யத் தகுதியானவர்களாகக் கருதி அனைத்து உரிமங்களும் வழங்கப்படும். இடுபொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இத்தகைய வேளாண் வணிக மையங்களை தங்கள் இடுபொருட்களை விற்பனை செய்யும் நிலையங்களாக நியமிக்க அறிவுறுத்தப் படுவார்கள். மண் பரிசோதனை முதல், கதிரடிக்கும் இயந்திரம் வாடகைக்கு பெறுதல்வரை, விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் இவ்வேளாண் வணிக மையங்களில் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்வதே தமிழக அரசின் நோக்கம். ★

**விலை**

ஏழை மக்களிடம் தான் பெரும்பாலான வியாபாரம் நடக்கிறது. அப்படி வியாபாரம் நடக்க வேண்டுமானால், அவர்களுடைய கைகளுக்கு எட்டும் விதத்தில் விலை இருக்கவேண்டும். அவர்களது கைகளுக்கு எட்டுகிற விலை என்பது என்ன? அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற முறையில் விலை இருக்க வேண்டும்.

**– அறிஞர் அண்ணா**

# அனைத்துத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு அளித்திட அரசு தீவிர நடவடிக்கை

தமிழ்நாட்டிலுள்ள மனிதக்கழிவுகளை அள்ளும் பணியில் ஈடுபட்டுள்ள 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை அந்தத் தொழிலிலிருந்து மீட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் எஞ்சியிருக்கும் அடையாளம் காணப்பட்ட இத்துறைத் துப்புரவுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்க மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர்களது மறுவாழ்வுக்கான மாநில சட்டக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டு, முதல் கணக்கெடுப்பு நடைபெற்றபோது மாநிலத்தில் இத்தகையத் துப்புரவுத் தொழிலாளர்கள் (மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள்) 35,561 பேர் இருப்பதாக அடையாளம் காணப்பட்டது என்று அரசு தலைமைச் செயலாளர் திரு கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் புள்ளி விவரம் அளிக்கப்பட்டது.

இவர்களில் 2007–2008ஆம் ஆண்டு இறுதி வரை 30,688 துப்புரவுத் தொழிலாளர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. 2008–2009ஆம் ஆண்டில் மேலும் இரண்டாயிரம் பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும்.

1993ஆம் ஆண்டு புள்ளி விவரம் காலாவதியானது என்பதாலும், துப்புரவுத் தொழிலாளர் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கான மீட்பு மற்றும் மறுவாழ்வு தேசியத் திட்டத்தின்படி மேலும் சரியான புள்ளி விவரம் தேவை என்பதாலும், துப்புரவுத் தொழிலாளர்களை அடையாளம் காண இந்த ஆண்டு ஆரம்பத்தில் விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக 22,811 துப்புரவுத் தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் 11,896 பேர் கைகளால் மனிதக் கழிவுகளை அள்ளும் துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு தகுதி பெற்றவர்களாக இருந்தனர். எஞ்சியவர்களில், 5,963 பேர் ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வருகின்றனர். 4,952 பேர் 17 வயதுக்கும் குறைவானவர்கள்.

அவர்களது மறுவாழ்வுக்கான ஒருங்கிணைப்பு அமைப்பான தாட்கோ நிறுவனம், 2009ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் அடையாளம் காணப்பட்ட 11,895 துப்புரவுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளது. அவர்களது திறமைகளை உயர்த்தி தொழில் நடத்த வங்கிக் கடன் கொடுக்கப்படும். இந்தக் கடன் மத்திய அரசின் திட்டமான கைமூலம் மனிதக் கழிவுகளை அள்ளும் துப்புரவுத் தொழிலாளர் மறுவாழ்வுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டமாகும்.

தகுதியான 11,896 பேரில் தாட்கோ நிறுவனம் ஏற்கெனவே பயனாளிகளின் வாரிசுகளுக்கு 2,623 கடன் விண்ணப்பங்கள் அனுப்ப உதவியுள்ளது. அவற்றைச் சரிபார்த்து வங்கிகள் 627 பேருக்கு கடன்களை வழங்கியுள்ளன.

அதுபோலவே, தேசியத் துப்புரவுத் தொழிலாளர் நிதி மற்றும் அபிவிருத்திக் கடனும் அங்கீகரித்துள்ள பயிற்சி நிறுவனங்களில் 5,183 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

❖ ❖ ❖

## அண்ணாவின் பொன்மொழி



## அறிவாயுதம் வேண்டும்

தயை, தர்மம், அன்பு, நேசம் முதலிய பண்புகள் நாட்டு மக்களிடம் வளரவேண்டும். அதுதான் அவர்கள் நாகரிக வாழ்வு வாழ்கிறார்கள் என்பதற்கு அடையாளம் என்றெல்லாம் அறிஞர்கள் கூறக் கேட்டு அகமகிழ்கிறோம். விவேகானந்தரின் உபதேசத்தைப் புகழ்கிறோம். வடலூர் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை வாழ்த்துகிறோம். ராஜாராம் மோகன்ராய், தயானந்தர் ஆகியோருக்கு விழா நடத்துகிறோம். நம்முடைய நாட்களிலேயே அரிஜன் நிதிக்குப் பணம் கூடத் தருகிறோம். ஆனால் தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டும் வாரீர் என்று அழைத்தால், தர்மம், தயை, அன்பு, நட்பு முதலிய குணங்களெல்லாம் ஓட்டுக்குள் மறைந்து கொள்ளும் ஆமைகளாகிவிடுகின்றன. எங்கிருந்தோ கிளம்பி வைதிகம் என்னும் நாகம் சீறுகிறது. அதை அடக்க அறிவாயுதம் வேண்டும்.

# வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் இரத்த சோகை தடுப்புத் திட்டம்



தமிழ்நாட்டில் வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு இரத்த சோகை என்பது குறிப்பிடத்தகுந்த நலவாழ்வுப் பிரச்சனையாக உள்ளது. கிராம மக்கள் பெரும்பாலும் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சமுதாயச் சூழல் மற்றும் பொருளாதார ரீதியாக கர்ப்பிணிகளிடம் ஏற்படும் இரத்த சோகை நோயைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு வகையான முறைகள் கையாளப்பட வேண்டும்.

தாய்மார்கள், முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கர்ப்பிணிகள் பிரசவிக்கும்போது, இரத்தசோகையின் காரணமாக மருத்துவ ரீதியான பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. இதனால் பிரசவத்தின்போது தாய்க்கும், குழந்தைக்கும் ஆபத்தை உருவாக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. சில நேரங்களில் பிரசவத்தின்போது தாயும், குழந்தையும் இறந்துவிடக்கூடிய நிலைமைகூட இதனால் ஏற்பட்டுவிடுகிறது.


2003–2004 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மாவட்ட அளவிலான குடும்ப கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் கர்ப்பகால இரத்த சோகை நோய் அதிகமாக உள்ளது எனவும் கர்ப்பிணிகளில் 94.1 சதவீதம் பேர் கர்ப்ப கால இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 64.1 சதவீதம் பேர் மிதமான இரத்த சோகையாலும், 28.1 சதவீதம் பேர் சுமாரான இரத்த சோகையாலும் 1.9 சதவீதம் பேர் தீவிரமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை நிவர்த்தி செய்ய கர்ப்பிணிகள் மற்றும் வளரிளம் பெண்களின் எச்.பி. ரத்த அளவை உயர்த்துவதாக தமிழக அரசு உறுதியளித்துள்ளது.

தீவிரக் கண்காணிப்பு மற்றும் சிறப்புத் திட்டமாக வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் இரத்த சோகை தடுப்புத் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு ஆய்வு ரீதியாக தானம் அறக்கட்டளை (DHANAM FOUNDATION) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 2 ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் திண்டுக்கல் மாவட்டத்தில் சாணார்பட்டி, மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடை மருதூர், தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் ஆகிய ஒன்றியங்களைத் தத்தெடுத்துக்கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆவன செய்யப் பட்டுள்ளது. பின்வரும் முறைகளில் இத்திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

- ✶ இரத்த சோகையின் ஆதார கணக்கெடுப்புப் பணி
- ✶ கிராம நல வாழ்வு மற்றும் துப்புரவுக் குழுக்கள் மூலமாக மக்களிடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவது.
- ✶ தகவல், கல்வி மற்றும் தொடர்பு
- ✶ செயல்பாடுகளின் மதிப்பீடு மற்றும் விரிவாக்கம்

மேலும் இதன் மூலம் வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களின் இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் தற்போதைய அளவை விட 20 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட பணிக்காக தானம் அறக்கட்டளைக்கு (DHANAM FOUNDATION) ரூ.82.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ✶

# தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் தமிழக அரசின் புதிய ஆன்லைன் பதிவுத் திட்டம்



**"தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் ஆன்லைன் வழியாக தொழிலினைப் பதிவு செய்யும் தமிழக அரசின் திட்டம் எளிமையாக இருப்பதோடு, வீண் அலைச்சலைக் குறைத்து தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கிறது"**

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பத்துலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்காகவே தமிழகத்தில் முதன் முறையாக ஒரு புதிய தொழில் கொள்கையை 22.2.2008 அன்று வெளியிட்டார்கள். இந்தக் கொள்கையின்படி தமிழகத்தில் புதிய தொழில் தொடங்க விரும்பும் தொழில் முனைவோர்கள் எந்தவித தயக்கமும் இல்லாமல் ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபடும் வகையில், மாவட்ட தொழில் மையங்களுக்கு நேரில் செல்லாமலேயே, தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே இணையத்தின் மூலம் தொழில் தொடங்குவதைப் பதிவு செய்யும் இணைய தள திட்டத்தை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் 08.08.2008 அன்று தூத்துக்குடியில் தொடங்கி வைத்தார்.

இதன்படி தமிழ்நாட்டில் 9.10.2008 வரை 3,562 தொழில் முனைவோர்கள் தங்களது தொழிலை ஆன்லைன் (Online Registration) முறையில் இணைய தளத்தில் ஆர்வத்துடன் பதிவு செய்துள்ளனர். மேலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இந்தப் பதிவு தொடர்கிறது. இணைய தளம் மூலம் புதிய தொழிலினைப் பதிவு செய்த தொழில் முனைவோர்கள் சிலரின் அனுபவங்கள், தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் மூலம் சேகரிக்கப்பட்டது.

**இதன் விவரம் பின்வருமாறு:**

சென்னை நீலாங்கரை, ஸ்ரீ கபாலீஸ்வரர் நகர், தெற்கு முதன்மைச் சாலையைச் சார்ந்த 45 வயதுடைய திரு. என்.எஸ். சித்தார்த்தன் என்பவர் B.A., மற்றும் D.A.E., படித்தவர். தனியார் நிறுவனங்களிலும், பின்னர் துபாய் நாட்டின் கப்பல் கட்டும் நிறுவனத்திலும் ஏற்கெனவே பணியாற்றிய இவர், தமிழகத்தில் சிறு தொழிலுக்கென தனிக் கொள்கை ஏற்படுத்தப்பட்டு செயல்படுவதைப் பத்திரிகை வாயிலாக அறிந்தார். இவர் சென்னையில் இருந்தாலும்

தனது தொழிலை நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி ஒன்றியத்திலுள்ள புதுப்பட்டினம், தர்காஸ் பகுதியில் தொடங்கவே விரும்பினார். இவர் சிறிய படகு / கப்பல் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் சரக்கு கையாளுதல் என, தான் ஏற்கெனவே பணிபுரிந்து அனுபவம் பெற்ற துறையில் ஈடுபட விரும்பி அவரது நண்பர்களிடத்தில் ஆலோசனை செய்தார். இந்நிலையில், இருந்த இடத்திலிருந்தே ஆன்லைன் மூலம் பதிவு செய்யும் வசதியை அறிந்த இவர், சென்னையில் இருந்தபடியே சீர்காழியில் 'Hindusthan Marine Engineering Works' என்ற பெயரில் நாகப்பட்டினம் மாவட்டத் தொழில் மையத்திற்கு இணைய தளம் மூலம் பதிவு செய்தார். இது குறித்து, அவரிடம் கருத்துக் கேட்டபோது, 6.10.2008 அன்று ஆன்லைன் மூலம் தனது தொழிலைப் பதிவு செய்துள்ள தாகவும், புதிய படகு கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் தொழிலினை ரூ. 6 கோடி மதிப்பீட்டில் தொடங்கு வதற்காகப் புதுப்பட்டினத்தில் 7.31 ஏக்கர் பட்டா நிலத்தை ஒதுக்கியிருப்பதாகவும், இத்தொழில் மூலம் 150 முதல் 200 பேருக்கு நேரடியாகவும், மறை முகமாகவும் வேலை வாய்ப்பு வழங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார். ஏற்கெனவே சென்னை, விசாகப்பட்டினம், கிருஷ்ணப்பட்டினம், கோவா மற்றும் துபாய் நாட்டில் பணியாற்றிய அனுபவம் தனக்கு முன்னேற் றத்தைக் கொடுக்கும் என்றும், தான் சென்னையில் இருந்தாலும் தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் ஆன்லைன் வழியாக தொழிலினைப் பதிவு செய்யும் தமிழக அரசின் திட்டம் எளிமையாக இருப்பதோடு, வீண் அலைச்சலைக் குறைத்து தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கிறது எனவும் தெரிவித்தார்.

வேதாரண்யம் வட்டம், தெற்கு மருதூரைச் சார்ந்த காகாதேவன் காடு கிராமத்தைச் சேர்ந்தவர் திருமதி. டி. பாமா. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவர், சிங்கன்புத்தகை என்ற பகுதியில் 'Thirumalai Coir Industries' என்ற பெயரில் தென்னை மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழிலைத் தொடங்குவதற்காக மாவட்டத் தொழில் மையத்திற்கு இணைய தளம் மூலம் ஆன்லைனில் பதிவு செய்தார். ரூ.1.8 இலட்சம் மதிப்பில் தொடங்கவுள்ள கயிறு திரித்தல் தொழிலில் குறைந்தது பத்து நபர்களுக்கு வேலை வழங்கவுள்ள தாகவும், ஆண்டுக்கு 10,000 டன் கயிறு உற்பத்தி செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். தொழில் தொடங்க ஆன்லைனில் பதிவு செய்த பின்னர் உடனடியாகத் தொழில் தொடங்க உரிய சான்றிதழ் வழங்கப்பட்டதையும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டார்.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அழகேசன் நகரைச் சேர்ந்த திரு. மன்னார் கிருஷ்ணன் என்பவரின் மனைவி திருமதி. மகாலஷ்மி. எட்டாம் வகுப்பு வரை படித்த 42 வயதான இவர், உத்திரமேரூர் வட்டம், கலியம்பூண்டி கிராமத்தில் 'Sri Mahalakshmi Industries' என்ற பெயரில் எரிசாம்பலை (Fly Ash) கொண்டு செங்கல், ஹாலோ பிளாக், சிமெண்ட் கான்கிரிட் ப்ளாக் போன்றவை தயாரிக்க காஞ்சிபுரம் மாவட்டத் தொழில் மையத்திற்கு ஆன்லைன் மூலம் பதிவு செய்து, தொடக்கப் பணிகளில் ஆர்வமாக ஈடுபட்டுள்ளார். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் இவர் கட்டுமானப் பொருட்கள் தயாரிக்க உள்ளதாகவும், செங்கல் ஒன்றின் விலை ரூ.3 முதல் 4 வரை விற்கும் இன்றைய நிலையில், தான் உற்பத்தி செய்யும் செங்கல் ரூ.1 முதல் ரூ.1.50 வரை விற்க உள்ளதாகவும், நான்கு ஏக்கர் நிலத்தை தற்போது இந்தத் தொழிலுக்குப் பயன்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், மூலப்பொருட்களான எரிசாம்பல், மணல், சுண்ணாம்புக்கல் போன்றவை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, தனது உற்பத்திப் பொருளின் தரமும், நிறுவனம் அமையவுள்ள இடத்தின் சாலை வசதியும் விற்பனைக்குக் கூடுதல் வாய்ப்புகளாக அமையும் என்றும், தொழில் பதிவினை செய்ய மாவட்டத் தொழில் மையங்களுக்கு நேரில் சென்று காலத்தை கடத்துவதைவிட இணைய தளத்தின் மூலம் விரைவாகப் பெற முடிகிறது எனவும் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, இலுப்பூர் கிராமத்தில் 'Surya Mineral Water' என்ற தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர் தயாரித்து வழங்கும் நிறுவனத்தை பங்குதாரர் முறையில் திரு. சலோனா மற்றும் திரு. எஸ். பழனி ஆகியோர் கூட்டாகத் தொடங்க விரும்பினார்கள். தாங்கள் தொடங்க விரும்பிய தொழிலை இணைய தளம் வழியாக திருவள்ளூர் மாவட்ட தொழில் மையத்தில் பதிவு செய்துள்ளனர். இந்த நிறுவனத்தை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 2,000 சதுர அடியில் தொடங்க உள்ளதாகவும், தேவையான இயந்திரங்களைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சுமார் 15 முதல் 20 நபர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் வகையில் செயல்படுவதாகவும் தெரிவித்தனர். பணியாளர் செலவினம் போக, மாதத்திற்கு ரூ.50,000 வருமானம் பெற இயலும் என்றும், சந்தைப் படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும், அலைச்சல் இல்லாமல் ஆன்லைன் மூலம் உடனடியாகப் புதிய தொழிலினைப் பதிவு செய்தது, எளிமையான நடைமுறையாகவும், வியப்பாகவும் இருப்பதாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் புதிய தொழில் முனைவோர்கள் ஆன்லைனில் பதிவு செய்வது அதிகரித்து வருகிறது. சேலம், ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி, மதுரை, வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும், புதிய தொழில் முனைவோர் ஆன்லைனில் தொழிலினைப் பதிவு செய்யும் விழிப்புணர்வு கூடியுள்ளது. இதர மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மைய அலுவலகங்கள் மூலம் தொடர் நடவடிக்கை எடுக்க மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்களை, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு. கோ. சந்தானம், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். ★

## வாடிக்கையாளர்களைக் கவரும்

# கோ-ஆப்டெக்ஸ்

## நடமாடும் விற்பனை நிலையம்





**கோ**–ஆப்டெக்ஸின் தரமான எழில்மிகு கைத்தறித் துணிகள் மற்றும் ஆடைகள், அனைத்துத் தரப்பினரையும் சென்றடைய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இல்லாத பகுதியில் வாழும் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் நடமாடும் கோ– ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு விற்பனை நிலையத்தில் உள்ள அனைத்து விதமான துணிகளும், சேலைகளும், ஆயத்த ஆடைகளும் இந்த நடமாடும் விற்பனை நிலையத்தில் இடம் பெறும். முதல் கட்டமாக சென்னை நகரில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள் அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மென்பொருள் பூங்காக்கள், குடியிருப்புகள், கண்காட்சிகள், அர்சுப் பொருட் காட்சிகள் ஆகிய இடங்களுக்குச் சென்று விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொருட்களுமே வாடிக்கையாளர் களை சென்றடையும் தத்துவம் பெரிதாகப் போற்றப்படும் இந்நாளில் கோ–ஆப்டெக்ஸ் அந்த தத்துவத்தைப் பயன்படுத்தி தங்களது விற்பனையைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் நடமாடும் கோ–ஆப்டெக்ஸ் ஒரு விளம்பரமாகவும் பயன்படுகிறது. கைத்தறியின் பெருமையைப் பரைசாற்ற இந்த நடமாடும் கோ–ஆப்டெக்ஸ் ஒரு முக்கியமான ஊடகமாக இருக்கிறது.

ஒரு இடத்திற்குச் சென்றுவருவது என்பது, கடைகளுக்குச் சென்று கூட்ட நெரிசலில் பொருட்களைப் பார்த்து வாங்குவது என்பது இந்நாளில் யாவரும் விரும்பாத ஒன்று. எனவே வாடிக்கையாளரின் நாடியைப் புரிந்து கொண்டு அவர்களுக்குச் சேவை செய்யும் மனப்பாங்குடன் செயல்படும் இந்த நடமாடும் கோ–ஆப்டெக்ஸால் ஏழை நெசவாளரும் பயன்பெறுவர் என்பது உறுதி. எனவே வாடிக்கையாளர், கோ–ஆப்டெக்ஸ் (விற்பனையாளர்), நெசவாளர் (உற்பத்தியாளர்) ஆகிய மூவரும் பயன்பெறும் வண்ணம் இந்த நடமாடும் கோ–ஆப்டெக்ஸ் இயங்கும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கோ–ஆப்டெக்ஸ் நடமாடும் விற்பனை நிலையத்தை 14.10.2008 அன்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சென்னை, கோ–ஆப்டெக்ஸ் வளாக மையத்தில் தொடங்கி வைத்தார். □

# அறியாமை இருள் அகற்றி பொது அறிவை வளர்க்கும் இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்



ஏழை எளிய மக்கள் நாட்டு நடப்புகளை உடனுக்குடன் அறிந்து பொது அறிவினைப் பெற்று பயன்பெறும் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், தமிழகம் முழுவதும் சிறப்பாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து 2006–2007ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தபடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.09.2006 அன்று அண்ணா பிறந்த பொன்னாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் வாழும் பயனாளிகளுக்கு முதற்கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 16.09.2006 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி அவர்கள் முதற்கட்டமாக கலிங்கராஜபுரம், செண்பகராமன்புதூர் ஆகிய பகுதிகளிலுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் வாழும் 196 பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் திட்ட செயலாக்கம் குறித்து மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன் அவர்கள் தெரிவிக்கையில், “மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவரும் சிறப்புத்திட்டங்களில் ஒன்றான இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் முதற்கட்டமாக பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் வாழும் 196 பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக (2007–ஆம் ஆண்டில்) 75 ஆயிரத்து 710 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டமாக நடப்பு ஆண்டில் 1 இலட்சத்து

1,500 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 75 ஆயிரத்து 349 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 51 ஆயிரத்து 255 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தில் 5,116 பயனாளிகளின் இல்லங்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது" என்றார்.

நடப்பாண்டில் இத்திட்ட செயல்பாடு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பி. ஜோதி நிர்மலா இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு இல்லா பயனாளிகளின் இல்லங்களுக்கு உடனடியாக இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவது மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டியுடன் மின்னிணைப்பும் பெற்ற தோவாளை ஊராட்சி ஒன்றியம் தெள்ளாந்தி ஊராட்சி தெள்ளாந்திகுளம் மறுகால் பகுதியைச் சார்ந்த பயனாளி திரு. ஞானசிகாமணி (வயது–84) மற்றும் அவரது மனைவி திருமதி. ஞானபிரகாசி (வயது–80) ஆகியோர் கூறுகையில்,

"எனக்கு 3 பெண் குழந்தைகளும், 3 ஆண் குழந்தைகளும் உள்ளனர். 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் எங்களுக்கு இலவசமாக 50 செண்ட் நிலம் கிடைத்தது. நிலத்தில் விவசாயம் செய்து கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலம்தான் எனது 6 குழந்தைகளையும் நல்ல முறையில் வளர்க்க முடிந்தது. 1989ஆம் ஆண்டு மீண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் நான் பெற்ற நிலத்தில் வீடுகட்டுவதற்கான அனுமதி எனக்குக் கிடைத்தது. எனது வீட்டிற்கு 37 வருடங்களாக மின் இணைப்பு கிடையாது. தற்போது மீண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் 2007ஆம் ஆண்டு இலவச டி.வியுடன் எனது வீட்டிற்கு 37 வருடங்களாக கிடைக்காத மின் இணைப்பும் கிடைத்தது. எனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க 19 மின்கம்பங்கள் அமைத்து மின்சாரம் அளித்தது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. வயதான ஓய்வு எடுக்கும் காலத்தில் எங்களுக்கு மின்வசதியோடு டி.வி. வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்" எனக்கூறினார்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியுடன் மின்னிணைப்பும் பெற்ற தெள்ளாந்தி ஊராட்சி காமராஜர் நகரைச் சார்ந்த பயனாளி திரு. தர்மராஜ் (வயது–35) மற்றும் அவரது மனைவி திருமதி. கிறிஸ்டிபாய் (வயது–31) ஆகியோர் கூறும்போது,

"காமராஜர் நகரில் 19 குடும்பங்கள் கடந்த 7 வருடமாக குடிசைகளில் வசித்துவருகிறோம். எங்கள் பகுதிக்கு மின் இணைப்பு கிடையாது. இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கிடைத்த பிறகுதான் எங்கள் பகுதிக்கு மின்சார வசதியும் கிடைத்தது. இதன் மூலம் நாட்டு நடப்புகளையும், உலக நிகழ்வுகளையும் நாங்கள் அறிந்து கொள்கின்றோம். மேலும் இந்தப் பகுதியிலுள்ள 19 குடிசை வீடுகளையும் காங்கீரிட் வீடுகளாக மாற்ற தலா ரூ.55 ஆயிரம் வீதம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் எங்களுக்கு கிடைத்தது மேலும் மகிழ்ச்சியளிக்கிறது. எங்களது குழந்தைகளுக்கும், குடும்பத்தாருக்கும் மாலைவேளைகளில் நல்ல பொழுதுபோக்கிற்கு டி.வி. பயன்படுகிறது. பகல் பொழுதில் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டு வரும் எனக்கு வேலைசெய்வதே தெரியவில்லை. ரேசன் அரிசி கிலோ 2 ரூபாய்க்கு தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியுடன் மின்னிணைப்பும் தந்துள்ளார். எங்கள் கிராமத்திற்கே வெளிச்சம் போட்டுத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், அரசிற்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எங்களது கிராமத்தின் இருளை அகற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக நீடுழி வாழவேண்டும்" எனக்கூறினார்கள்.

**– த. ஹரிராம்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

# தாய் - சேய் நலம் காக்கும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை



பிறந்த ஓர் ஆண்டுக்குள் உயிரிழக்கும் குழந்தைகள் விகிதத்தினை (Infant Mortality Rate) குறைப்பதில் தமிழகம், இந்தியாவிலேயே 3 ஆவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் 35 மட்டுமே. எடை குறைந்த பச்சிளம் குழந்தைகள் (Low Birth Weight) இறக்கும் விகிதத்தில் தமிழ்நாட்டில் 12-15% சதவிகிதம் மட்டுமே, மற்ற இந்திய மாநிலங்களில் எடை குறைந்த பச்சிளங்குழந்தைகள் பிறப்பு விகிதம் 30% க்கும் மேல் உள்ளது.

சென்னையில் "பேபி ஹாஸ்பிட்டல்" என்று பிரபலமாக அழைக்கப்படும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், 1968ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாளன்று தொடங்கப்பட்டது. அங்கு நாள்தோறும் சுமார் 2,200 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். 537 படுக்கை வசதிகள் கொண்ட இம் மருத்துவமனையில் தினமும் தோராயமாக 630 உள்நோயாளிகள் பயன்பெற்று வருகின்றனர். புறநோயாளிகள் பிரிவில் அனுபவமிக்க குழந்தை மருத்துவர்கள் தலைமையில் ஒரு குழு எந்நேரமும் பணிபுரிந்து வருகிறது. புறநோயாளிகள் பிரிவில் குழந்தைகள் எந்த நோய்க்காக கொண்டுவரப்பட்டாலும், அதற்கான மருத்துவ கவனிப்புடன் பெற்றோர்களுக்கு சத்துணவு, குழந்தை வளர்ப்பு, தடுப்பு ஊசிகள், சுகாதாரம் ஆகிய அனைத்து நல்வாழ்வு முறைகளைப் பற்றியும் விழிப்புணர்வுச் செய்திகள் அளிக்கப்படுகின்றன.

உள்நோயாளிகளைக் கவனிக்க 24 மணி நேரமும் தகுதிபெற்ற குழந்தை மருத்துவர்கள் மருத்துவ மனையிலேயே தங்கி பணிபுரிகிறார்கள். புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளுக்கான எல்லாவித மருத்துவ வசதிகளும் இலவசமாக அரசினால் வழங்கப்படுகின்றன.

பலவிதமான சமுதாயக் குழந்தை நல கவனிப்பிலும் அரசு குழந்தை நல மருத்துவமனையின் மருத்துவர்கள் ஈடுபடுத்தப் படுகிறார்கள். புதியதாக மேம்படுத்தப் பட்டுள்ள மேடவாக்கம், நந்திவரம் போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தங்கியிருந்து பிறந்த குழந்தை பராமரிப்பு, குழந்தைகளின் தொடர் பராமரிப்பு ஆகியவற்றை கவனிக்கிறார்கள்.

இங்கு உள்ள குழந்தைகள் இருதய நோய் மற்றும் இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவில் பச்சிளங் குழந்தைகள் முதல் அனைத்து வயது குழந்தைகளுக்கும் அறுவைச் சிகிச்சை செய்ய வல்ல திறமையான கைதேர்ந்த மருத்துவர்கள் உள்ளனர் என்பது சிறப்பு. இதில் மயக்கவியல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இளஞ்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின்படி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இடையிலான ஒப்பந்தப்படி மிகவும் நுட்பமான அறுவைச் சிகிச்சைகளுக்கு குழந்தைகள் இங்கு தேர்வு செய்யப்பட்டு தனியார் மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

நரம்பியல் அறுவைச் சிகிச்சை தவிர மற்ற அனைத்து அறுவைச் சிகிச்சைகளும் இங்கு கைதேர்ந்த அறுவைச் சிகிச்சை மருத்துவர்களால் 24 மணி நேரமும் செய்யப் படுகின்றன. இதன் வெற்றிக்கு மயக்கவியல் துறை மருத்துவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. பச்சிளங்குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை புரியும் ஒரே மருத்துவமனை என்ற பெருமையும் இம் மருத்துவமனைக்கு உண்டு. செயற்கை சுவாசக் கருவி மற்றும் இதர தீவிர சிகிச்சை சாதனங்களைப் பயன்படுத்தி தீவிர சிகிச்சைப் பிரிவில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் 24 மணி நேரமும் சிறப்பான சிகிச்சையளித்து வருகின்றனர். தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் நரம்பியல் துறைக்கு, அண்டை மாநிலங்களிலிருந்தும் குழந்தைகள் சிறப்பு ஆலோசனை பெறுவதற்காக வருகின்றனர் என்பது, இம்மருத்துவமனையின் பாராட்டத்தக்க பணிக்குச் சான்றாகும். இங்கு குழந்தைகள் வழிகாட்டு மையமும், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள், உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகள், பள்ளியில் செயல்திறன் குன்றிய குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காகவும் செயல்பட்டு வருகின்றது.

பச்சிளங்குழந்தைகள் குழந்தைகள் பிரிவு பல நிலைகளிலும் முன்னோடியாகத் திகழ்கின்றது. மிகவும் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பச்சிளங் குழந்தைகளுக்கு உட்பிரிவு மற்றும் வெளிப் பிரிவுகளின் மூலம் சிறப்பு சிகிச்சைகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன. இங்குள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இந்தத் துறையில் பயிற்சிபெற்றவர்கள். இங்கு மிகவும் எடைகுறைவான மற்றும் குறைமாத குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கிருந்து வீட்டிற்கு அனுப்பப்படும் குழந்தைகள் தொடர்ந்து ஒரு வயது வரை குழந்தைகள் நல மையத்தில் கவனிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களது வளர்ச்சி குழந்தைகள் வளர்ச்சி மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. குறைமாத குழந்தைகள் மற்றும் மூச்சுத்திணறல் உள்ள குழந்தைகளுக்கு வெண்டிலேட்டர் கருவி மூலம் மூச்சு விடும்படி செய்யப்படுகிறது. இதற்கான ஒரு நாள் செலவு ரூ. 7,000 முதல் ரூ.10,000 வரை ஆகும். 10 முதல் 15 நாட்கள் வரை இந்த சிகிச்சையைத் தொடர்ந்து மூச்சுதிணறலால் பாதிக்கப்படும் பச்சிளம் குழந்தைகளுக்கு இலவசமாக தமிழக அரசு அளிக்கிறது. இரைப்பை குடல் கல்லீரல் நோய் சிகிச்சைப் பிரிவில் உள்நோக்கிக் கருவிகளின் உதவியோடு நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நுரையீரல் மற்றும் காது– மூக்கு–தொண்டை பிரிவிலும் சிறப்பு உள்நோக்கி கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. பட்டாணி, கடலை, பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை குழந்தைகள் வாயில் வைத்து விளையாடும்பொழுது தற்செயலாக மூச்சுக்குழாயில் சென்று சிக்கி மூச்சுத்திணறல் ஏற்படும். காது, மூக்கு, தொண்டை பிரிவில் உள்நோக்கி கருவிகள் மூலம் அப்பொருட்களை வெளியில் எடுத்து குழந்தைகளை ஆபத்திலிருந்து காப்பாற்றுகின்றனர். இச்சேவை 24 மணி நேரமும் அளிக்கப்படுகிறது.

* * *

# கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்
# பருத்தி பட்டின் கோடி அழகு



**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இன்பமயமாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கண்கவர் பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

வெ.ஆ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008

R.N.I. No.21446/70-Regn.No-TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

தமிழரசு

